T03005
R001G06

3005

காதற்களி

[இலக்கியச் சிறுகதைகள்]

ஆசிரியர் :

தி. சி. குழந்தைவேலன்

முன்னுரை :

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்

இராவ்சாகிப்

எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் B. A., B. L.

மணி மன்றம்

தமிழ் நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

First Edition, November, 1945.

All Rights Reserved

Price Rs. 1-4-0

சென்னைப் பல்கலைக் கழகத்

தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர்

இராவ் சாகிப்

எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் B. A., B. L.

முன்னுரை

ஒவ்வொரு நாட்டிலும் காதற் செய்யுட்கள் மிகப் பூர்வீக காலந்தொட்டே காணப்படுகின்றன. ஆனால், அவை இலக்கண நெறிக்கு உட்பட்டனவாகத் தோன்றவில்லை. பண்டைத் தமிழிலக்கியங்களிலும் ஆரம்ப காலத்தில் இவ்வாறுதான் அமைந்திருத்தல் வேண்டுமென நாம் கருதலாம்.

இலக்கண நெறிகளும் மரபுகளும் பிற்பட்டுத் தோன்றியனவாகத்தான் இருத்தல் கூடும். கவிஞர்களின் இதயத்தினின்றும் தோன்றி நியமங்களுக்கு அடிமையாகாத சுதந்திரத்தோடு வெளிப்பட்டு நெடுங்காலம் அறிஞர்களால் போற்றப்பட்டு, பின்னர், சிற்சில மரபுகளுக்கு உட்பட்டனவாகி அமைதியுடன் பண்பட்டொழுகிய செய்யுட்களின் தொகுதியென்றே சங்க இலக்கியங்களை நாம் கொள்ளுதல் வேண்டும்.

அவற்றை அகம், புறம் என இருபாற்படுத்து வைத்தனர். அகத்தைச்சார்ந்த நூல்களில் ஒன்று **ஐங்குறுநூறு.** இச்சிறு நூலிலிருந்துதான் காதற்கனிகளைப் பொறுக்கி ஆசிரியர் நமக்குத் தந்திருக்கின்றார்.

சங்க இலக்கியங்களை இனிய பூஞ்சோலை என்று சொல்லலாம். அதனுள்ளே புகுந்து செல்பவர்களுக்கு ஐம்பொறிகளும் நுகர்ந்து இன்புறத் தரும் பொருள்கள் பல உள்ளன. கண்ணுக்கினிய பன்னிறக் காட்சிகளும் செவிக்கினிய இன்னிசை வளங்களும் உண்ணுதற்கினிய நறுஞ்சுவைக் கனிகளும் உயிர்ப்புக்கினிய நன்மணங்களும் மெய்புறுதற்கினிய குளிர்மையும் மெல்லிளங் காற்றும் உள்ளன. இந்நுகர்ச்சிகளில் மயங்கிய மனமானது புதியதோர் இன்ப உலகிற்குச் சென்றுவிடுகிறது.

ஆனால், இப்பூஞ்சோலைக்குச் செல்லும் வழி எளியதன்று. தற்காலத் தமிழுக்கும் சங்க காலத்துத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுதான் இவ்வழியென்பது. முதலாவது, இவ்வழி மிக நெடிதாயுள்ளது. காலத்தால் அளவிட்டு நோக்கின் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் இடைப்பட்டனவாகும். அருஞ்சொற்கள், அருகிய வழக்கு, தொடர் அமைதி முதலியன இந்நெடிய வழியில் பெரிதும் நிரம்பியிருக்கின்றன. இரண்டாவது, இவ்வழி தூர்ந்துவிட்டது. தற்காலத்து அறிஞரது பெருமுயற்சியாலன்றிப் பிறவாறு அறிந்தின்புற முடியாத பண்டை மரபுகள் சில (Convention) இப்பூஞ்சோலைக்குரிய வழியில் நின்று எளிதில் செல்லவொட்டாது தடைசெய்து விடுகின்றன. மூன்றாவது, இவ்வழி சிற்சில இடங்களில் இருள் நிரம்பியும் இருக்கிறது. சரித்திரங்கள் சில அறிவுக்கு எட்டாதனவாயுள்ளன; கதைகள் சில அறிதற்கு அரியவாய் உள்ளன. இச்சரித்திரங்களும் கதைகளும் வழியை இருளில் அகப்படுத்தி, செல்லுவோர்க்கு இடர் விளைக்கின்றன. ஆகவே, இந்நெடிய அருவழியில் தக்கதுணையோடு சென்றாலன்றி, பூஞ்சோலையிற் சென்று பயனெய்த முடியாது. பயனெய்த உதவும் வழித்துணையாக இந்நூல் அமைந்துள்ளது என நம்புகின்றேன்.

வழித்துணை யென்பது நெறியில் உண்டாகும் துன்பங்கள் தோன்றாவண்ணம் தளர்வின்றி மனவெழுச்சி யோடு செல்லுமாறு கதை முதலியன கூறி இன்புறுத்தி உடன் வருவதாகும். தலைமகளை உடனிட்டுச் செல்லுகின்ற ஒரு தலைமகன் அவளுக்கு வருத்தம் தோன்றாவண்ணம்,

நிழல்காண் தோறும் நெடிய வைகி
மணல்காண் தோறும் வண்டல் தைஇ
வருந்தாது ஏகுமதி வாலெயிற் றோயே
... ...
நறுந்தண் பொழில கானம்
குறும்பல் லூர யாம் செல்லு மாறே.

என, வழிச்செல்லுதலின் இனிமையை எடுத்துக் கூறுவதாக ஒரு நற்றிணைச் செய்யுள் உள்ளது. இத்தலைமகனைப் போலவே, இவ்வாசிரியரும் தாம் உடனிட்டுச் செல்லுகின்ற வாசகர்களுக்கு "ஐங்குறுநூறு" என்னும் பழைய நூலி லுள்ள சில அழகிய பாடல்களின் கருத்தை எடுத்துக்கூறி இன்புறுத்தித் துணைபுரிகின்றனர்.

இப்பாடல்—தொகுதியிலுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் ஒவ்வொரு வகைக் காதற் காட்சி தோன்றுகிறது. இக் காட்சிகளில் அழகும் அன்பும் ததும்புகின்றன. கற்போருக்கு இனிமையை வடித்துத் தந்துகொண்டே இருக்கின்றன. காதல் என்னும் தீஞ்சேறு நிரம்பிய இச்செய்யுட்களைக் "காதற்கனி" என ஆசிரியர் பெயரிட்டது மிகவும் பொருத்த மாம்.

இந்நூலால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பயனடை வார்கள் என்பது திண்ணம்.

சென்னைப் பல்கலைக்கழகம்
25—10—45

எஸ். வையாபுரிப் பிள்ளை

மன்றத்தின் நோக்கம்

தமிழ் மொழி தழைத்து வளர்கிறது; இன்னும் வளரும்; வளர்வதற்கு நிறைய இடமிருக்கிறது.

தமிழ் மக்கள் ஆங்கில மொழி மயக்கிலிருந்து சிறிது விழித்திருக்கிறார்கள்; தமிழ் மொழியினிடத்து ஆர்வங் காட்டுகிறார்கள். தமிழ் வளரத் தொடங்கியிருப்பதற்குக் காரணம் இதுவே.

இதன் பயன் என்ன? தமிழில் புதுப்புது நூல்கள் பலப்பல அழகிய வடிவில் வெளிவந்து உலவுகின்றன! இன்னும் பல நூல்கள் வெளிவரும்; வரத்தான் வேண்டும்.

தமிழ் மறுமலர்ச்சி பெற்றுள்ள தற்காலத்திற்கு ஏற்ற முறையில் இலக்கியத் தொண்டு செய்வதே மன்றத்தின் நோக்கம். 'தமிழ் மக்களின் சொத்தாகிய பழந்தமிழ் நூற் கருத்துக்களையும், இக்காலத்திற்கு வேண்டும் புதிய கருத்துக்களையும் இனிய தமிழில் சிறு சிறு நூல்களாக வெளியிட வேண்டும்; தமிழ் மக்கள் தமிழில் ஆர்வம் மிகுந்து நாகரிக வாழ்வில் உயரவேண்டும்.' இந்த அடிப் படையிலேயே மன்றம் தொண்டு செய்ய உறுதி கொண்டுள்ளது. தமிழ்த் தெய்வம் துணை புரிவதாக.

மன்றத்தின் நோக்கத்திற்கு இசைந்து இந்நூலை உதவிய ஆசிரியர்க்கும், முன்னுரை தந்தருளிய பெரியார்க் கும், ஊக்கத்துடன் உதவிகள் புரிந்த அன்பர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

ந. மா. மணி

பொறுப்பாளர்: **மணிமன்றம்**

ஆக்கியோன் அறிவிப்பு

காதல் உணர்ச்சிகளைக் கண்ணியமாய் வெளியிடும் பாடல்கள் தமிழில் மிகுதி. அவை, மிக நுட்பமான எண்ணங்களையும் தெளிவாய்த் தெரிவிக்கின்றன. காதலர்களின் உள்ள நிகழ்ச்சிகளை எவ்வளவு அருமையாய் வெளியிடுகின்றன அப்பாடல்கள்!

ஆனால் எல்லாப் பாடல்களையும், எல்லோரும் படித்துச் சுவைக்க முடிகிறதில்லை. இதற்குரிய காரணங்களை முன்னுரையால் நன்குணரலாம்.

சிறுகதை வழியிலேயே சென்றால் செய்யுள் எளிதில் புரிந்துவிடும்; பாட்டைச் சுவைத்துப் பயனடையலாம். இக்கருத்துக்கொண்டே இந்நூல் எழுந்தது.

திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் 16–4–43உ மாலை 'ஐங்குறுநூறு' என்னும் சங்க நூலைப்பற்றிப் பேச நேர்ந்தது. அன்று அந்நூலிலுள்ள பாக்களில் சிலவற்றைப் பொறுக்கிக் கதைப்போக்கில் அமைத்துச் சிறுசிறு குறிப்புக்களுடன் பேசினேன். அப்பாக்களுடன் வேறு சில பாக்களும் சேர்ந்து இப்பொழுது சிறுகதைகளாக மலர்ந்து நூல் வடிவம் பெற்றுள்ளன. ஐங்குறுநூற்றுச் செய்யுட்களை நான் கையாண்டதற்குக் காரணம் இதுவே.

ஒரு செய்யுளும் மற்றொரு செய்யுளும் தொடர்புடையனபோல் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றனவேயன்றி, உண்மையில் அவை தொடர்புடையனவல்ல; வேறு வேறானவை.

செந்தமிழ்ப் பேரறிஞரும், சிறந்த ஆராய்ச்சியாளருமாகிய இராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் பல நாள் ஆராய்ச்சியிற் கண்டறிந்த தமது அரிய கருத்துக்கள் சிலவற்றுடன் முன்னுரையளித்துள்ள பேரன்புடைமையையும் பெருந்தகைமையையும் நன்றியுணர்வுடன் எண்ணி மகிழ்கிறேன்.

தி. சி. கு.

பொருள் அடக்கம்

★

காதற்கனி

1. ‘நெஞ்சில் அமர்ந்தவள் நீயே!’
2. சங்கு வளையல்
3. வதுவை வாழ்த்து
4. சுரமும் குளிர்ந்தது!
5. ‘மாலைப் பொழுதே—!’
6. காதலும் கடமையும்
7. ‘பாணன் வந்தான்!’
8. தேர்வேகமும் மனவேகமும்
9. சிறைத் தண்டனை!
10. ‘தேன்கலந்த பாலினும்...?’
11. ‘தாயினும் உரியவள் தலைவி!’
12. ‘நெல் பொலிக! பொன் சிறக்க!’

சேர்க்கை - ஐங்குறுநூறு

விரைவில்
வெளிவரும் நூல்கள்

★

முள்ளும் மலரும்—*சிறுகதைகள்*
மாதவி காதல்—*நாடகம்*
கலித்தொகைக் கதைகள்

காதற் கனி

❋

இலக்கியச் சோலையில் எண்ணிறந்த கனிகள்! எல்லாம் தீங்கனிகள்! தெவிட்டாக் கனிகள்!

சில கனிகள் கிட்ட இருக்கின்றன; எளிதில் பறித்து விடலாம். சில, எட்ட இருக்கின்றன; எளிதில் பறிக்க முடியாது.

சரி; கனி கையில் கிடைத்தாலும் உடனே சுவைத்து விட முடிகிறதா? எல்லாக் கனிகளும் எளிதில் சுவைக்கக் கூடியனவாய் இருக்கின்றனவா?

திராட்சைப்பழம் தித்திப்பானது; கையில் எடுத்ததும் வாயில் போட்டு மெல்லாமலே அதக்கிச் சுவைத்து விடலாம்.

வாழைப்பழம் அவ்வாறன்று; தோலை உரிக்கவேண்டும். அதன் பிறகுதான் அப்பழத்தின் சுவையை அறிய முடிகிறது. இதுகூட எளிதில் சுவைக்கக்கூடியதுதான்.

ஆனால், பலாப்பழமோ?—திராட்சை, வாழைகளின் பழங்களைப்போல் எளிதில் சுவைபார்த்துவிட முடியுமா? மேலேயுள்ள முள்ளைக்கண்டு அஞ்சாமல் பிளக்கவேண்டும்; சக்கையை அகற்றவேண்டும். அதன் பிறகுதான் சக்கையின் இடையில் ஒளிந்துகொண்டிருக்கும் பலாச்சுளையின் இனிப்பை அறிய முடிகிறது! முயற்சிக்குத் தகுந்த பயன்! பலாப்பழம் மிக்க சுவையுடையதல்லவா?

செந்தமிழ் இலக்கியச் சோலையில் இந்த வகையில்தான் பல்வகைக் கனிகள் பழுத்துத் தொங்குகின்றன! அவற்றில் பல, காதலில் கனிந்த கனிகள்!

திராட்சைக்கனி போன்றவைகளையும், கதலிக்கனி போன்றவைகளையும் எளிதில் சுவைத்துக் களிப்படைவோர், பலாவின் கனி போன்றவைகளைக் கண்டு பயந்து சுவைக் காது விடுகின்றனர்! முள்ளுக்கு அஞ்சினால் சுளையைச் சுவைப்பது எப்படி?

பழந்தமிழ் இலக்கியங்களில் மிளிரும் பல பாடல்கள் பலாப்பழம்போல் முதிர்ந்த சுவையுடையவை. ஆனால், வெளித் தோற்றத்தைக்கண்டு அஞ்சிவிட்டால் உள்ளிருக்கும் தெவிட்டாத தீங்கனியின் இனிமையைச் சுவைக்க முடியாது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பலாப்பழக் கடைக்காரன் என்ன செய்கிறான்? ஒரு பழத்தை அறுத்துச் சக்கைகளை அகற்றிச் சுளைகளைத் தனியே எடுத்து நம்மிடம் கொடுக்கிறான். நாம் தேன் போன்ற சுளையின் தித்திப்பில் ஈடுபட்டு முழுப் பலாப் பழத்தையே வாங்கிவிடுகிறோம்! முள்ளுக்கு அஞ்சுவ தில்லை! சக்கையை அகற்றும் முயற்சிக்குப் பின்வாங்குவ தில்லை! ஒரு சுளை செய்கிற வேலை இது!

மாம்பழம் விற்பவனும் இப்படித்தானே செய்கிறான்! ஒரு மாம்பழத்தைத் தோலைச் சீவுகிறான்; துண்டு துண்டாக நறுக்குகிறான்; நம்மிடம் கொடுக்கிறான்; சுவைத்துப் பார்க்கும்படி சொல்கிறான்! இவ்வளவும் எதற்கு? மாதிரி மாப்பழச் சுவையில் ஈடுபட்டுத் தன் கூடையிலுள்ள மாம்பழங்களை விரும்பி வாங்கவேண்டும் என்பதற்குத்தான்!

இந்த முறையில்தான் பழந்தமிழ் இலக்கியக் கனிகள்—காதற் கனிகள்—சில, எளிதில் சுவைக்கும்படி இதோ இருக்கின்றன! சுவைத்த பிறகு இலக்கியச் சோலைக்குள் சென்று விரும்பிய கனிகளை வேண்டியவாறு சுவைக்கலாம்; இன்பமடையலாம்.

"நெஞ்சில் அமர்ந்தவள் நீயே!"

*

பாறையின்மேல் உட்கார்ந்திருக்கும் அவ்விளைஞன் யார்? முருகனையொத்த உருவுடன் திகழும் அவன் இங்கு உட்கார்ந்திருப்பது ஏன்? எவர் வருகையையோ எதிர் பார்ப்பவன் போலல்லவா காணப்படுகிறான்! ஆம்: தடை யில்லை. இல்லாவிடில் ஏன் திரும்பித் திரும்பிப் பார்க்க வேண்டும்? சரி, யாரை எதிர்பார்க்கிறான்? சொல்லவேண் டுமா? கண்ணையும் மனத்தையும் கவரும் இந்த இடத்தில், இம் மாலை வேளையில் தன் காதலியையன்றி வேறு யாரை எதிர்பார்க்கக்கூடும்? ஆ! என்ன இன்பமயமான இடம்!

அழகிய மலைச்சாரல். அருகில் நீரோடை. கரையில் மாணிக்கப் பாறை. அடுத்து மலர்ச்சோலை. சோலையெங்கும் மரகதப் பசும்புல் தரை. விண்ணைத்தழுவி முத்தமிடும் வேங்கை, கோங்கு, தேமா, தீம்பலா, சந்தனம், சண்பகம் முதலிய மரங்கள். மகிழ்வுடன் நோக்கும் குழந்தைகள் முகம்போன்ற குறிஞ்சி, மாதவி, காந்தள் முதலிய மலர்கள். இயற்கையளிக்கும் இன்ப விருந்தல்லவா இவை!

கதிரவன் தனது செந்நிறக் கதிர்களை வாரியிறைத்துக் கொண்டு மேற்கு நோக்கி விரைகிறான். சேயிழையார் நடைபோல் மெல்லென வீசுகிறது, தென்றல். மழலை மொழி பேசும் குழவிகள் போலக் கொஞ்சிக் கூவுகின்றன, குயில்கள். மடமங்கையரென நடமிடுகின்றன, மயில்கள். 'ஞொய்' என்ற சுருதியுடன் மலர்கள்தோறும் சென்று மதுவைத் தேடும் தொழிலை இடையறாது புரிகின்றன, வண்டுகள். மலையிலிருந்து இழிதரும் அருவி நீர், சலசல

வென்று ஓயாது ஒலிக்கின்றது. தத்தம் கூடுகளுக்குப் பறந்து விரையும் பறவைகள் கீச்சிடுகின்றன. காதலர் களின் உள்ளத்தைக் களிமயக்கில் முழுக்குவதற்கு எவ்வளவு சிறந்த இடம்!

தன் காதலியைக் கண்டு மகிழ்வதற்கு இந்த இடத்தைக் குறிப்பிட்டு வந்து உட்கார்ந்திருக்கும் அவ் அழகன் வெறும் அழகன் அல்லன்—ஆம், புறத்தில் பொலி யும் அழகு மட்டும் பொருந்தியவன் அல்லன். அகத்தின் அழகிலும்—இயற்கையின் எழிலைப் பருகும் அறிவின் அழகிலும்—சிறந்தவனே என்று சொல்லலாமல்லவா?

ஒளி வீசும் அவன் முகத்தில் ஏமாற்றத்தின் அறிகுறி நிழல்போற் படர்ந்தது. ஆமாம்: குறித்த வேளையில் சிரித்த முகத்துடன் தோன்றும் அவன் காதலி வாராததால் ஏற்பட்ட ஏமாற்றந்தான் அது. "ஒருகால் இன்று அவள் வரமாட் டாளோ...!" "யாராவது இங்கு வாராதபடி அவளைத் தடுத்திருந்தால்...?" "அவள் தோழியைக்கூடக் காணோமே...!"—இவ்வாறு பல எண்ண அலைகள் அவன் உள்ளக்கரையை மோதியலைத்தன. காற்றினால் இலைச்சருகு அசைந்து சிறிய ஒலியை உண்டாக்கினாலும் போதும்; காதலிதான் வந்துவிட்டாளோவென்று பரபரப்புடன் அவ் விடத்தைப் பார்க்கும், அவன் கண்கள்! குரங்குகள் மரங் களில் தாவிச்செல்லும் ஓசையைக் கேட்டதும், அவன் மன மும் அங்குத் தாவிச் செல்லும்! ஏமாற்றம்! ஏமாற்றம்!! என்ன பரிதாபம்!

"இனி வரமாட்டாள்" என்று எண்ணியதும் அவன் மனம் விழுந்துவிட்டது. விழித்திமையா நிலையில் வெறும் வெளியை நோக்கின, கண்கள். அசைவற்றுப் பதுமை போலிருந்தது, உடல். அவன் உள்ளத்திரையில், காதலியை

முதன்முறை சந்தித்த பழைய நிகழ்ச்சிகள் படக்காட்சி போல் எழுந்து தோன்றின.

* * *

ஒரு நாள் பிற்பகல். வேட்டையாடப் புறப்பட்டான் வீரன். தோழர்களும் சூழ வந்தார்கள். காட்டில்தான் வேட்டை. பல விலங்குகள் வேட்டையில் மாண்டன. ஒரு முள்ளம்பன்றி வீரர்களின் ஆற்றலை மதித்தறியும் உரைகல் போல் தோன்றியது, அவர்களின் முன். அவ்வளவுதான்; தொடங்கிவிட்டார்கள் வேட்டையை. வில்லினின்றும் விரைந்த அம்புகளிற் பல, பன்றியைத் தீண்டவில்லை. தீண்டிய சிலவும் அதனுடம்பில் தைத்து நின்று, வேறு முட்கள் போல் காட்சியளித்தன! எல்லோரையும் ஏமாற்றிக் கண்களில் மாயப்பொடியைத் தூவிவிட்டு மறைந்து விடுவதில் இந்திரசித்தனும் அப்பன்றிக்கு எதிரில்லை போலும்!

தம் வல்லமைக்குச் சான்று காட்டும் நல்ல தருணத்தைக் கைவிடுவார்களா வீரர்கள்? வீரன் எழுச்சியுடன் முனைந்து விட்டான் வேட்டையில். வில்லினின்றும் அம்புகளை மழையெனப் பொழிகிறான். விடாது பின்தொடர்ந்து ஓடுகிறான். தோழர்கள் சோர்ந்து பின் தங்கிவிட்டதையும் அவன் உணரவில்லை. ஓடுகிறான், ஓடுகிறான்; பன்றியும் ஓடுகிறது. இராமனை ஏமாற்றி இழுத்துச் சென்ற மாயமான்தான் பன்றி உருக்கொண்டு வந்துள்ளதோ! என்ன சாகசத்துடன் மறைந்து மறைந்து ஓடுகிறது! வேட்டை வெறி மூண்டு நின்ற வீரனின் நாட்டத்தில் பன்றியொன்றுதான் படுகிறது. நீண்ட நேரமாக விடாது தொடர்கிறான். நெடுந்தொலை வந்து விட்டதை நினைத்துப் பார்க்க அவனுக்கு நேரமேது?

மலைச்சாரலை நெருங்கியது பன்றி. இனி நேரே ஓட வழியில்லை. இடதுபுறமோ, வலது புறமோ திரும்பித்தான்

செல்லவேண்டும். சற்றுத் திகைத்து நின்றது. அவ்வளவு தான். அதனுடம்பில் ஊடுருவிப் பாய்ந்தது, பறந்து வந்த ஓரம்பு. பன்றி நிலத்தில் உருண்டது. வெற்றியின் குறி வீரன் முகத்தில் விளங்கியது.

வீரன் அடைந்தது வெற்றிதான். ஆனால் அவனுக்கு அது சுவைக்கவில்லை. தனிமையிலல்லவா இருக்கிறான், அவன்! யாரும் அருகில் இல்லையே! தோழர்கள் இருந்தா லல்லவா வெற்றி விருந்தைப்பகிர்ந்து களிக்கலாம்! வேட்டை சுவைக்காதது மட்டுமன்று; மிகுந்த களைப்பையும் தந்து விட்டது! களைப்பை மாற்றும் மருந்து களிப்பு. அதுதான் இப்பொழுது இல்லையே! உடற்களைப்பு மட்டுந்தானா? உள்ளக் களைப்புமல்லவா சேர்ந்துவிட்டது! வேறென்ன வேண்டும், மனிதனைச் சோர்வில் வீழ்த்துவதற்கு? ஓய்ந்து உட்கார்ந்து விட்டான், ஒரு கல்லின்மேல். அவன் நிலை கண்டு எள்ளி நகைப்பது போல், வாயைப் பிளந்துகொண்டு எதிரில் கிடந்தது, பன்றியின் உடம்பு!

கதிரவன் மேல் வானத்தில் மறைவதற்குப் பரபரக் கிறான். இனி என்ன செய்வது? தோழர்களை விரைவில் காணமுடியாது. அவர்கள் எங்கு இருக்கிறார்களோ? வீரனை இன்னும் சோர்வில் வீழ்த்தியது இங்கிலை. நாவறட்சி வேறு அவனை வதைத்தது. சுற்றுமுற்றும் பார்த்தான். மலையருவி தென்பட்டது. ஆவலுடன் எழுந்து நடந்தான். ஓடை நீரைப் பருகி விடாய் நீங்கினான். மெல்லிய பூங் காற்று அவன் மேனியைத் தடவியது. களைப்புப் பறந் தோடியது. முன் நிகழ்ச்சியெல்லாம் கனவென மறைந்தது. நீரைப் பருகிக் காற்றை நுகர்ந்த அவன், சுற்றிலுமுள்ள இயற்கையின் எழிலைப் பருகி இன்பத்தை நுகர்கிறான், இப்பொழுது!

மலர் கொய்யும் பொருட்டுத் தன் தோழியரைப் பிரிந்து கொடியென நடந்து அங்கு வந்தாள், ஒரு கட்டழகி. ஆணழகன் ஒருவன் அங்குள்ளான் என்பதை அறியாது தான் வந்தாள். 'அண்ணலும் நோக்கினன்; அவளும் நோக்கினள்'. கண்ணொடு கண்ணிணை கலந்தன. இருவரும் மாறிப்புகுந்து இதயமெய்தினர். வேறென்ன விளம்ப வேண்டும்? "வெள்ளத்திநோடொரு வெள்ளமுமாய் நல்ல வீணையும் நாதமும் ஆகிவிட்டார்." பின்னர், காதலர் இருவரும் இச் சோலையில் அடிக்கடி கூடுவது வழக்கமாய் விட்டது.

* * *

இப்பழைய காட்சியின் இன்பத்தில் தோய்ந்து விட்டான் அக்காளை. கனவுலகத்தில் இருப்பதாகவே இருந்தது அவனுடைய நிலை. அந்நிலையிலிருந்து அவனைத் திடுக்கிட்டு விழிப்படையச் செய்துவிட்டது ஒரு குரங்கு! வேறொன்றுமில்லை; குரங்கு மாங்கனியொன்றைப் பறித்தது. அது தவறி அவனருகில் 'பொத்'தென்று விழுந்தது. அவ்வளவுதான்.

ஒரு பெருமூச்சுடன் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டே எழுந்து நிற்கிறான் இளைஞன். 'காதலி ஒருகால் வந்தாலும் வரலாம்' என்னும் அவன் எண்ணத்தைப் பிரதிபலித்தது அவனுடைய பார்வை. மெல்ல நடக்கிறான். மலைப்பக்கமெல்லாம் மணங்கமழும்படி கொத்துக் கொத்தாய் மலர்ந்துள்ள காந்தள் மலர்கள் அவன் பார்வையிற் படுகின்றன. தன் காதலியின் கைகளே அவை என்று எண்ணிவிடுகிறான். தோகை விரித்தாடும் மயிலொன்றைப் பார்க்கிறான். காதலிதான் வந்துவிட்டாள் என்று விரைந்து போய் ஏமாறுகிறான். இப்படிக் காண்பதையெல்லாம் தன் காதலியாகவே எண்ணிப் பேதுறும் மனத்தனாய் மீண்டும் அப்பாறையிலேயே வந்து அமர்கிறான்.

காதலி பொல்லாத குறும்புக்காரி. முன்னமேயே வந்துவிட்டாள், அவள். ஆனால் உடனே காதலன்முன் வாராமல் ஒரு புதரில் ஒளிந்துகொண்டிருந்தாள். விழித்த கண் இமைக்காமல் தன் காதலன் செயலை மிக்க அக்கறையோடு பார்த்துக்கொண்டிருந்தாள். தன்னைக் காணமல் அவன் தவிப்பதைக் கண்டு களிப்பதில் அவளுக்கு ஒரு ஆசை; வேடிக்கையுங்கூட. இன்னும் அவன் உள்ளத்தை—அவன் தன்னிடம் கொண்டுள்ள காதலின் ஆழத்தை—ஆராய்ந்தறியவும் அவளுக்கு அவா இருந்தது. அது சரியோ தவறோ, அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை அவளுக்கு.

காதலன் பாறையில் அமர்ந்ததும் புதரை விட்டு வெளியே வருகிறாள் பாவை. பூனை போல் மெதுவாக நடக்கிறாள்; பின்புறம் சென்று அவனது இருகண்களையும் தனது மெல்லிய கைகளால் பொத்துகிறாள். காதலன் களிக்கிறான். "அன்பே, மலர்கள்போல் குளிர்ச்சியைத் தந்து என் கண்களுக்கு இன்பஞ்செய்கின்றன உன் கைகள்!" என்று காதலியைத் தான் அறிந்து கொண்டமையைப் புலப்படுத்தி, மகிழ்ச்சிப் பெருக்குடன் பேசுகிறான். காதலி அகமகிழ்ந்து முகமலர்ந்து உடனே கைகளை எடுத்து விடுகிறாள்; மகிழ்பூத்த முகத்துடன் அவனருகில் அமர்கிறாள். காதலர் உள்ளத்தில் இன்ப ஊற்றுப் பெருகி அலை பாய்கிறது. காதலன் காதலியின் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு, "உள்ளங் கவர் கள்ளீ! உன்னையன்றி வேறு நங்கைக்கு என் மனத்தில் இடமேது? இருந்தாலல்லவா இந்தச் சோதனை வேண்டும்! வேறு மங்கையை விளம்புவேன் என்று எண்ணினாய்; ஏமாறினாய்! இவ்வளவு நேரம் என்னை ஏமாற்றிய உனக்கு, வேண்டும் இந்த ஏமாற்றம்!" என்று காதற் கனிவோடு கழறுகிறான். அவன் மொழிகளில் அன்பு

ததும்புகிறது. வினவுகிறனு, கொஞ்சுகிறனு என்று ஐயப்படும்படி இருக்கிறது அவன் பேச்சு!

"சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே!
பாயல் இன்துணை யாகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை!
நீயல(து) உளரோ என் நெஞ்சமர்ந் தோரே?" *

[சிலம்பு கமழ் காந்தள் - மலைப்பக்கமெல்லாம் மணங்கமழ்கின்ற காந்தள் மலர்; காந்தள் பூத்துள்ளதால் மலைப்பக்கமெல்லாம் மணம் வீசுகிறது. நறுங்குலை - நல்ல கொத்து; காந்தள், கொத்துக் கொத்தாய்ப் பூக்கும். அன்ன - போன்ற. நலம்பெறு கையின் - இன்பம் பொருந்திய கைகளால்; காதலியின் கைகள் பூங்கொத்துப் போன்று மென்மையும் குளிர்ச்சியும் உடையனவாய்க் காதலனுக்கு இன்பஞ் செய்தன. பாயல் - படுக்கை. இன்துணையாகிய - இனிய துணையாய் இருந்த. பணைத்தோள் - பருத்த தோள்களை யுடைய. தோகை மாட்சிய - மயில் போலும் மாட்சிமையுள்ள; மயில் போலும் சாயல், சிறந்த நங்கையரின் இயல்பு. மடந்தை -பெண்ணே!]

காதலன் கேள்வியா கேட்கிறன்? தன் உள்ளத்தை யல்லவா திறந்து காட்டுகிறன்! "நீயல்லது உளரோ என் நெஞ்சமர்ந்தோரே" என்பது வினுதான். ஆனல், "எனது நெஞ்சில் குடிகொண்டிருப்பவள் நீதான்; பிறரில்லை" என்ற உறுதியையல்லவா ஆணித்தரமாய் அறைகிறன்! களங்க மற்ற அவன் காதல் நிலை, பளிங்கு போல் எவ்வளவு தெளி வாய்த் தெரிகிறது!

---

* "நீயல்லது உளரோவென் னெஞ்சமர்ந்தோரே" என்றது, நீயல்லது பிறருளராயினன்றே நான் கூறுவது அறிதல் வேண்டிக் கண்புதைக்கற்பாலது; அஃதில்லாதவழிப் புதைப்பது என் என்று அவள் பேதமை உணர்த்தியதாம்.—பழைய உரை.

சங்கு வளையல்

❋

“ இளமையின் ஒளி வீச எழிலுடன் செழித்திருந்த நம் செல்வி, இப்படி நாளுக்கு நாள் இளைத்துப் போகிறாளே, காரணம் என்ன ? ”

“ என்னவோ தெரியவில்லையே அம்மா ! ”

“ நீ பெருங்கள்ளி ! உனக்கு ஒன்றுமே தெரியாது, பாவம் ! ”

“ என் மீது கோபிக்கிறீர்களே, தாயே ! ”

“ பின் என்ன ? நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாத உனக்கு ஒன்றுமே தெரியாது என்கிறாயே ! ”

“ தெரிந்திருந்தால் சொல்லியிருக்கமாட்டேனா? ஒருகால் தினைப்புனம் காவல் காரணமாயிருக்கலாம்.”

“ நல்ல காரணம் ! காவலில் என்ன வேலையிருக்கிறது, உடம்பு இளைத்துப் போகும்படி ? ”

“ பறவைகள் வந்து பயிரைத் தின்னாமல் பார்த்துக் கொண்டிருந்து விரட்டவேண்டாமா ? ”

“ நன்று ! நன்று !! உடம்பில் வெயில்படாமல் பரண்மீது அமர்ந்திருந்து, கிளி குருவிகளைக் கூவி விரட்டுவதிலா உன் தோழி இளைத்துவிட்டாள் ! நேர்த்தியாயிருக்கிறதே உன் பேச்சு ! வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்.”

“ எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே ! ”

“ நான் ஒன்று நினைக்கிறேன். அப்படியிருக்குமா என்பதை நீதான் தெரிவிக்க வேண்டும் ! ”

“ தெரிந்தால் சொல்லுகிறேன் ”

"சரி. மலைத்தெய்வம் ஏதேனும் தீண்டியிருக்குமோ?"

"இருக்கலாம்!"

"ஒட்டாமற் பேசுவதில் கெட்டிக்காரியாயிற்றே நீ!"

"இல்லையம்மா; நான் உண்மையைத்தான் உரைத்தேன். ஒரு நாள் நம் செல்வி பூப்பறித்து விளையாட விரும்பினாள். அன்றுதான் ஊரிலிருந்து தோழியர் பலர் தினைப்புனம் காண வந்திருந்தார்கள். எல்லோரும் மலைச் சாரலையடுத்த சோலைக்குள் போனோம். ஒவ்வொருவரும் தனித்தனியே போய்ப் பூப்பறித்தோம். இவள் எங்களை விட்டுப் பிரிந்து நெடுந்தொலை சென்று பூப்பறித்து வந்தாள். வரும்பொழுது ஒரு மாதிரியாகக் காணப்பட்டாள். பூப் பறித்த களைப்பாயிருக்கலாமென்று அப்பொழுது கருதினேன். இப்பொழுது நீங்கள் கேட்கவுந்தான் தோன்றுகிறது, மலைத்தெய்வம் தீண்டியிருக்குமோ என்று."

"அப்படிச் சொல்! நான் நினைத்தபடிதான் நடந்திருக்கிறது! ஐயமே வேண்டாம். மலைத்தெய்வந்தான் தீண்டியிருக்கிறது. அவள் முகத்தைப் பார்க்கும்பொழுதே தெரிகிறதே! * வெறியாட்டினால்தான் இது விலகும். விரைவில் அதற்கு ஏற்பாடு செய்கிறேன்."

தாயின் முகத்தில் வெற்றிக்குறி நிலவியது. தோழியின் மொழிகளில் மிகவும் திருப்தியடைந்தவளாகவே காணப்பட்டாள். "ஆடு, கோழிகளைப் பலியிட்டு வேலனைக் கொண்டு வெறியாட்டு நடத்த வேண்டும். தெய்வக் குற்றம் நீங்கிவிடும். மகள் உடம்பு தேறிவிடும்." இவ்வாறு மனப் பால் குடித்துப் போயினாள் தாய்.

---

*வெறியாட்டு:—முருகக்கடவுள் பொருட்டுப் பலியிட்டு, அக்கடவுள் ஆவேசிக்க ஆடுங்கூத்து. இது, வேலன் என்பவனால் நிகழ்த்தப்படும். வேலன் வெறியாடிக் குறி கூறுவான். அதுகொண்டு நேர்ந்த குற்றத்தை யுணர்ந்து அதைப் போக்கும் வழியினைச் செய்வர்.

தாய்க்குத் தலைவியின் காதற்செய்தி தெரிந்துவிட்டதோ என்று, முதலில் அச்சங்கொண்டாள் தோழி. ஆகையால் தயக்கத்துடன் எச்சரிக்கையாகவே பேசினாள். பிறகு தாயின் கேள்வி அவள் அச்சத்தை அகற்றிவிட்டது. தாயின் மனப்போக்கைப் புரிந்துகொண்டதும் தாராளமாய்ப் பேசினாள்; உண்மையையும் துணிந்து சொன்னாள். ஆனால் மறைபொருளாக வைத்துத் தந்திரமாகப் பேசினாள். அதை உணர்ந்து கொள்ளவில்லை, தாய். எவ்வாறு உணர்வாள்? தெய்வக் குற்றம்தான் தன் மகள் இளைத்துப் போவதற்குக் காரணம் என்ற உறுதியுடன் அல்லவா உரையாடினாள் அவள்!

* * *

"தினைப்புனம் காவலில் உன் துணைவி ஒழுங்காக உணவு உண்பதுண்டா?"

"உம்"

"'உம்' என்று ஒருவாறு சொல்கிறாயே! வேடிக்கையிலும் விளையாட்டிலும் பசியை மறந்து இருந்துவிட்டு அப்புறம் வேளை தவறி உண்பது உண்டல்லவா? மறைக்காமல் சொல்!"

"......"

"ஏன் பேசாமலிருக்கிறாய்? எனக்குத் தெரியும்! உன் துணைவிக்கு விளையாட்டென்றால் போதும்; சாப்பாடுகூடத் தேவையில்லை. அது போகட்டும். தேன், தினைமாவு முதலியவற்றைச் சாப்பிட்டது உண்டல்லவா? இதையாவது ஒளிக்காமல் தெரிவி!"

"உண்டு!"

"பார்த்தாயா! நான் முன்னமேயே தெரிந்து சொன்னேன்! உன் துணைவிக்குத் தேன் என்றால் உயிர்! அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டிருப்பாள். அப்படித்தானே?"

"ஒரு நாள் மலைச்சாரல் பக்கம் விளையாடப் போயிருந்தோம். அப்பொழுது அங்கு வந்த ஒருவர் எங்களைக் கண்டதும், ஒரு குடுவை நிறையத் தேனைக் கொடுத்து அன்புடன் குடிக்கச்சொன்னார். நாங்கள் அதை மகிழ்வுடன் பெற்று அதில் தினைமாவைக் கலந்து பிசைந்து உண்டோம். நான் 'கொஞ்சமாய்ச் சாப்பிடு' என்று சொல்லிப்பார்த்தேன் ; கேட்கவில்லை."

"சரி! சரி!! இப்பொழுது புரிந்துவிட்டது ! செரியாமை தான் ஏற்பட்டிருக்கிறது அவளுக்கு. வயிற்றில் கோளாறு இருக்கும்பொழுது உடம்பு இளைக்காமல் என்ன செய்யும் ? இப்பொழுது சொல், தெய்வக் குற்றம்தான் உடம்பு இளைப்பதற்குக் காரணமென்று நீ நினைக்கிறாயா ?"

"தாய் அவ்வாறு சொல்கிறார்கள் !"

"அவள் பேதமையால் பிதற்றுகிறாள். ஆயினும் அவள் விருப்பம்போல் செய்வதைச் செய்யட்டும். நான் தக்க மருந்து கொடுக்கச் செய்கிறேன்."

'தெய்வக் குற்றம்' என்பதில் தந்தைக்கு நம்பிக்கை இல்லை; 'ஏதோ நோய் கண்டிருக்கிறது' என்பதுதான் அவருடைய உறுதியான எண்ணம். தோழி அதை விரைவிலேயே உணர்ந்துகொண்டாள் ; அவர் போக்கிற் கிணங்க உரையாடினாள். தலைவி காதலனைக் கண்டு மகிழ்ந்ததையே, தேன் பெற்ற இன்புற்றதாகச் சாதுரியமாய் மொழிந்தாள் !

தந்தை தேர்ந்த மருத்துவர்களை அழைத்து வருவார் ; மருந்துகளைக் கொடுக்கச் செய்வார் ; கண்ணுங் கருத்துமாய் மகளைக் கவனிப்பார் ; 'அதைத் தின்னாதே' என்பார் ; 'இதைச் செய்யாதே' என்பார். இப்படி ஓயாது தொல்லை கொடுத்து வந்தார், அவர்.

* * *

"மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்" என்பார்களே, அந்தமாதிரியாயிற்று, தலைவியின் பாடு! மனத்தையரிக்கும் புழு வேறாயிருக்க, அதையறியாத பெற்றோரின் அன்புத் தொல்லைகளுக்கு வேண்டா வெறுப்பாய் உட்பட்டு மனம் வாடினாள்; உடல் நொந்தாள். வேறு என்ன செய்வது?

தலைவியின் இந்த நிலைமையைக் கண்டு மிக்க வேதனையடைந்தாள் தோழி. உண்மை தெரிந்தால் பெற்றோரின் சினத்தீ, தலைவியின் உள்ளத்தைச் சுட்டு வருத்தும் என்பதற்கு அஞ்சியே அவர்கள் போக்கில் பேசினாள். அதன் விளைவு, அவர்கள் தலைவியின் உடலை வருத்தும் முயற்சிகளில் இறங்கிவிட்டார்கள்! எவ்வாறேனும் அவர்களின் செயல்களைத் தடுத்து நிறுத்திவிடவேண்டுமென்று பதைபதைத்தது, அவள் உள்ளம்.

இடையில் அவள் சும்மா இருக்கவில்லை. தலைவிக்கு ஆறுதல் மொழிகள் சொல்வாள்; விரும்பிய செயல் விரைவில் நிறைவேறும் என்று சொல்லி ஊக்குவாள்; வேடிக்கைப் பேச்சில் ஈடுபடுத்துவாள்; நகை மொழியாடி உவகையூட்டுவாள்; விளையாட்டில் திளைக்கச் செய்வாள். இன்னும் என்னென்னவோ சூழ்ச்சிகளையெல்லாம் கையாளுவாள். 'எப்படியாவது தலைவியின் உள்ளத்தைக் களிக்கச் செய்ய வேண்டும்; உடலையுருக்கும் பேயை ஓட்ட வேண்டும்.' இதுதான் அவளுக்கு ஓயாக்கவலை. ஆனால் அவள் கவலை பயனளித்ததா? அதுதானில்லை. நாளுக்குநாள் தலைவியின் உடம்பு துரும்பாய் மெலிந்து போவதையே கண்டாள். உயிர்த்தோழியல்லவா? உள்ளம் பதைத்தாள்; என்ன நேர்ந்து விடுமோ என்று நடுங்கினாள். ஆயினும் உறுதி குலையவில்லை.

"இன்று வருவார் நம் தலைவியின் காதலர். அவர் தெரிவித்துள்ளபடி வருவது திண்ணம்; தவறமாட்டார்.

வரட்டும். தலைவியின் நிலைமையைத் தெளிவாய்த் தெரிவித்து விரைவுபடுத்திவிடுகிறேன். இன்னமும் காலம் கடத்த விடலாகாது. ஆனால்,......பாவம், ஏமாறிப்போவார்! நன்றாய் ஏமாறட்டும்! அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? அப்பொழுதுதான் அவர் மனத்தில் நன்றாய்ப் படும்; இனி, காலம் நீட்டிக்கலாகாது என்று அறிவார். இது தான் சிறந்த வழி; ஏற்ற தண்டனை! ஆம்; தண்டனைதான் அவருக்கு! தலைவியின் நிலையோடு ஒப்பிட்டால் இது எம்மாத்திரம்? ”

தோழி, மனம் குழம்பவில்லை; என்ன செய்வதென்றும் விழிக்கவில்லை; சிறிது நேரமே சிந்தனை செய்தாள். உடனே இவ்வாறு ஒரு உறுதிநிலையை யடைந்தது, அவள் உள்ளம். எவ்வளவோ சிக்கலான செய்திகளை யெல்லாம் அறுத்து ஒழுங்குசெய்த கூரிய மதிபடைத்தவளல்லவா அவள்!

* * *

‘காதலியை மறைவிடத்திற் காணவேண்டும்; காதற் களி பொங்கக் கனிமொழி பேசி இன்பத் தேனில் மிதக்க வேண்டும்.’ இதுதான் காதலன் காணும் கனவு. இம்மாதிரி எத்தனை முறையானால்தான் என்ன? அவன் மனவண்டு அந்த மலர்த்தேனையே நாடி நின்றது!

மறைந்த ஒழுக்கம் வெளிப்பட்டால் தனக்கும் காதலிக்கும் சில தொந்தரவுகள் நேரும் என்பதை அவன் நன்குணர்வான். * அலர்மொழி பரவி அவமதிப்பு ஏற்படும் என்பதும், அதற்கஞ்சி மனம்புழுங்கி உடல் குன்றுவாள் காதலி என்பதும் அவனுக்குத் தெரியும். ஆயினும், காதலியைத் தனிமையிற் கண்டு மகிழும் அவனது வேட்கை, அவற்றையழுத்தி மேல்நின்று நடனமாடியது! ஆகையால், காதலியை விரைவில் மணந்துகொள்ளவேண்டுமென்பதில்

*அலர்—பழிமொழி: இன்னானோடு இன்னாளுக்குத் தொடர்பு ஏற்பட்டுள்ளது என்று பலரும் அறிந்து பேசுதல்.

அவன் நாட்டம் செல்லவில்லை. தோழி எத்தனையோ முறை வற்புறுத்திக் கூறியிருக்கிறாள். 'ஆகட்டும்' 'ஆகட்டும்' என்று சலிக்காமல் அவனும் மறுமொழி சொல்லிக் காலம் கடத்திவந்திருக்கிறான். அவ்வாறு சொல்வதற்குச் சிறிதும் பின்வாங்கினதாகத் தெரியவில்லை! ஆனால், தன் மொழிகளில் சற்றும் ஐயம் பிறக்காதபடி பெருமை தோன்றவே பேசி வந்தான். மறைந்த ஒழுக்கத்தை விரும்பினானேயன்றி, கரவு என்பதைக் கனவிலும் அறியாத கண்ணியன் அவன்.

பல நாட்களுக்குப் பிறகு, காதலியைக் காணும் பெரு விருப்புடன் வருகிறான், காதலன். வரும்பொழுதெல்லாம் காதலிக்கு ஏதேனும் ஒரு பொருள் கொண்டு வருவது அவன் வழக்கம். காதலியைக் களிப்பிக்கவேண்டுமல்லவா? இம் முறை வெண்சங்கு வளையல்களைக் கொண்டுவந்திருக்கிறான். அவற்றைத் தன் கையினாலேயே காதலியின் முன் கைகளில் அணிவித்து மகிழவேண்டுமென்பது அவன் ஆசை.

காதலனைக் கண்டு களிப்பதில் காதலிக்கும் பேராவல் தான். ஆனால், இம்முறை தோழியின் ஏற்பாட்டின்படி காதலனைக் காண்பதில்லையென்று உறுதி செய்துவிட்டாள். மெலிந்த உடல் நிலையில் காதலனைக் காண அவள் மனம் கூசியதும் அதற்குப் பக்கபலமாயிற்று. இன்னும், காதலன் செயலில் கோபம்கூட உண்டு, அமைதி குலையாக் கடலில் மேலெழும் அலைகள் போல!

குறிப்பிட்ட இடத்தில் நெடுநேரம் வரையில் காத்திருந்தான், காதலன். காதலி, எப்பக்கம் வருகிறாளோ என்பதை ஆராய்வதில் மிக்க சுறு சுறுப்பாய்க் காணப்பட்டன, அவன் கண்கள்! வரம் கொடுக்கும் கடவுளின் வருகையை எதிர்நோக்கும் அடியாரின் மன நிலையை ஒத்திருந்தது அவன் நிலை!

காதலி வரவில்லை; தோழி வந்தாள், வாடிய முகத்துடன்! காதலியை இன்று காண முடியாது என்பதை உடனே உணர்ந்துகொண்டான், காதலன். 'காதலி ஏன் வரவில்லை? அவளுக்கு என்ன நேர்ந்தது? தோழி வாடிய முகத்துடன் வருவானேன்?' இவற்றை அறியத் துடித்து நின்றது, அவன் உள்ளம். ஆயினும் அதனை வெளிக் காட்டாமல் அமைதியோடு பேசலானான்.

"உன் துணைவிக்கு இவ்வளையல்களைப் பரிசாகக் கொண்டுவந்தேன். ஆனால், அவள் கையில் இவற்றை அணியும் பேறு எனக்கு இன்று இல்லைபோலும்! அப்படித்தானா?"

"ஆம்!"

"ஏன்?"

காதலன் கேள்வியில் பரபரப்புத் தோன்றியது. தோழி மறுமொழி கூறவில்லை.

"ஏன் வாய்திறவாமல் இருக்கிறாய்?"

"எம்பெருமான்! மன்னிக்கவேண்டும்!"

"மன்னிப்பதா! என்ன இது! புரியவில்லையே!"

"தலைவி தங்களைக் காணும் நிலையில் இல்லை"

"அவ்வளவுதானே! தினைப்புனத்திலிருந்து வீட்டிற்கு வந்த பிறகு தாய் தந்தையரின் காவல் ஏற்பட்டுவிட்டது போலும்! இயற்கைதானே! இதற்கு எனது மன்னிப்பு எதற்கு? பரவாயில்லை. இந்த வளையல்களை உன் தலைவியிடம் சேர்த்துவிடு. நாளை மாலை நான் வருகிறேன். அப்பொழுது எப்படியும் உன் துணைவியை நான் காணவேண்டும். புரிகிறதா? போய் வருகிறேன்."

தோழி பேசவில்லை. தலைவியின் நிலையைப் புலப்படுத்த முனைந்து நிற்கும் அவளுக்கு, அவன் போக்கு முற்றிலும் தோல்வியளிப்பதாயிருந்தது. தன் மொழிகளின் கருத்தை

மாருகப் பொருள் செய்துகொண்டு அவன் பேசியது, அவளைச் சிறிது திகைக்க வைத்துவிட்டது. உடனே அவன் புறப்படத் தயாராய்விட்டதோ, அவள் மன உறுதியைத் தளர்த்திவிட்டது. 'இத்தருணத்தை நழுவ விட்டால்—?' இதை நினைக்கவும் அஞ்சினுள் அவள்.

கருமேகத்தினிடையில் தோன்றிய மின்னல் போல, ஓர் எண்ணம் தோன்றியது, குழம்பிய அவள் மனத்தில். தலைவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் உதட்டில் புன்னகை தவழ்ந்தது. பிறகு அவன் கொடுத்த வளையல்களைத் திருப் பித் திருப்பிப் பார்த்தாள்! மீண்டும் தலைவனை நோக்கினுள்.

தோழி என்னவோ சொல்ல விரும்புகிருள் என்பதை உடனே தெரிந்துகொண்டான், தலைவன். அவள் மொழி களைக் கேட்க அளவு கடந்த ஆவல் காட்டி நின்ருன்.

"கடல் துறை நாடரே!" என்ருள் தோழி. இந்த விளியில் சிறிது வருணனையைச் சேர்த்தது அவளுடைய கற்பனை யுள்ளம். கடற்கரை எத்தகைய வளமுடையது தெரியுமா? வெண்மணல் நிரம்பியிருக்கிறது. அதில், வலம்புரிச் சங்குகள் இடையருது ஊர்ந்து செல்கின்றன. ஆதலால் உழுததுபோல் கோடுகள் காணப்படுகின்றனவாம். அந்த மணலிலே, அலைகளாகிய கைகளால் முத்துக்களை வாரி எறிந்திருக்கிருள், கடல் நங்கை. அம்முத்துக்கள் இருளெல்லாம் ஓடியொளியும்படி நிலவுபோல் ஒளி செய்கின் றனவாம். வளஞ்செறிந்த இக்கடற்கரையையடுத்த நாட்டை யுடையவனும், தலைவன்.

"தோழி இவ்வாறு நம்மை அழைப்பானேன்? இதில் ஏதோ புதைபொருள் இருக்கவேண்டும். வீண்மொழி பேசுவது இவளுக்கு என்றும் வழக்கமில்லை. ஆழ்ந்த கருத்துடன் சில வேளை இவள் பேசியதைக் கேட்டிருக்

கிறோம். அப்படித்தான் இருக்கவேண்டும், இதுவும். இருக்கட்டும்; இன்னும் என்ன சொல்கிறாள் என்று கேட்போம்.''

இவ்வாறு எண்ணினான், தலைவன். தோழி, தொடர்ந்து பேசுகிறாள்:

"நீர் முன்பே சில வளையல்களைத் தந்துள்ளீர். ஆனால், அவற்றைக் காட்டிலும் சிறந்த வேலைப்பாடமைந்து, அழகில் விஞ்சியிருக்கின்றன இவைகள். ஆயினும், ஒன்று கேட்கிறேன்; மன்னிப்பீராக! முன்பு கொடுத்த வளையல்களைக் காட்டிலும், இவை சிறிய அளவினையுடையனவோ? இருப்பின், அணிபெறப் பூண்பாள் எம் துணைவி. இல்லையேல், கையினின்று கழன்று போகும்; பயன் தரா."

"வலம்புரி யுழுத வார்மணல் அடைகரை
இலங்குகதிர் முத்தம் இருள்கெட இமைக்கும்
துறைகெழு கோண்க! நீ தந்த
அறைபுனல் வால்வளை நல்லவோ தாமே?"

[வலம்புரி உழுத வார்மணல் அடைகரை - சங்குகள் ஊர்ந்து செல்வதால் உழுததுபோன்ற கோடுகளையுடைய மிகப்பரவிய மணல் சேர்ந்துள்ள கரையில்: இலங்கு கதிர் முத்தம் - விளங்குகின்ற ஒளியுடைய முத்துக்கள்; கடல் அலை, முத்துக்களைக் கரையில் வீசி எறிந்துள்ளன: இருள்கெட இமைக்கும் - இருள் நீங்கும்படி விளங்குகின்ற; முத்துக்களின் நிலவுபோன்ற ஒளியால் இருள் நீங்கி விட்டது: துறைகெழு கொண்க - கடல் துறை பொருந்திய நெய்தல் நிலத் தலைவனே!: அறைபுனல் - ஒலிக்கின்ற கடல் நீரில் தோன்றிய: வால்வளை - வெண்ணிறமான சங்கு வளையல்கள்: நல்லவோ - உடல் மெலிந்தபோது கையினின்றும் கழன்றுபோகாத நலமுடையனவோ?; அஃதாவது, சிறிய அளவினையுடையனவோ என்பதாம். தாம், ஏ - அசைகள்: அவற்றிற்குப் பொருள் இல்லை.]

தலைவனைத் தூக்கி வாரிப் போட்டுவிட்டன, தோழியின் மொழிகள். தன் காதலியின் உடல் மெலிவை நொடிப் பொழுதில் அவன் அறிந்துகொண்டான். இப்பொழுதுதான்

அவன் மனத்தில் பளிச்சென்று தோன்றியது, தோழி தன்னை அழைத்ததில் அடங்கியுள்ள அரும் பொருள்!

"ஆ! என்ன அருமையாய் உண்மையை உணர்த்தியிருக்கிறாள்! நாம் விரைவில் மணம் புரிந்துகொள்ளாமலிருப்பதால், அலர்மொழி எழுந்துவிடுமோ என்று அஞ்சியஞ்சிக் கவலைகொண்டு உடல்மெலிந்து விட்டாள், நம் காதலி. கவலை, உடலைமட்டுந்தானா உண்ணும்? உயிரையும் உறிஞ்சிவிடுமல்லவா? நம் காதலிக்கு வரவிருக்கும் அத்தீங்கைத்தான் 'இருள்' என்று இவள் குறிப்பிட்டாள். அதை நாம் முதலில் உணர்ந்துகொள்ளவில்லை. காதலியை நாம் மணந்துகொண்டால் அவள் மனக்கவலை மாறிவிடும்; உடம்பு தேறிவிடும்; தீங்கும் நீங்கிவிடும். இதை நாம் விரைவிற் செய்யவேண்டும். ஏன்? இருளை விரைந்து ஓட்டும் ஒளிமிக்க முத்துக்களையுடைய கடற்கரை நாடனல்லவா நாம்!".*

"அது போகட்டும். நம் காதலியின் உடல் மெலிவைத்தான் எவ்வளவு நுட்பமாய் அறிவித்துவிட்டாள்! "கழன்று போகாதபடி சிறிய அளவையுடையனவா இவ் வளையல்கள்?" என்று கேட்கிறாள். இதன் கருத்தென்ன? "சிறிய அளவுடைய வளையல்கள் வேண்டும்" என்பதுதானா? இல்லையே! "காதலியின் உடம்பு கவலையால் மெலிந்துவிட்டது. மணம் புரிந்துகொள்வதே அதற்கு மருந்து. விரைந்து செய்க!" இதையல்லவா முறையிடுகிறாள் இவள்!"

தன் பெருமைக்குக் குறை தோன்றாதபடி நாகரிகமாகவும் நுட்பமாகவும் பேசிய தோழியின் கூரிய மதியைத் தன் மனத்துள் மிகவும் வியந்து பாராட்டினான் தலைவன்.

---

* "முத்தம் இருள்நீங்க இமைக்கும் துறைவனாதலின், இவட்கு வருகின்ற தீங்கைக் கடிதின் (-விரைவில்) நீக்கி வரைந்து (-மணந்து) கொள்ளவேண்டும் என்பதாம்."—பழையஉரை)

வதுவை வாழ்த்து

*

அரசன் மாளிகையோ என்று ஐயங்கொள்ளத்தக்க அழகிய வீடு. வீதியில் பந்தல் போடப்பட்டிருக்கிறது. பந்தல், மணிகளால் அணி செய்யப்பட்டு ஒளியுடன் களி செய்கின்றது. வாயிலில், மாவிலை தென்னங்குருத்துக் களின் தோரணம் தொங்குகிறது; வாழை மரங்கள், வாயிற் காவலர்கள் போல் நிமிர்ந்து நின்று, வருவோரை 'வாருங்கள்' என்று அழைப்பன போல், இலைகளையசைத்து எழில் செய் கின்றன! தென்னை, பனை, ஈந்து, கமுகு முதலியவற்றின் குலைகள், நாட்டின் வளத்திற்கு நல்ல சான்றாய் மிளிர்கின்றன. இத்தகைய சிறப்பால், இயற்கையழகு நிரம்பிய மங்கை செயற்கையணிகள் பூண்டு பொலிவுடன் ஒளிர்வது போல், கண்கொள்ளாக் காட்சியாய்க் கவின்பெற்றுத் திகழ்கிறது அவ்வீடு.

ஆண்களும், பெண்களும் பளபளப்பான ஆடைகளை யும், பொன்னணிகளையும் அணிந்தவர்களாய் அவ்வீட்டினுள் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். குழந்தைகள் மான்குட்டி கள் போல் குதூகலத்துடன் குதித்து ஓடி விளையாடுகிறார் கள். நாதசுரம், தவுல் முதலியவற்றின் கதம்ப ஒலி, எல்லோருடைய பேச்சொலியையும் அடக்கிக்கொண்டு வெற்றி வீறுடன் முழங்குகிறது! ஆம்: அவ்வீட்டில் திருமணம் நடைபெறுகிறது.

மணமகனும் மணமகளும் ஒருவர்க்கொருவர் புதியவ ரல்லர்; பழையவர்கள் தான். எத்தனையோ முறை பழகி மனங்கலந்த காதலர்கள். தனிமையிற் கண்டு பேசிக் களித்து உள்ளம் ஒன்று பட்ட காதலர்களுக்கு இன்று

எல்லார் முன்னிலையிலும் திருமணம் நடைபெறுகிறது! எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி! இது காதலர்களுக்கு மட்டுந்தான் களிப்புத் தருவதா? பெற்றோர்களுக்குப் பேரின்பந்தருவதல்லவா? மற்றவர்களும் மகிழக் கூடியது தானே?

'மற்றவர்கள்' என்று பொதுவில் கூறியது சரி. மண மகளின் உயிர்த்தோழி எவ்வளவு களிப்படைவாள் என்பதை எவரேனும் உணரமுடியுமா? விவரிக்கத்தான் கூடுமா?

திருமண நிகழ்ச்சியில் ஒரு உள் நிகழ்ச்சி: காதலியின் கூந்தலில் காதலன் மலரணிவதுதான், அது. அதனை உவப்போடு செய்கிறான், மணமகன். உற்றார், உறவினர், நண்பர் முதலிய யாவரும் கண்டு களிக்கிறார்கள். தோழியும் கண்குளிரக் காண்கிறாள். 'காண்கிறாள்' என்று சொன்னால் போதுமா? 'கண்களால் பருகுகிறாள்' என்றுதான் சொல்ல வேண்டும். உவகை பொங்குகிறது, அவள் உள்ளத்தில். இன்பமே வடிவாய்க் காதலரின் எதிரில் நிற்கிறாள்.

தோழியின் கரைகடந்த மகிழ்ச்சிக்குக் காரணமென்ன? காதலன் காதலியின் கூந்தலில் மலரணிவது இன்றுதான் புதிதா? இம்மாதிரி எத்தனையோ முறை நடந்திருப்பதை அவள் அறிவாள் – நேரிலேயே பார்த்திருக்கிறாள். ஆனால் இன்றுபோல் அன்றெல்லாம் எல்லோரும் காண நடந்ததா? இல்லையே! தனிமையில் – மறைந்த ஒழுக்கத்தில் அல்லவா நிகழ்ந்தது! காதலரின் மறைந்த ஒழுக்கம் வெளிப்படா திருப்பதில் தோழி எவ்வளவு கவலைகொண்டிருந்தாள்! எத்தனை பாடுபட்டிருக்கிறாள்! தலைவியை விரைவில் மணந்து கொள்ளும்படி தலைவனை எத்தனை வகையாக வேண்டியிருக் கிறாள்! ஊரார் பழி தூற்றாதிருக்கும் பொருட்டு எவரும் காணமல் காதலர் சந்திக்கும்படி என்னென்ன ஏற்பாடு

செய்திருக்கிறாள்! அவற்றையெல்லாம் அறிவார் யார்? இத்தனை அரும்பாடுபட்ட தோழி என்ன பயனை எதிர்பார்த்தாள்? இந்த மகிழ்ச்சியைத்தான். தோழியின் இன்ப உணர்ச்சியை எந்த மொழிகளால் எடுத்துரைப்பது?

தோழி நாற்புறமும் சுற்றிப் பார்க்கிறாள். ஆண்களும் பெண்களும் அழகொளிர அமர்ந்திருக்கிறார்கள். மணமக்களைச் சுற்றி மகளிரே குழுமியுள்ளனர். பொன் அணிகளும் பட்டாடைகளும் அணிந்த அவர்கள் தோழியின் உள்ளத்தில் ஒரு காட்சியை நினைவுக்குக் கொண்டுவருகின்றனர். *குறிஞ்சி நிலத்தில் மிகுதியும் பழகினவளல்லவா, அவள்! நெருப்பைப்போல் பூப்பூக்கும் வேங்கை மரத்தில் மயில்கள் உடகார்ந்திருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறாள். அக்காட்சி அவள் மனத்திரையில் தோன்றி இன்பமளிக்கிறது. மெல்லத் தலைவனிடம் நெருங்கி, மகிழ்ச்சிப் பெருக்குடன் அவனை வாழ்த்துகிறாள். ஆமாம், தனது உயிர்த்துணைவியின் காதலனைத்தான் வாழ்த்த அவள் மனம் பொங்கிய உவகையுடன் முனைகிறது. ஆனால், அவள் மொழிவது என்ன?

"எரிமருள் வேங்கை யிருந்த தோகை
இழையணி மடந்தையில் தோன்றும் நாட!
இனிதுசெய் தனையால்; நுந்தை வாழியர்!
நன்மனை வதுவை அயர இவள்
பின்இருங் கூந்தல் மலரணிந் தோயே!"

[எரிமருள் வேங்கை - நெருப்பையொத்த பூக்கள் பூத்துள்ள வேங்கை மரத்தில் : தோகை - மயில் : இழை அணி மடந்தையில் - ஆபரணங்களை அணிந்த பெண்ணைப்போல்; மயில் பெண்ணைப் போலவும், வேங்கை மலர்கள் பொன்னாபரணம் போலவும் தோன்றின

* குறிஞ்சி—மலையும், மலைசேர்ந்த இடமும்.

எனக்கொள்க : இனிது செய்தனை - இனிய செயலைச் செய்தாய் : ஆல், அசை : (இதற்குப் பொருள் இல்லை) நுந்தை வாழியர் - உன் தந்தை வாழ்க : நன்மனை - அழகிய வீட்டின்கண் : வதுவை அயர - திருமணம் செய்ய: பின் இருங்கூந்தல் - பின்னிய நீண்ட கூந்தலில்]

'நீ வாழ்க!' என்னுமல், 'உன் தந்தை வாழ்க!' என்ற தோழியின் நுட்ப அறிவைப் பாருங்கள் !.

தலைவன் மறைந்த ஒழுக்கத்தின்போது சொல்லிய மொழிப்படி தவறுமல் இப்பொழுது தலைவியை மணந்து கொண்டான். இன்னும், அவன் தலைவியை மணம் புரிந்து கொள்ளாமல் மறைந்த ஒழுக்கத்தில் அவளுடன் பழகி வரும்பொழுது, எவ்வித இழுக்குக்கும் இடமின்றிச் சிறப்பாகவே நடந்துகொண்டான்.* இவை தலைவனின் மேன்மைக் குணத்தை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. இப்பெருங் குணச் செல்வம் தலைவனிடம் அமைந்திருப்பதற்குப் பெரும் பொறுப்பாளி யார்? அவன் தந்தையல்லவா? "மகனறிவு தந்தையறிவு" என்பது பழமொழி. 'மகன் குணம் தந்தையின் குணம்' என்னும் புதுமொழி பொருந்துமல்லவா? மகனை அவையத்து முந்தியிருக்கச் செய்யும் தந்தை வாழ்த்தப்படுவதில் வியப்பென்ன இருக்கிறது? மூலத்தை அறிந்து மதிக்கும் தோழியின் நுண்ணறிவை எங்ஙனம் புகழ்வது?

* "மலர்ந்த வேங்கைக்கண் இருந்த தோகை, பொன்னணி மடந்தையில் தோன்று நாடவென்றது, நீ வரையாது ஒழுகுகின்ற ஞான்று நின் தமர் பொன்னணிந்த இன்று போலச் சிறப்பவொழுகினுய் என்பதாம்."—பழைய உரை.

*சுரமும் குளிர்ந்தது!

✻

கதிரவன் எவ்வளவு கொடியவன்! தன் கிரணம் என்னும் வன்னெஞ்சரைச் செலுத்தித் தனது கொடுங்கோல் ஆட்சியை நிலைபெறச் செய்துவிட்டானே?

வறியவன் இளமைபோல் வாடியிருக்கின்றன, மரங்கள். முகந்திரிந்து நோக்கிய அளவில் அகந்திரிந்து வாடிவிடும் விருந்தினரைப்போல், வாடிச்சுருண்டு கரிந்துவிட்டன, செடி கொடிகள். நிலமெங்கும் நீர்ப்பசையென்பதே அற்று விட்டது, கொடுங்கோல் மன்னரின் இரக்கமற்ற உள்ளம் போல!

ஃ

நீர் கிடைக்காதா என்று நாற்புறத்திலும் ஓடியலைந்தது ஒரு ஓநாய். அலைந்ததுதான் கண்ட பயன்; நீர் கிடைக்கவில்லை. ஏங்கி யிளைத்து வெயிலின் வெப்பம் பொறுக்காமல் ஒதுக்கிடம் பார்த்தது. குச்சியாய் நிற்கும் ஒரு மரத்தின் சிறு நிழலில் ஒதுங்கி உட்கார்ந்தது. பாவம்! நெடுந்தூரம் அலைந்ததால் ஏற்பட்ட களைப்பு அதற்கல்லவா தெரியும்! நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு நெடுமூச்செறிந்தது. நாக்கிலிருந்து சொட்டுச்சொட்டாய் வியர்வை நீர் வடிந்து கொண்டிருந்தது.

கருகிப்போன செடிகளின் புதரிலிருந்து மெள்ளத் தலை நீட்டியது, ஒரு குழிமுயலின் குட்டி. நீர் வேட்கையினால் மிகவும் வாடிவிட்டது போலும். ஓநாயின் அருகில் வந்தது. அதன் நாக்கிலிருந்து சொட்டும் நீர் தன் வாயில் விழும்படி வாய்க்கு நேரே உட்கார்ந்து கொண்டது! சிறிதளவாவது நீர் வேட்கை தணியுமல்லவா? நீர் வேட்கையின் கொடுமை

---

* சுரம்—பாலை நிலம்.

தான் என்ன? ஓநாய் தன்னைக் கொல்லும் பகை விலங்கு என்பதையும் மறக்கச் செய்து விட்டதே!

oo

காதலர்களான இரு மான்கள் காட்டு வழியில் சென்று கொண்டிருக்கின்றன! நீர் எங்கே கிடைக்கும்? இதுதான் இரண்டின் உள்ளத்திலு ் இடையறாது எழுந்து கூத்தாடும் கேள்வி. நான்கு பக்கங்களிலும் சுற்றியலைந்து பார்த்து விட்டன. இனி நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்ட நிலையில் சோர்ந்து மெதுவாய்த் தள்ளாடி நடந்துகொண்டிருக்கின்றன. அப்பொழுதும் நீர் கிடைக்காதா என்ற ஆவல் இரண்டின் கண்களிலும் குடிகொண்டிருந்தது. என்ன விந்தை! நீர்க்குட்டை ஒன்றை மான்கள் கண்டன. ஆனால்...?

ஒரு காலத்தில் — கார்காலத்தில் — நீர் இருந்த இடம் என்பதற்குச் சான்று பகர்வதுபோல் விளங்கியது அக்குட்டை; நீர் இல்லை! எங்கும் வண்டல் மண் உலர்ந்து பிளந்து பிளந்து காணப்பட்டது. ஏமாறிய மான்கள் ஏக்கம் நிறைந்த கண்களால், குட்டையின் எல்லா இடத்தையும் ஆராய்ந்தன, சிறிதாவது நீர்ப்பசை இருக்காதா என்ற ஆசையுடன். ஆசை வீண் போகவில்லை. ஒரு ஓரத்தில் இரண்டொரு துளி நீர் தென்பட்டது!

இரண்டு மான்களில் எது வாயை வைத்தாலும் பிறகு நீர் இருக்காது. ஒரு மான் தன் நாவை நனைத்துக் கொள்ளலாம். இப்பொழுது எந்த மான் நீரைக் குடிப்பது?

பெண் மான் குடிக்கட்டுமென்று ஆண் மான் சிறிது பின் வாங்கி நின்றது. விலங்காயிருந்தால் என்ன? ஆண்மைக் குணம் அதற்கும் உண்டல்லவா? ஆனால் ஆண் மானின் குறிப்பைத் தெரிந்து கொண்டு பெண் மானும் பின்

வாங்கி, ஆண் மானுக்குப் பின்னால் போய் நின்றது. கணவன் பருகாமல் மனைவி பருகுவது கற்பு நெறிக்கு இழுக்கல்லவா! ஆண் மான் இதைப் புரிந்து கொண்டது! உடனே நீர் அருகிற் சென்று தலையைத் தாழ்த்திக் குடிப்பது போல் பாசாங்கு பண்ணியது! பெண் மான் நீரைக் குடித்தது!

* * *

இப்பாலை நிலத்தின் இடையில் விரைந்து ஓடிக்கொண்டிருக்கிறது, ஒரு தேர்! ஆண் சிங்கம் போல் அமர்ந்திருக்கிறான், போர்க் கோலம் பூண்டு விளங்கும் ஒரு வீரன். உடம்பில் வியர்வை துளிக்கிறது. வெப்பம் தாங்காமல் பெருமூச்செறிகிறான். ஆயினும் உள்ளக் கிளர்ச்சியுடனேயே தோன்றுகிறான். வழியின் இரு மருங்கிலும் உள்ள காட்சிகளில், திரும்பித் திரும்பித் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டு செல்கிறான்.

நெடுமால் போல் நிமிர்ந்து வளர்ந்துள்ள மூங்கில்கள், பசுமை நிறம் மாறி உலர்ந்து போய் நிற்கின்றன. பாறைக் கற்களெல்லாம் பாளம் பாளமாய்ப் பிளந்து கிடக்கின்றன. வெயிலின் விளையாட்டுக்களான இவை வீரன் மனத்தில் பதிகின்றன.

அதனால் தான் வெப்பத்தின் கொடுமையை உணராமல் இருக்கிறானோ? இருந்தாற் போலிருந்து அவன் முகம் மலர்வது ஏன்? சுரம் சுடும் பொழுது முகத்தில் புன்சிரிப்பு அரும்புவதற்குக் காரணமென்ன?

* * *

காதலன்:—இதோ! என்னைப்பார்!... மாட்டாய்?... அடேயப்பா, எவ்வளவு கோபம்! என்னோடு இனி பேச மாட்டாயல்லவா?

காதலி :—ஆமாம்.

காதலன் :—(கலகலவென்று நகைத்து) 'ஆமாம்' என்று பேசிவிட்டாயே!

காதலி :—அப்படித்தான் பேசுவேன்.

காதலன் :—'பேசமாட்டேன் என்றால் பேசாமலேயே இருக்கவேண்டும். பிறகு 'அப்படித்தான் பேசுவேன்' என்றால், முன்னுக்குப் பின் முரணல்லவா?

காதலி :—அது என் விருப்பம்.

காதலன் :—முன்னுக்குப் பின் முரணாக நடப்பதா உன் விருப்பம்?

காதலி :—ஒருவர் எப்படி நடக்கிறாரோ, அவரிடம் அப்படித்தானே நடக்கவேண்டும்?

காதலன் :—ஆமாம். ஆனால், நான் அப்படி நடக்க வில்லையே!

காதலி :—யாருக்கும் தங்கள் முதுகு தெரியாது!

காதலன் :—நான் முன்னுக்குப் பின் முரணாக நடக்கிறேன் என்கிறாயா?

காதலி :—ஆம்.

காதலன் :—எப்படி?

காதலி :—நினைத்துப் பார்த்தால் விளங்குகிறது.

காதலன் :—விளங்கவில்லையே!

காதலி :—என் வாயைக் கிளறுவதற்காக வேண்டுமென்றே பேசினால் எப்படி விளங்கும்? சரி, நமது திருமணம் முடிந்ததும் நாம் முதன்முதலாகத் தனியறையில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தபொழுது தாங்கள் அளித்துள்ள வாக்குறுதி என்ன? நினைவிருக்கிறதா?

காதலன் :—ஆம்: நன்றாய் நினைவிருக்கிறது! "நான் என்றும் உன்னை விட்டுப் பிரியேன்" என்று சொன்னேன்!

காதலி :—நல்லது! சற்று நேரத்திற்கு முன் என்ன தெரிவித்தீர்கள்?

காதலன் :—ஓகோ! இப்படியா என்னை மடக்குகிறாய்! புரிந்தது! புரிந்தது!! "வெளியூர் செல்ல வேண்டும்;

விடை தா" என்று நான் கேட்டது முன் சொன்னதற்கு முரண் என்கிருய்! அப்படித்தானே?

காதலி :—தாங்கள் அவ்வாறு கருதவில்லையா?

காதலன் :—எவ்வாறு?

காதலி :—முரண் என்று—

காதலன் :—முரண் ஏது?

காதலி :—இப்படிச் சொல்லி ஏமாற்றி விடலாமென்ற எண்ணமோ?

காதலன் :—உன்னை ஏமாற்ற முடியுமா?

காதலி :—இப்படிச் சொல்வதே ஏமாற்றுப் பேச்சு தான்! அது போகட்டும். தாங்கள் வாக்குறுதிப்படி நடக்கப் போகிறீர்களா, இல்லையா?

காதலன் :—வாக்குறுதியிலிருந்து அணுவளவும் தவற மாட்டேன்!

காதலி :—(ஆவலுடன்) அப்படியென்ருல் வெளியூர் போகவில்லையா?

காதலன் :—பயணத்தை நிறுத்தி விட்டேன் என்று நான் சொல்லவில்லையே!

காதலி :—பின் எப்படித் தங்கள் வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்?

காதலன் :—உன்னை விடுப் பிரிந்தால் தானே வாக் குறுதி தவறும்?

காதலி :—(அடங்கா மகிழ்ச்சியுடன்) ஓகோ! என்னை யும் அழைத்துக் கொண்டு போக முடிவு செய்திருக்கிறீர் களா? தெரிந்து கொண்டேன்!

காதலன் :—அப்படியொன்றும் நான் எண்ணவில்லையே!

காதலி :—(சலிப்புடன்) தாங்கள் பேசுவது எனக்குச் சிறிதும் புரியவில்லை!

காதலன் :—எப்படிப் புரியும், என் வாயைக் கிளற வேண்டுமென்றிருக்கும்பொழுது !

காதலி :—..............

காதலன் :—சரி : நானேதான் விளக்கிக் கூறவேண்டுமோ ?

காதலி :—உம்.

காதலன் :—கேள், சொல்கிறேன். நீ எப்பொழுதும் எங்கிருக்கிறாய் தெரியுமா ? (நெஞ்சைத் தொட்டுக் காட்டி) இங்கு ! நீ எப்பொழுதும் என் மனத்திலேயே குடிகொண்டிருக்கும்பொழுது, நான் எங்கே போனால் என்ன ? உன்னை விட்டுப் பிரிய முடியுமா ?

காதலி :—(நாணம் நிரம்பிய காதல் உணர்ச்சியுடன்) தாங்கள் பேச்சில் வல்லவர் என்பதை நன்கு காட்டிவிட்டீர்கள் ! சரி, நான் தங்கள் மனத்தில் சுமையாய் இருப்பதை விட, தங்கள் அருகில் உதவியாய் இருப்பது எவ்வளவு நல்லது ! என்னையும் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்.

காதலன் :—எங்கே ?

காதலி :—போர்க்களத்திற்கு.

காதலன் :—அங்கு வந்து என்ன செய்வாய் ?

காதலி :—ஏன் எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கிறீர்களா ? அல்லது போர்க்களத்தைக் கண்டதும் அஞ்சி நடுநடுங்கி விடுவேன் என்று எண்ணிவிட்டீர்களா ?

காதலன் :—நான் நினைக்காதவையெல்லாம் உன் மனத்தில் ஏன் தோன்றுகின்றன !

காதலி :—(வெட்கி) பெண்ணியல்பைச் சுட்டுகிறீர்கள்! இருக்கட்டும். நான் கூடவிருந்தால் தங்களுக்கு ஏற்படும் களைப்பைப் போக்கிப் பலவகையிலும் உதவியாயிருந்து ஊக்கமூட்டுவேன்.

காதலன் :—உன் வீர மனப்பான்மையைக் கண்டு பெருமிதமடைகிறேன். உன்னைப் பிரிந்து சென்றால் மிகவும் வருந்துவாயோ என்று நான் கொண்டிருந்த ஐயம் இப்பொழுது அகன்று விட்டது.

காதலி :—என்னைப் புகழ்வது இருக்கட்டும். அழைத்துக்கொண்டு போக முடியாது என்று தானே சொல்கிறீர்கள்!

காதலன் :—இதோ பார்! நான் சொல்வதைப் பொறுமையாய்க் கேள்! பெண்களைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போக அரசரது உடன்பாடு வேண்டும்.

காதலி :—அரசரைக் கேட்டால் உடன்படுகிறார்.

காதலன் :—அரசர் புறப்படத் தயாராய் விட்டார். இனி அவரிடம் செல்வது விரும்பத் தக்கதன்று.

காதலி :—தங்களுக்கு என்னை அழைத்துச் செல்ல விருப்பமில்லை. அதற்கு ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிறீர்கள்? இனி நான் தங்கள் பயணத்திற்கு இடையூறாய் நிற்கவில்லை. எப்பொழுது வருவீர்கள்? அதையாவது உறுதி செய்து விட்டுப் போய் வாருங்கள்!

காதலன் :—அதுதான் சரி. கார்காலம் தொடங்கியதும் நான் உடனே விரைந்து வந்து உன்னைக் கண்டு மகிழ்வேன். இடையிடையே எனது செய்திகளைத் தூதுவர், பாணர் முதலியோரின் வாயிலாக அறிவாய். நீ வீரன் மனைவி—வீரப்பெண்மணி. கலங்கா மனத்துடன் பொறுத்திரு. அதோ எக்காளம் முழங்குகிறது! அது நமது மன்னர் தேரில் ஏறிவிட்டார் என்பதற்கு அறிகுறி. இனி நான் நேரம் போக்கலாகாது. போய் வரட்டுமா?

காதல் நிறைந்த கண்களுடன் தலையசைக்கிறாள், காதலி. காதலன் செல்வதைக் காண முடியாதபடி அவள் கண்களை மறைக்கிறது கண்ணீர்!

* * *

இப்பொழுது விளங்குகிறதல்லவா, வீரன் மகிழ்ந்ததற்குக் காரணம்? தன் காதலியின் இனிய தன்மைகளை எண்ணியெண்ணி, அந்த இன்ப ஓடையில் தன் மனப் படகைச் செலுத்திக் கொண்டிருப்பவனுக்கு, வெயிலின் வெப்பம் தோன்றுவது ஏது? அவன் மொழிகளையே கேட்போம்!

"நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின முன்னே; இனியே
ஒள்நுதல் அரிவையை உள்ளுதோறும்
தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே"

[கழை - மூங்கில்; முளிய - உலர; வேனில் - கோடை; கடுங்கதிர் ஞாயிறு - கொடிய கிரணத்தையுடைய சூரியன்; கல் பக; பாறை பிளக்கும்படி; தெறுதலின் - அழித்தலால்; ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; அரிவை - பெண்; உள்ளுதோறும் - நினைக்குந்தோறும்; தண்ணிய - குளிர்ச்சியுடையனவாய்; சுரம் - பாலைநிலம்; ஆறு - வழிகள்.]

மிக வெப்பமாய் இருக்கும் பாலை நிலத்தின் வழிகள் காதலியை எண்ணும்பொழுதெல்லாம் குளிர்ந்துவிடுகின்றனவாம்! இது என்ன மாயவித்தையாய் இருக்கிறதே என்று தோன்றுகிறதல்லவா?

சுரம் உண்மையிலேயே குளிர்ந்துவிடவில்லை. காதலன் காதலியை எண்ணுவதில் — அவள் நறுங்குணத்தை மனங் கொள்வதில் — வெப்பத்தை உணராமல் தன்னை மறந்துவிடுகிறான். அவ்வளவுதான். இந்த நுட்பம் எவ்வளவு நன்றாய் இச்செய்யுளில் மிளிர்கிறது!

மாலைப் பொழுதே—!

❋

"மின்னற்கொடிதான் விண்ணிலிருந்து நழுவி மண்ணில் விழுந்துவிட்டதா? மேனகைதான் இந்திரசபையை வெறுத்து இறங்கி இங்கு வந்துவிட்டாளா?"

இப்படி அறிவைக் கலக்கி வியப்பில் வீழ்த்தி விடுகிறாள், அழகுக் குவியலாய் அமர்ந்திருக்கும் அம்மடமங்கை. உப்பங்கழிக்கரையில் உட்கார்ந்திருப்பதால் கடல் தெய்வந்தான் கன்னியுருக்கொண்டு கண்கொள்ளா வனப்புடன் காட்சியளிக்கிறதோ என்றும் திகைக்க வைத்துவிடுகிறாள்! ஆனால், சோகமெல்லாம் திரண்டெழுந்த வடிவமாய்த் தோன்றுகிறாள், அசோக மரத்தின் அடியில் அமர்ந்திருந்த சீதையைப் போல!

எழிலரசியாய் இலங்கும் அவளுக்கு அப்படி என்ன நேர்ந்துவிட்டது? பட்டப் பகலில் வந்து இங்கு உட்கார்ந்திருப்பதன் நோக்கம்தான் என்ன?

வேறொன்றுமில்லை; காதலனைப் பிரிந்த கலக்கந்தான் அவளுக்கு. காதலன் வேற்றூர் சென்றுவிட்டான். தன் பிரிவால் காதலி துயரமடைவாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆயினும் கடமை பெரிதல்லவா? போர் புரியப் போய்விட்டான். காதலி தனித்திருக்கிறாள். அவளைத் துன்புறுத்துகிறது, காதல் நோய்.

இந்நோய் காலையிலே அரும்பும்; பகலிலே போது ஆகும்; மாலையிலே மலரும். இந்நோய் கொண்ட அவளுக்கு இரவில் கண்ணுறக்கம் ஏது? ஊராரெல்லாம் தூங்குவார்கள்; விலங்கு, பறவைகளெல்லாம் கண்ணுறங்கும். ஆனால், காதலியின் கண்ணிமைகள் ஒன்றோடொன்று ஒட்டமாட்டா. இதைவிட வேறு என்ன துன்பம் வேண்டும் அவளுக்கு?

ஆகையால் மாலைக் காலத்தை எண்ணினாலே போதும்; பகீரென்று பற்றும் அவள் நெஞ்சு! ஏன்? மாலைக்குப் பிறகுதானே அக்கொடிய இரவு வருகிறது? இந்த நிலையில் ஒரு நாள் கழிவது ஒரு யுகமாகவே தோன்றுகிறது அவளுக்கு!

பகல்வேளையில் காதலனையே நினைத்துப் புலம்பும் அவள் மாலையில் மன ஆறுதலின் பொருட்டுக் கடற்கரையிலும் அதனைச் சார்ந்த உப்பங்கழிக்கரையிலும் சென்றிருப்பது வழக்கம். இன்று தனிமைத் துன்பம் மிகவும் வருத்தியதால், வழக்கத்திற்கு முன்பாகவே—பகலிலேயே—வந்து இயற்கைக் காட்சிகளைக் காணலானாள்.

நீலத்திரைக் கடலின் கோலத்தில் மனத்தைப் பறி கொடுத்து மணிக்கணக்காய்த் தன்னை மறந்து நிற்கும் இயல் புடையவள், அவள். ஓயாது வந்து கரையில் மோதும் அலைகளை நோக்கிய வண்ணம் சிந்தனையுலகிற் புகுந்து சிலை போல் நின்று விடுவதுமுண்டு. உப்பங்கழியிலுள்ள நெய்தல் மலர்களைக் கண்டு அவள் முகமும் மலரும்; நாரைகளைக் கண்டு களிப்பாள்; பிடிப்பதற்காக அருகிற்போய், அவை அஞ்சியோடுவதைப் பார்த்து, கெக்கலி கொட்டி நகைப்பாள். ஆனால், இன்று ஒன்றிலும் அவள் பார்வை பதியவில்லை. உப்பங்கழிக் கரையில் வந்து உட்கார்ந்து விட்டாள்.

ஊனக்கண் ஒன்றையும் நோக்கவில்லையென்பது உண்மை தான். ஆனால் மனக்கண் விழிப்பாகவே வேலை செய்கிறது. காதலன் தன்னிடம் முன்பு ஒழுகிய இன்ப நிகழ்ச்சிக ளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் அவள் உள்ளத்தில் உருப் பெற்று மாறிமாறித் தோன்றி இன்பம் செய்கின்றன, படக் காட்சி போல! ஒரு நொடியில் இவை மறைகின்றன. பிரிந்த காதலன் மீண்டு வருகிறான். எதிர் சென்று கண்டு களிகூர்கிறாள், காதலி. பிறகு காதலர்கள் கூடி மகிழ்கிறார்

கள். இது அடுத்த காட்சி. இப்படி அடுத்தடுத்து எத்தனையோ இன்பக் காட்சிகள். இடையிடையே துன்பக் காட்சிகளும் தோன்றும். என்செய்வாள்? பிரிந்த காதலனின் பின்னால் தன் மனத்தையும் போக்கி விட்டாள், அப்பேதை!

அவள் வந்து உட்கார்ந்து நெடுநேரமாகிவிட்டது. அதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பதுமைபோல் அசையாமல் ஒரே நிலையில் இருக்கிறாள். உடம்பு அசைய வில்லைதான்; உள்ளந்தான் அசைகிறதே! அவளுக்கு நேரம் போவது எப்படித் தெரியும்?

பறந்து செல்லும் நாரை ஒன்று கத்தியது. அவ்வொலி அவளை விழித்து வெளி உலகத்தைப் பார்க்கச் செய்தது. நாற்புறமும் சுற்றிப் பார்க்கிறாள். அவள் முகத்தில் வியப்புக்குறி படர்கிறது; அச்சத்தின் அறிகுறியும் அத்துடன் கலக்கிறது.

"நான் பகற்பொழுதில் அல்லவா இங்கு வந்தேன்! அதற்குள்ளேயா மாலை நேரம் வந்து விட்டது! இஃதென்ன விந்தை! நான் வந்து கொஞ்ச நேரந்தானே ஆயிற்று!" என்று முணுமுணுக்கிறாள். உடனே உப்பங்கழியிலுள்ள நெய்தல் மலர்களைப் பார்க்கிறாள். அவை இதழ் குவிந் திருக்கின்றன.*

அவளுக்கு ஐயமின்றித் தெரிந்து விட்டது, மாலைக் காலந்தான் வந்து விட்டது என்று. 'இரவு என்னும் எமன் இதோ வந்து விட்டான் என்பதை முன்னமேயே அறிவிக் கும் தூதனல்லவா இது!' என்று எண்ணியதும், அவள் இதயம் சோர்ந்து விட்டது; உடல் தளர்ந்து விட்டது! மாலைப் பொழுதின் மீது சீறிக்கொண்டு எழுகிறது, கோபம்! நிந்தையாகப் பேசுகிறாள்:

---

* நெய்தல் மலர் காலையில் மலர்ந்து, மாலையில் குவியும்.

"மாலைப் பொழுதே! உனக்கு இரக்கமே கிடையாதோ? என் காதலர்—குளிர்ந்த கடற்கரையிலுள்ள நாட்டின் தலைவர்—என்னைப் பிரிந்து சென்றிருக்கிறார் இப்பொழுது. பிரிந்தாரை வருத்தும் நீ இதுதான் சமயமென்று உன் விருப்பம்போலெல்லாம் வந்து துன்புறுத்தலாமென்று எண்ணியிருக்கிறாயா? கேள்வி முறையே கிடையாது போலிருக்கிறதே! வழக்கம்போலவே வருகிறாயென்று எல்லோரும் நினைக்கும்படி நடுப்பகலிலேயே வருகிறாயே! உன் முறைகேட்டைக் கேட்பார் ஒருவரும் இல்லையா? இதோ வளைந்து செல்லும் உப்பங்கழியிலுள்ள நெய்தல் மலர்கள் குவிந்து விடும்படி இனி நீ காலையிலேயும் கூட வருவாய் போலிருக்கிறதே! அப்படி வந்தாலும் உன்னைத் தடுப்பார் யார்? ஒருவருமில்லை!"

"தண்கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையில்
கடும்பகல் வருதி, கையறு மாலை!
கொடுங்கழி நெய்தலும் கூம்பக்
காலை வரினும் களைஞரோ இலரே!"

[சேர்ப்பன் - நெய்தல் நிலத்தலைவன்; கடலும் கடற்கரையடுத்த நிலமும் நெய்தல் எனப்படும்: பிரிந்தென - பிரிய: பண்டையில் - முன் வருங்காலத்தில் வந்தாற்போல; வருதி - வருகிறாய்; கையறு மாலை - செயல் அறுதற்குக் காரணமாகிய மாலைக்காலமே!; கொடுங்கழி - வளைந்து செல்லும் உப்பங்கழி; கூம்ப - குவிய; களைஞர் - விலக்குவோர்.]

மாலையை நிந்திக்கிறாளா, தன் மன வேதனையை வெளியில் கொட்டுகிறாளா? ஒரு குற்றமும் புரியாத மாலைக் காலம் அவளுக்குப் பெருங்குற்றவாளியாகவும் கொடுங்கோல் அரசன் போலவும் தோன்றுவது ஏன்? காதல் செய்யும் விளையாட்டா இது?

பிரிந்த காதலரின் உள்ளத்தில் என்னென்னவோ விந்தைகள் நிகழ்கின்றன! சந்திரன் நெருப்பாய்க் காய்கிறான்! தென்றல் சுடுகிறது! சந்தனம் செந்தீயாய்க் காந்துகிறது! இப்படிப் பொருள்களின் நிலையே திரிந்து விடுகின்றனவே, பொழுதின் நிலைதானா மாறியதாகத் தோன்றாது?

மங்கையின் உள்ளத்தில் மாலைப்பொழுது பகலிலேயே வந்துவிட்டதுபோல் தோன்றியதில் வியப்பில்லை. 'காலையிலும் வருவாயோ' என்று வினவுகிறாளே, அதில் அவள் உள்ளத்தின் உணர்ச்சி பொங்கிய வியப்புடன் ஒளிர்கிறதல்லவா?

காதலியின் பிரிவாற்றாமையை எவ்வளவு நன்றாய் எடுத்துக்காட்டுகிறது, இச்செய்யுள்!

[45-ஆம் பக்கக் குறிப்பு]

*நாழிகை வட்டில்:—பண்டைக்காலத்தில் கடிகாரம் கிடையாது. ஆகையால் பழந்தமிழர்கள் பொழுதை அளந்தறிவதற்கு ஒரு கருவியை அமைத்திருந்தார்கள். அஃதாவது, நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தின் அடியில் சிறு தொளை செய்து, அதன் வழியாக ஒரே அளவாக நீர் வெளிப்படும்படி செய்திருந்தார்கள். அதிலிருந்து சிறு சிறு துளியாக வரும் நீரைக்கொண்டு நாழிகையை அறிந்தனர். இதற்கு 'நாழிகை வட்டில்' என்று பெயர்.

காதலும் கடமையும்

✻

மெல்லென வீசும் குளிர்ந்த காற்றில் மிதந்து வந்து ஒலிக்கும் அக்குரலில் எவ்வளவு சோகம்! உள்ளத்தில் தேங்கிய ஏக்கவெள்ளம் கரை புரண்டு வெளிப்பட்டது போல் அலையலையாய் வருகின்றன உருக்க மொழிகள்!

இரவின் அமைதியைக் கலைத்துக் கொண்டு எங்கிருந்து எழுகிறது அக்குரல்? ஆண் குரல் என்பதில் ஐயமில்லை. அவனுக்கு என்ன கவலை? காதலியைப் பிரிந்த கலக்கமோ?

* * *

நடுக்காட்டில் விளக்கொளி விளங்குகிறதே, அது என்ன சிற்றூரா? முன்னே அங்கு ஊர் இருந்ததாகத் தெரிய வில்லையே!

தழைவேய்ந்த குடிசைகள் எவ்வளவு ஒழுங்காய் வரிசை வரிசையாக அமைக்கப் பட்டிருக்கின்றன! எல்லாம் ஒரே மாதிரியாய் இருப்பது ஏன்? கூடாரங்களோ!

இது என்ன மதில் போல் நான்கு புறத்திலும் முள் வேலி இடப்பட்டிருக்கிறதே! அதோ யானைகள், குதிரைகள் எல்லாம் காணப்படுகின்றன! இதோ வாள், வில், தூணி, எறிகோல், கிடுகு முதலிய படைக்கலங்களெல்லாம் வைக்கப் பட்டிருக்கின்றன! சரி, சரி! அரசன் படையெடுத்து வந்து தங்கியிருக்கும் இடமல்லவா இது! ஆம்; பாசறைதான்!

தழைக் குடிசைகளில் வீரர்கள் யாவரும் கண்ணுறங்குகிறார்கள். பகல் முழுவதும் போர் புரிந்து வந்த களைப்பு மிகுதியாய் இருக்குமல்லவா? எத்தனை குடிசைகள்! எவ்வளவு வீரர்கள்!

நடுவில் அமைந்து உயர்ந்து விளங்கும் குடிசை அரசனுடைய இருப்பிடம். பல நிறமுள்ள மதில் திரை

கட்டப்பட்டிருப்பதே அவ்விடத்தைத் தனியாகச் சிறப்பித்துக் காட்டுகிறது. ஆட்கள் சிலர் அங்குள்ள விளக்குகளைத் தூண்டிச் சுடர் விட்டு எரியும்படி செய்து இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்கின்றனர். மெய் காப்பாளர் காவலாகச் சூழ்ந்து திரிகின்றனர். *நாழிகை வட்டிலால் பொழுதையறிந்து கூறுவோர் நேரத்தை அவ்வப் பொழுது அறிவிக்கின்றனர்.

படுக்கையில் ஒரு கை வைத்தும், ஒரு கையில் தலையைத் தாங்கியும் தோன்றுகிறவன் தான் அரசன் என்று அறியலாம். அவன் உள்ளத்தில் அன்று நடந்த போர் நிகழ்ச்சிகள் மோதி யலைக்கின்றன என்பதை அவன் முகம் நன்கு காட்டுகின்றது.

யானைகளின் துதிக்கைகள் பாம்பு பதைப்பதைப் போல் நிலத்தில் விழுந்து பதைக்கும்படி வாளினாலே வெட்டி வீழ்த்தி வெற்றியை உண்டாக்கிச் செஞ்சோற்றுக் கடன் கழித்து இறந்த வீரர்களை எண்ணுகிறான்! அம்புகள் தைக்கப்பெற்று உடம்பெங்கும் புண்ணாகி வருந்தும் குதிரை களை நினைக்கிறான்! இப்படிப் பல சிந்தனைகள். யாவரும் கண்ணுறங்கும்போது அரசனுக்கு எத்தனை கவலைகள்!

அரசனைத் தவிர யாவருமா கண்ணுறங்குகிறார்கள்? அவ்வாறு சொல்வது சரியன்று. ஏன்? போரில் காயம்பட்ட வீரர்களுக்குக் கண்ணுறக்கம் ஏது? உடற் புண் வேதனையில் தூக்கம் பிடிக்குமா? உடற்புண் இருக்கட்டும். மனப் புண்ணும்—உற்றாரைப் பிரிந்த துயரம், காதலியைக் காண வேண்டுமென்னும் ஏக்கம் முதலியன—கண் துஞ்சாமைக்குக் காரணமல்லவா? இப்படி எத்தனை பேர் கண்ணுறங்காமல் கலங்குகிறார்களோ! * * *

இதோ இந்தக் குடிசையிலிருந்து தான் சோகக் குரல் வருகிறது. தனிச் சிறப்புடன் அமைந்திருக்கும் இவ்விடத்

*43-ஆம் பக்கம் பார்க்க.

தின் அமைப்பு, படைத்தலைவனின் இருப்பிடம் என்பதை எடுத்துக் காட்டுகிறது!

படைத்தலைவனுக்கு என்ன கவலை? போரைப் பற்றியா? வீட்டைப்பற்றியா? இதோ அவன் மொழிகளாலேயே அதனை அறிவோம்:

"நெஞ்சே! கார்காலமோ தொடங்கி விட்டது. இந்நிலையில் நம் காதலி எவ்வளவு வேதனை கொள்வாள்! நம்மைப்பற்றித்தான் என்ன எண்ணுவாள்! வாக்குறுதியளித்தவாறு வரவில்லையென்று பெருஞ்சீற்றம் கொள்வாளே! இங்கு நாமிருக்கும் நிலையை எவ்வாறு உணர்வாள் அவள்!"

"அகன்ற வானமெல்லாம் மறைந்துவிட்டது மேகக் கூட்டங்களால். கதிரவன் ஒளியைக் காண்பதும் கனவாய் விட்டது. பெண் யானைகளுடன் கூடிய ஆண் யானைகளின் கூட்டம் நனைந்து குளிரும்படி மிகுதியாகச் சொரிகிறது மழை. ஆயினும், வேற்படைகள் மின்னும் பாசறையில், வெற்றியால் விளையும் புகழை மேலும் விரும்பிப் பகைவருடன் மாறுபட்டுக் கண்ணுறங்காமல் இருக்கிறான் அரசன்! போரை நடத்தும் பொறுப்போ நம்மைச் சேர்ந்திருக்கிறது! நாம் என் செய்வது?"

"இவ்வேளையில் நம்மையே எண்ணி எதிர்நோக்கியிருப்பாளல்லவா, நம் காதலி! காயா, கொன்றை, முல்லை, தவளம் முதலிய மலர்கள் இதழ்விரிந்து கார்ப்பருவத்தைக் காட்டி அவளை வருத்துமே! கோவலர் புல்லாங்குழலில் ஊதும் செவ்வழிப் பண்ணைக் கேட்டால் தனிமையில் இருக்கும் அவள், உயிர் வாடுவாளே!"

காதலியை எண்ணிக் கலங்கும் காதலன் உள்ளத்தில் சிறிது சினம் எழுகிறது அரசன் மீது! அத்துடன் அவன் மனத்தில் பொங்கிய ஆவலுமல்லவா வெளிப்பட்டுவிடுகிறது!

" நமது வேந்தனுக்கு நாடு பிடிப்பதில்தான் எவ்வளவு ஆசை! வானமளாவிய எத்தனையோ கோட்டைகளைப் பிடித்து விட்டானே! அவைகள் போதாவா? வெற்றி முரசம் வீறிடுகிறதே! போரை நிறுத்தி விட்டால் என்ன? அவ்வாறு செய்தால் இப்பொழுதே புறப்பட்டு விடுவேனே என் காதலியைக் காண்பதற்கு! நெடுந்தொலை என்று நினைக்க மாட்டேனே! தேரில் ஏறிச் சென்று ஒளியுடன் விளங்கும் பிறைச் சந்திரனைப் போல் அழகொளி வீசும் நெற்றியை யுடைய அவளைக் கண்டு களி கூர்வேனே!"

" நனிசேய்த் தென்னாது நற்றேர் ஏறிச்சென்று
இலங்கு நிலவின் இளம்பிறை போலக்
காண்குவெந் தில்ல அவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுயர் அரண்பல வௌவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே "

[நனி சேய்த்து என்னாது - (காதலியின் இருப்பிடம்) மிகவும் தொலைவில் இருக்கிறது என்று நினைக்காமல்; இலங்கு நிலவின் - விளங்குகின்ற ஒளியினையுடைய; காண்குவெம் - பார்ப்போம்; தன் நெஞ்சையும் உளப்படுத்திப் பேசுகிறான்: கவின்பெறு சுடர் நுதல் - அழகு பொருந்திய ஒளியுடைய நெற்றி; விண் உயர் அரண் - வானளாவி உயர்ந்துள்ள மதில்கள்; வௌவிய - கவர்ந்த; மண்ணுறு முரசின் - மார்ச்சனை பொருந்திய வெற்றி முரசினை யுடைய: தொழில் விடின் - போர்செய்கையை நிறுத்துவானானால்: 'தில்ல' - இது விருப்பத்தையுணர்த்தும்.]

காதல் உணர்ச்சி ஒரு புறம்; கடமை உணர்ச்சி மற்றோர் புறம். இரண்டும் போரிடுகின்றன, வீரன் மனத்தில்.

புறத்தில் நிகழ்ந்த போரில் தளராது முன்னின்று பொருது வென்ற வீரன், அகத்தில் நிகழும் போரில் தளர்ந்து வருந்துவது விந்தையாக இருக்கிறதல்லவா?

வீரன் உள்ளத்தில் வெற்றி மாலை சூடி விளங்குவது எது? காதலா, கடமையா?

"பாணன் வந்தான்"

⁂

காதல்நோய் வருத்தும் உள்ளத்தில் கோபத்தீ மூண்டு எழுகிறது, அடியுண்ட நாகம் சீறியெழுவதைப்போல! புருவங்கள் நெற்றியில் ஏற, கண்கள் சிவக்கக் குரல் உச்ச நிலையை எய்துகிறது.

'நம் எதிரில் நிற்பவன் பாணன்; நமது காதலனால் அனுப்பப்பட்டவன். அவனிடம் கோபமொழிகளைக் கொட்டுவது சரியன்று; பயனுமில்லை.' இப்படியெல்லாம் எண்ணுவதற்கு இடந்தந்ததா அக்கோபம்?

தலைவிக்கு இவ்வளவு கோபம் ஏற்பட்டது ஏன்? தன்னிலை மறந்து சினமொழிகளைச் சிந்துவதற்கு என்ன காரணம்?

அவளது அப்போதைய உணர்ச்சியும், உடலும் இருந்த நிலையில் பாணன் உரைத்த மொழிகள் அமைதியற்றிருந்த அவள் நரம்புகளிற் பாய்ந்து சினத்தை ஊட்டிவிட்டன.

* * *

மழை பெய்து விட்ட மாலைக்காலம். ஊர்ப்புறத்திலுள்ள பாக்கத்தில் ஒரு சிறு கோயில். வயது முதிர்ந்த பெண்கள் சிலர், நெல்லும் முல்லை மலரும் தூவிக் கடவுளை வழிபடுகின்றனர்; கைகுவித்துக் கண்மூடி நிற்கின்றனர். நெடுநேரம் ஆகியும் அவர்கள் அந்த நிலையிலேயே இருக்கின்றனர். எதையோ எதிர்பார்த்து நிற்பதாக அவர்கள் முகக் குறியிலிருந்து புலனுகிறது. திடீரென்று அவர்களின் முகம் மலர்கிறது. உடனே கண்களைத் திறந்து அகங்களிக்க முகம்பூக்க விரைந்து புறப்படுகின்றனர். அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணமென்ன?

கோயிலின் அருகில் இடையர் சேரி. ஒரு வீட்டின் தொழுவத்தில் பசுவின் கன்றொன்று கட்டப்பட்டிருக்கிறது.

பகல் முழுவதும் தாயைப் பிரிந்த அச்சேய் பாலுண்ணும் விருப்பம் மிகுந்து, தாய் வருகையை ஆவலுடன் எதிர் நோக்கி, நிலை கொள்ளாமல் கட்டுமுளையைச் சுற்றிச்சுற்றி வருகிறது; 'அம்மா' என்று அலறுகிறது.

இதைக் காண்கிறாள், அக்கன்றினிடம் தோழமை பூண்ட அவ்வீட்டு இடைச்சிறுமி. அவள் உள்ளத்தில் இரக்கவுணர்ச்சி நிரம்புகிறது. கன்றின் அருகிற் செல்கிறாள். மழைக்காற்று 'சில்'லென்று வீசுவதால் அவளுக்குக் குளிர் நடுக்குகிறது. இரண்டு கைகளையும் தோள்மீது கட்டிக்கொண்டு, சுழன்று சுழன்று வந்து கத்தும் கன்றின் நிலையைப் பார்க்கிறாள். அதன் துயரைக் காண அவள் மனம் பொறுக்கவில்லை. 'மேய்ச்சல் துறையிலிருந்து பசுக்கள் ஏன் இன்னும் வரவில்லை?' என்னும் சிந்தனையோடு அவை வரும் வழிப்பக்கம் நெடுந்தொலையில் கண்களையோட்டி நோக்குகிறாள். குளிரைப் பொருட்படுத்தாமல் தன் கைகளால் கன்றின் உடம்பைத் தடவிக்கொடுத்து, "ஏன் கத்துகிறாய்? அம்மா வரவேண்டுமா? பால் குடிக்க வேண்டுமா? வருந்தாதே! இதோ இப்பொழுதே வந்து விடுவாள் உன் தாய்!" என்று அன்பு கனிந்த மொழிகளை ஆர்வங்கலந்து மொழிகிறாள்.

"இப்பொழுது வந்துவிடுவாள் உன் தாய்" என்ற இடைச்சிறுமியின் மொழிகள்தான், கண்ணை மூடிக் கடவுளை எண்ணியிருந்த முதுபெண்டிரை மகிழ்ச்சியடையச் செய்து விட்டன.

இடைச்சிறுமியின் மொழியால் முதுபெண்டிர் மகிழ்ந்தது ஏன்? வேறொன்றுமில்லை. அவர்கள் விரும்பி வந்த நற்சொல்லாக அது அமைந்ததுதான்.

தலைவி, தன் காதலனைப் பிரிந்து பல மாதங்கள் ஆகி விட்டன. அவன் குறிப்பிட்டுச் சென்ற கார்காலமும் வந்து

விட்டது. ஆனால், அவன் வரவில்லை. சொன்னபடி வராத அவன் இனி எப்பொழுது வருவானோ! யார் கண்டார்கள்? இந்த ஏக்கம் தலைவியின் உள்ளத்தை உருக்கி உடலை வாடச் செய்துவிட்டது. இரவு பகல் எந்த நேரத்திலும் கண்ணுறக்கமின்றி ஒரே கவலையில் ஆழ்ந்துவிட்டால், உடல் வளம் குன்றுவது இயல்புதானே! தோழி செவிலித்தாய் முதலியோரின் அன்புரைகளும் ஆறுதல் மொழிகளும் பெரு நெருப்பில் ஊற்றிய சிறுநீர் போல் ஆயின. ஆகையால் அவளுக்குக் காதலன் வருகையில் நம்பிக்கை பிறக்கும் சொற்களைச் சொன்னால்தான் பயனேற்படும் என்ற முடிவுக்கு வந்தனர். உடனே முதுபெண்டிர் சிலரை ஏவி நற்சொல் கேட்டுவரச் செய்தனர்.

'நற்சொல் ஏற்பட்டது' என்பதையறிந்த தோழி, செவிலியர் யாவரும் களிப்புடன் தலைவியிடம் நெருங்கி, 'எம்பெருமாட்டி! உன் கவலை ஒழிந்தது. இப்பொழுதே வருவார் உன் காதலர். முதுபெண்டிர் *விரிச்சி கேட்டு வந்து தெரிவித்தார்கள். உணவுண்டு ஆடைதிருத்தி மகிழ்வுடன் நின் காதலரைக் காண்பதற்கு எழுந்திரு!' என்றனர்.

'இப்பொழுது வருவாள் உன்தாய்' என்ற இடைச் சிறுமியின் மொழி, தலைவனின் வருகையை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்போர்க்கு, 'இப்பொழுது வருவான் தலைவன்' என்று தெய்வமே கூறியதுபோல் ஆயிற்று! மக்கள் நம்பிக்கையின் போக்கு மிக்க விந்தையானது!

தோழி செவிலியரின் மொழிகள் தலைவியின் சிந்தையைத் தொட்டதாகத் தெரியவில்லை. எங்கோ செலுத்திய பார்வையுடன் இடது கையால் தலையைத் தாங்கியவண்ணம் பதுமை போல் பள்ளியிற் சாய்ந்திருந்தாள். முத்து முத்தாய்ச் சிந்தும் கண்ணீர்த்துளிகள் நிற்கவில்லை.

---

*விரிச்சி = நற்சொல்.

தலைவன் வருகையினாலன்றித் தலைவியின் மனத்துயரை மாற்றமுடியாது என்று உறுதியாய் உணர்ந்தனர் தோழி முதலியோர். என்ன செய்வார்கள்! கடைசி முயற்சியிலும் தோல்வியைக் கண்டதால் அவர்கள் கவலைபாயும் உளத்தோடு செயலற்று நின்றனர்.

அப்பொழுது வாயிற்காவலன் மெதுவாய் உள்ளே வந்தான். யாவர் நிலையையும் கண்டு திகைத்தவனாய்த் தான் சொல்ல வந்த செய்தியை யாரிடம் எப்படிச் சொல்வதென்று தெரியாமல் தூரத்திலேயே நின்றுவிட்டான். தற்செயலாய்த் திரும்பிய தோழி அவனைக் கண்டாள். ஏதோ புதுமை அவன் முகத்தில் ஒளிர்வதாய் உணர்ந்து பாய்ந்து ஓடினாள். சிறிது நேரத்தில் மகிழ்பூத்த முகத்துடன் இளமான்போல் துள்ளி ஓடிவந்தாள் தலைவியிடம்.

யாவரும் தூக்கத்திலிருந்து விழித்தவர்கள்போல் தோழியைப் பார்த்தார்கள். தலைவியும் அவளை நிமிர்ந்து நோக்கினாள்.

"போர்க்களத்திலிருந்து..........." என்று தோழி தொடங்கியதும், தலைவியின் முகத்தில் சிறிது ஒளி தோன்றியது; உடம்பில் உணர்வு ஏற்பட்டது. "என்ன?" என்று ஆவல் தேங்கிய முகத்தினளாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"பாணன் வந்திருக்கிறான்!"

தோழி இவ்வாறு முடித்ததும் தலைவியின் மன எழுச்சி தளர்ந்து விட்டது. மேகத்திலிருந்து வெளிப்பட்டு ஒளி வீசிய முழுச்சந்திரன், மீண்டும் மேகக்கூட்டத்தினுள் புகுந்தது போலாயிற்று அவள் முகம்.

"ஏதோ செய்தி சொல்ல வேண்டுமாம். தலைவர் சொல்லியனுப்பியிருக்கிறாராம். அவனை வரச்சொல்லலாமா?"

"பாணன் வந்தான்" என்றதுமே தலைவிக்குச் செய்தி புரிந்துவிட்டது. "தலைவர் வர இன்னும் சிறிது காலமாகும்"

என்று சொல்லப்போகிறான். பாணன் வாயால் இதைக் கேட்பானேன்?" என்ற எண்ணம் அவள் மனத்தில் எழுந்தது. காதலன் வருகையில் கருத்தூன்றியிருக்கும் அவளுக்குப் பாணன் வருகை சிறிதும் மகிழ்ச்சி தரவில்லை. அதற்கு மாறாய் வெறுப்பையே மிகுவித்தது.

முன்னமேயே காதலன் பிரிவால் மூண்டிருந்த விரகத் தீ, கார்ப்பருவத்தால் கொழுந்துவிட்டு எரியலாயிற்று. 'வந்து விடுவார்,' 'வந்து விடுவார்' என்று இடையிடையே எழும் குளிர்ந்த எண்ணம் அத்தீயின் கொடுமையைத் தணித்துக்கொண்டிருந்தது. இப்பொழுதோ, குறித்த காலத்தில் வராத தலைவன்மீது கோபமாக உருவெடுத்திருக்கிறது, அத் தீ! இச்சமயம் பாணன் வந்தானென்றால் அவன்மீது வெறுப்பேற்படுவது இயற்கைதானே! 'தலைவர் இப்பொழுது வரமாட்டார்' என்பதைத் தெரிவிக்க வந்துள்ளவனல்லவா அவன்!

'காதலர் என்ன சொல்லியிருக்கிறாரோ! ஏதேனும் சிறப்பான செய்தி சொல்லியிருந்தால்.........!' இப்படியும் அவளது ஆவல் உள்ளத்தின் அடியிலிருந்து ஒரு எண்ணம் பீறிட்டெழுந்தது. வெறுப்பை வென்று நின்றது, பாணன் மொழிகளைக் கேட்க வேண்டுமென்ற அவா.

'பாணனை அழைத்து வரும்படி சொல்' என்று தோழியை நோக்கித் தலையை யசைத்துக் கண்களாற் சொன்னாள், தலைவி. தோழி விரைந்து சென்றாள்.

'தலைவர் வராவிடினும், தலைவரிடமிருந்து பாணன் செய்தி கொண்டு வந்திருக்கிறானல்லவா! 'நற்சொல்' பலித்தது!' என்று மகிழ்வடைந்தனர் செவிலி முதலியோர்!

* * *

தலைவி:—இங்கு வந்த காரியம் யாது? விரைவில் தெரிவித்துவிட்டுப் போ!

பாணன்:—எம்பெருமாட்டி! தாங்கள் கோபமாய்ப் பேசுவது என்?

தலைவி:—(வெறுப்புடன்) வீண்மொழி பேசவேண்டாம். வந்தகாரியம் என்ன? உனது இசைத்திறங்களைக் காட்டிப் பரிசில் பெறுவதற்குத் தலைவர் இங்கில்லை. ஆகையால், நீ போகலாம்.

பாணன்:—(சிறிது தயங்கி) தலைவரிடமிருந்துதானே நான் வந்திருக்கிறேன்!

தலைவி:—அப்படியா! தலைவரிடம் பெற்ற பரிசு போதாதென்று என்னிடமும் பெற்றுப்போகலாமென்று வந்திருக்கிறயோ?

பாணன்:—ஒன்றும் அறியாததுபோல் தாய் பேசுவது வியப்பையளிக்கிறது!

தலைவி:—(கோபக்குறியுடன்)என்ன சொல்கிறய் பாண!

பாணன்:—(புன்சிரிப்புடன்) தலைவரிடமிருந்து செய்தி கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிந்தே, தாய் இங்ஙனம் பேசுகிறர்கள்!

தலைவி:—(முகங்கடுத்து) விளையாட்டுரை பேசுவது தலைவரிடத்தில் இருக்கட்டும். என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறய் என்பதைச் சீக்கிரம் சொல்!

பாணன்:—இவ்வளவு கோபம் கொள்கிறீர்களே, தாயே! அடியேன் தவறொன்றும் புரியவில்லையே!

தலைவி:—பாண! மேலும் பேச்சை வளர்க்காதே! சொல்வதை விரைவிற் சொல்!

பாணன்:—சற்றுப் பொறுமையுடன் பேசலாகாதா, தாயே!

தலைவி:—சொல்லப் போகிறயா, இல்லையா?

பாணன்:—சொல்லத்தானே வந்திருக்கிறேன்!

தலைவி:—சொல்! சொல்!!

பாணன்:—தங்கள் பிரிவால் பெரிதும் வருந்திக்கொண்டிருக்கிறார், தலைவர்......

தலைவி:—(இகழ்ச்சியாய்) தலைவருக்கு எனது நினைவு கூட இருக்கிறதா? உம்......

பாணன்:—தங்களை மறந்தாலல்லவா நினைக்க வேண்டும் அவர்!

தலைவி:—சாதுரியமாய்ப் பேசுகிறாய்!

பாணன்:—உண்மையைச் சொன்னேன்!

தலைவி:—(இகழ்ச்சியாய் நகைத்து) எப்பொழுதும் என்னையே எண்ணிக்கொண்டிருந்து தமது கடமையைக் கூடச் சரிவரச் செய்யவில்லையல்லவா!

பாணன்:—மாறுபடப் புகல்கிறீர்கள்! அரசனும் வியக்கும்படி பேராற்றலுடன் போர் புரிந்திருக்கிறார் யாவரும் அவருடைய திறமையை வாயாரப் புகழ்ந்து களிக்கிறார்கள்; அறிவிலும் வலிமையிலும் முன்னில்லாததோர் புதிய ஒளி கிளர்ந்து விளங்குகிறதென்று அதிசயிக்கிறார்கள். அந்த ஒளி தங்கள் மீது அவர் கொண்டுள்ள அளவற்ற காதலே!

தலைவி:—புகழ் பெறவேண்டும் என்னும் விருப்பமே!

பாணன்:—உண்மையை ஒப்புக் கொள்ள மறுக்கிறீர்கள். அங்ஙனமாயினும் அவரடையும் பெருமை தங்களுடையது தானே!

தலைவி:—சொன்ன சொல் தவறும் அவருடைய பெருமையே பெருமை!

பாணன்:—தலைவரைத் தாங்கள் அவமதித்துப் பேசுதல் இழுக்கல்லவா, தாயே!.

தலைவி:—உனது அறிவுரைகளைக் கேட்க இங்கு ஒருவருமில்லை, பாண! 'வெற்றி வீரர் அந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறார்! இன்னும் பல வெற்றிகளால்

வீறுபெற்றுக் களிப்புடன் திரும்பக் காலமாகும்.' இதைத் தானே நீ சொல்ல வந்தாய்? நல்லது. நீ போகலாம்.

பாணன்:—தாயே! மன்னிக்கவேண்டும். பெண்களுக்கு உரியதை நினைவூட்டினேன். தலைவர் வாக்குறுதி பிறழ்பவர் அல்லர். அரசர், போரைக் கைவிடாதிருக்கிறார். அரசருக்கு உற்ற துணைவரல்லவா நம் தலைவர்! அவருக்குள்ள பொறுப்பு தங்களுக்குத் தெரியாதா? அவரில்லையெனில் போர் ஏது? இந்நிலையில் எவ்வாறு வருவார் அவர்? ஆகலால் இன்னும் ஒரு திங்களில் திரும்பி வருவதாகத் தெரிவிக்கச் சொன்னார். இதோ அரசர் அகமகிழ்ந்தளித்த வெற்றிப் பரிசாகிய இப் பொற்பூவை * அடையாளமாகக் கொடுத்திருக்கிறார். பாருங்கள்!

தலைவி:—இன்னும் ஒரு திங்கள்!.........(வெறுப்புடன் நகைத்து) நல்லது! இதுதான் என்ன உறுதி? ஒரு ஆண்டும் ஆகலாம்! போ! போ!! பாணனே! நான் மகிழ்வுடன் இருக்கிறேன் என்று தலைவரிடம் கூறு! பொற்பூவை நீயே வைத்துக்கொள். எத்தனையோ பரிசுகள் அவரிடம் பெற்றிருக்கிறாயல்லவா? அவற்றுடன் இருக்கட்டும் இதுவும்!

பாணன்:—தாய் இங்ஙனம் வெறுத்துப் பேசுவது சரியன்று. பிரிவுத்துன்பம் தங்களுக்குமட்டுந்தானா? தலைவருக்கு இல்லையா? உண்மையாய்ச் சொன்னால் அவருக்கு மிகுதியென்றே விளம்பவேண்டும். அடடா! பாசறையில் இரவுப் பொழுதெல்லாம் கண்ணுறக்கமின்றி அவர்படும் வேதனையை அளவிட்டுச் சொல்லமுடியாதே! இதனை உள்ளபடியறிந்தால் தாங்கள் அவரிடம் மாறுபட்டு இவ்வாறு வெறுத்துப்

---

* போரிலே மிகுந்த வீரங்காட்டிப் பகைவரை வென்ற வெற்றி வீரர்க்குப், பொன்னால் செய்த பூவை மகிழ்ந்தளித்துச் சிறப்புச் செய்தல், பண்டைத் தமிழரசரின் மரபு.

பேசமாட்டார்கள்! தங்கள் துயரினும் பதின்மடங்கு பெரிது அவர் துயர், தாயே!

தலைவி:—என்ன சொன்னாய்! பிறரிடம் இல்லாத தன்மைகளை உள்ளனவாகப் புகழ்ந்து இசைபாடி வயிறு வளர்க்கும் பேதைப் பாணனே! உனக்குப் பெண்ணுள்ளம்பற்றி என்ன தெரியும்? செல்வரையும் சிறந்த நிலையில் உள்ளவரையும் பசப்பு மொழிகளால் மயக்கி மனந்தடுமாறச்செய்து பரத்தையர் மாட்டு ஈடுபடச்செய்யும் உன்னிடம் பெண்களின் மனத்தையறியும் அறிவு ஏது? என் துயரத்தை அளந்தறிய வல்லவனோ நீ!

பாணன்:—மன்னிக்கவேண்டும், தாயே! இவ்வளவு சீற்றம் கொள்வதற்கு இவ்வேழைப் பாணன் ஏற்றவன்? அடாத மொழிகளால் இந்த ஏழையின் மனத்தைப் புண்படுத்துவது அடுக்குமா? ஒருவரது உயர்குணங்களையும், செயற்கரிய செயல்களையும் புகழ்ந்து பாடுவதும், அன்னோர் இனியதென்று விரும்புவதை மாசிலா வழியில் அடையத் துணை நிற்பதும் ஆகிய எனது தொழிலைக் கடிந்து பேசிய மொழிகள், தங்கள் கோபத்தின் போக்கை நன்கு காட்டுகின்றன! தங்கள் துயரினும் தலைவரின் துயர் பெரிதென்று தானே சொன்னேன்! இதில் தவறென்ன இருக்கிறது? தலைவர் நிலையை நேரில் அறிந்தவர்கள் இங்ஙனமே சொல்வார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

தலைவி:—தலைவரிடம் பல பரிசுகள் பெற்றுள்ள நன்றி உன் உள்ளத்தில் உறைந்திருக்கிறது என்பதை நன்கு காட்டுகின்றன, உனது மொழிகள்! தலைவரைப் புகழ்ந்து புகழ்ந்து உனது நா நல்ல தேர்ச்சியை அடைந்திருக்கிறது என்பதும் விளங்குகிறது! பிறரைப்பற்றி அறியவேண்டிய கட்டாயம் உனக்கு என்ன இருக்கிறது? அவர்கள் பரிசு கொடுக்கப் போகிறார்களா?

பாணன்:—தாங்கள் அடைந்துள்ள துயர்நிலையில் என் மொழிகளின் உண்மையை உணராது, அல்லது உணர்ந்தும் வேண்டுமென்று இவ்வாறு பேசுகிறீர்கள்! என்னை எவ்வளவு வேண்டுமானாலும் இகழ்ந்து பேசிக்கொள்ளுங்கள். அதனால் 'தங்கள் பிரிவால் தங்களைக் காட்டிலும் துன்புறுகிறார் தலைவர்' என்னும் உண்மை பொய்யாகாது.

தலைவி:—பிடிவாதமாய்ப் பேசும் பாணனே! அறியாது கூறுகிறாய்! இருவர் நிலையையும் எண்ணிப்பார்த்தாயா? அதற்கு உன்னிடம் அறிவில்லை. போர் முயற்சியில் ஈடுபட்டிருப்பவருக்கு அதிலேயே மனம் செல்லப் பகற்பொழுது பரபரப்புடன் கழிந்து விடுகிறது! இரவு சிறிது நேரம் பிரிவுத்துயரால் வருந்துகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது! பின்னர், உடற்களைப்பானது ஆழ்ந்த தூக்கத்தில் கட்டாயம் வீழ்த்திவிடும்! இது இயற்கை. பொழுது விடிந்ததும் மீண்டும் போர் முயற்சி! இப்படியே நாட்கள் எளிதிற் கழிந்துவிடும் அவருக்கு! எனக்கோ?...... என் நிலை என்ன தெரியுமா?

பாணன்:—சொல்லுங்கள்!

தலைவி:—அன்பில்லாத பாணனே! கூட்டங்கூட்டமாய்த் திரண்டுள்ள மேகங்கள் கருமை நிறமுடையனவாய் முழங்கிக் கொண்டு வர, பசுமையான கொடியிலுள்ள முல்லைப்பூக்கள் மலர்ந்து மணம்வீசி, கார்காலத்தைப் பறைகொட்டி அறிவிக்கின்றன. இடையர்கள் மேய்ச்சல் இடத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான பசுக்களைத் தமது புல்லாங்குழலின் ஓசையால் திரட்டி ஓட்டிக்கொண்டு வரும்பொழுது அவற்றின் கழுத்திலுள்ள மணியோசையும், அக்கோவலரின் குழலோசையும் பிரிந்தாரை வருத்தும் இரக்கமற்ற மாலைக் காலம் வந்துவிட்டது என்று தூது உரைக்கின்றன! தலைவர் சென்றுள்ள நாட்டில் இவை உள்ளனவோ?

"கருவி வானம் கார்சிறந்து ஆர்ப்பப்
பருவம் செய்தன பைங்கொடி முல்லை!
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்
அன்பின் மாலையும் உடைத்தோ
அன்பில் பாண! அவர்சென்ற நாடே?"

[கருவி வானம் கார்சிறந்து ஆர்ப்ப - கூட்டமான மேகம் கருமை நிறம் மிகுந்து முழங்க: பைங்கொடி முல்லை - பசுமையான கொடியிலுள்ள முல்லை மலர்கள்: பருவம் செய்தன - கார்ப்பருவத்தைக் காட்டிப் பூத்தன: பல் ஆன் கோவலர் - பலவாகிய பசுக்களை மேய்க்கும் இடையர்: படலை கூட்டும் - மாலைப்பொழுதிலே ஒன்றாய்க் கூடச்செய்யும்: அன்பு இல் மாலை - இரக்கமற்ற மாலைப் பொழுது; தன்னை வருத்துவதாகலின் இங்ஙனம் கூறினாள்: உடைத்தோ - உடையதோ: அன்பு இல் பாண; தலைவனது துயரையே பெரிதெனப் பாராட்டி அவனுடன் தலைவி வேறு படுவது சரியன்று என்றுணர்கலின் இவ்வாறு அழைத்தாள்: அவர் சென்ற நாடு - தலைவர் போர் புரியச் சென்றுள்ள நாடு.]

தலைவியின் வினாவுக்கு விடை கூறினானா, பாணன்? இல்லை; வாய் பேசாதிருந்தான். என்ன விடை கூறுவான்? பெரும்பொழுதாகிய கார்ப்பருவத்தைக் காட்டும் முல்லையும், சிறுபொழுதாகிய மாலையை அறிவிக்கும் பசுக்களின் கழுத்து மணியோசையும் தலைவன் இருப்பிடத்தில் ஏது?

தலைவி ஒன்றையுங் காணாது இல்லினுள் இருந்தாலும், அவளுக்கு, மேகமுழக்கமும், முல்லையின் மணமும் கார்ப்பருவத்தை அறிவிக்கின்றன! கோவலரின் குழலோசையும், பசுவின் கழுத்து மணியோசையும் மாலைப் பொழுதைத் தெரிவிக்கின்றன! என் செய்வாள்!

பிரிந்த காதலரை வருத்தும் இவை, தனியளாய் வருந்தும் தலைவியைப் பெரிதும் துன்புறுத்தும் என்பதைப் பாணன் அறியானா?

தலைவன் துயரினும் தலைவியின் துயர் பெரிதுதான் என்பதை இப்பொழுது உணர்ந்திருப்பானல்லவா, பாணன்?

தேர்வேகமும் மனவேகமும்

❋

இது என்ன, இவ்வளவு விரைவாய்ச் செல்கிறது தேர்! குதிரைகள் ஓடுகின்றனவா, பறக்கின்றனவா? குளம்புகள் நிலத்திற் படவில்லையே! தரைக்கருகில் தாழ விரைந்து பறக்கும் அன்னப்பறவைகளைப் போலல்லவா காணப்படுகின்றன, அவ்வெண்புரவிகள்!

தேரில் யாரோ வீற்றிருப்பது போல் தெரிகிறதே அவன் யார்! அரியேறு போன்ற பெருமிதம் பொலியும் வீரனைக் காண்கிறனே! படைத்தலைவனோ? ஆம், ஆம்; அவன்தான்! வெற்றிக் களை விளங்குகிறதல்லவா முகத்தில்! சரி, தன் நாடு நோக்கிச் செல்லும் அவனுக்கு இவ்வளவு விரைவு ஏன்? சொந்த நாட்டைக் காண வேண்டும் என்னும் ஆவலோ! அல்லது காதலியைக் கண்டு மகிழவேண்டும் என்னும் வேட்கையோ!

தேரோட்டும் பாகனிடம் என்னென்னவோ தெரிவிக்கிறனே, அவன்! அவனது பரபரப்பில் வழிகளிற் காணும் விந்தையான மாறுதல்களைக் கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை! மனத்தொடு பொருந்தாத கண்களுக்குக் காணும் ஆற்றல் ஏது?

❋ ❋ ❋

ஆ! எவ்வளவு மாறுதல்! வரும்பொழுது காணப்பட்ட வறண்ட பாலை வனந்தானா இது? இயற்கையின் விந்தையை என்னென்று இயம்புவது! மழையென்னும் மந்திரத் தலைவன் தனது மந்திரக்கோலை நீட்டியதும் நீர்ப்பசையற்ற பாலை நிலம் குளிர்ந்த சோலைகளாய் மாறிவிட்டதே!

ஃ

நீண்ட காலமாய் நீரின்றிக் கிடந்த குளம் முதலிய நீர் நிலைகளெல்லாம் அருளுடையார் உள்ளம்போல் குளிர்ந்து

நீரினால் நிரம்பியிருக்கின்றன! கொக்கு நாரைகளெல்லாம் அவற்றில் குதித்து விளையாடிக் கும்மாளம் போடுகின்றன! வயிறாரப் புல் மேய்ந்த மான்கள் துள்ளிவிளையாடுகின்றன!

அன்னப் பறவைகள் அணியணியாய் நீரில் நீந்திக்களிக்கும் நேர்த்திதான் என்ன! பொய்கையாம் நங்கை கார்கால நம்பியைக் களிப்புடன் நோக்குகிறாளோ என்னும்படி செந்தாமரை மலர்கள் பூத்துள்ள சீர்த்தி தான் என்ன! கண்ணபிரான் மார்பில் முத்துமாலை ஒளிர்வது போல், பசுமையாய்த் தோன்றும் மலைகளிலிருந்து அருவி நீர் ஓடி வரும் அழகு தான் என்ன!

ஃ

மழையின்றி உலர்ந்து கிடந்த மரங்களின் கிளைகளெல்லாம் செந்தளிர்கள் தழையப் பெற்று, பன்னிற மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன, பிரிந்த கணவர் மீண்டு வந்ததைக் கண்டு மகிழ்ந்த மங்கையரின் முகங்களைப் போல!

ஃ

வேனிற் காலமாகிய கொடுங்கோல் அரசன் நீங்கிச் செல்ல, கார்காலமாகிய செங்கோல் மன்னன் வந்ததால் உள்ளங் குளிர்ந்த நிலமகள் அக்குளிர்ச்சியினால் உடம்பு முழுவதும் மயிர் சிலிர்க்கப் பெற்றது போல் காண்கின்றன, செழித்து வளர்ந்துள்ளன பசும் புற்கள்!

ஃ

நிலமகள் தனது மகிழ்ச்சிப் பெருக்கில் இரவலர்களுக்குப் பரிசளிக்கிறாளோ! இப்படி வியந்து எண்ணுமாறு தோன்றுகிறது, எழில் மிக்கதோர் இயற்கைக் காட்சி!

தரையிலிருந்து எழுந்துள்ள காந்தள் செடியின் சிவந்த மலர்கள் பூத்துள்ளன. அடுத்து வளர்ந்துள்ள கொன்றை மரத்தின் பொன்னிறமான மலர்கள் அக்காந்தள் மலரில் விழுகின்றன. அத்துடன் இரத்தம் போல் செந்நிறமான இந்திரகோபப் பூச்சிகள் சேர்ந்துள்ளன. தேன் உண்ணும்

பொருட்டு அம்மலர்களை நாடி இன்னொலியோடு வருகின்றன, வண்டுகள். இது, இன்னிசை பாடி வரும் இரவலர்களுக்குப் பொன்னையும் மாணிக்கத்தையும் அள்ளியள்ளி நிலமகள் அளிப்பது போல் காட்சி தந்து களிக்கச் செய்கிறது!

ஃ

கார்கால மன்னன் வந்து விட்டான் என்னும் களிப்பில் நடனக் கச்சேரி கூட அல்லவா நடக்கின்றது! சோலையரங்கில் வண்டுகள் யாழ் வாசிக்கின்றன! மேகம் மத்தளம் கொட்டுகிறது! மயில்கள் நடனமாடுகின்றன! 'மிகவும் சரி; காண்போர் யார்?' என்று கேட்கலாமல்லவா? கருவிள மலர்கள் விழித்த கண் இமைக்காமல் காண்கின்றன!

ஃ

செழித்து மலர்ந்து பொலிவுடன் விளங்குகிறது ஒரு கோங்கமரம். அருகில், தழைத்துக் காய் கனிகள் குலுங்க நிற்கிறது ஒரு மாமரம். இரு மரங்களின் கிளைகளும் தழுவி ஒன்றோடொன்று உறவாடிக் களிக்கின்றன. இதழ் விரிந்து அகன்று மலர்ந்துள்ள பொன்னிறமான கோங்கம்பூ ஒன்றில் மாங்கனியொன்று சேர்ந்திருக்கிறது. இவற்றின் பக்கத்தில் - மரக்கிளையில் அழகிய தோகையுடைய மயில் அமர்ந்திருக்கிறது. ஆ! இது, ஒரு பெண் பொன் தட்டில் பாலையேந்திக் கிளிக்கு ஊட்டுவதுபோல் காட்சியளித்துக் களிப்பூட்டுகிறது!

ஃ

காத தூரத்திற்கு மணங்கமழப் பழுத்து விளங்குகிறது பலாமரம். கிளைகளெங்கும் பழங்கள் தொங்குகின்றன. இவற்றைக் கண்டுவிட்டது ஒரு குரங்கு. உடனே பாய்ந்து சென்று மிகுந்த ஆவலுடன் ஒரு பழத்தை இரு கைகளாலும் பிடித்துத் திருகிப் பறித்து, கிளையில் உட்கார்ந்த வண்ணம் தன் மடியில் கிடத்திக்கொண்டு பழத்தை விரல்களால் பிளந்தது. அப்புறம் சொல்லவா

வேண்டும்? மகிழ்ச்சிப் பெருக்குடன் பற்கள் வெளியே தெரியப் பலாச்சுளைகளை எடுத்தெடுத்துத் தின்கிறது.

திருமால் நரசிங்கமாய்த் தோன்றி இரணியனை மடியில் கிடத்தி, விரல்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் குடரையெடுத்துக் கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டாராமே, அதை நினைவுறுத்துகிறது இக்காட்சி!

ஃ

வேரில் பழுத்த பலாக்கனி மிக்க சுவையுடையது போலும். அதனால்தான் ஒரு குரங்கு மண்ணைப் பறித்துப் பலாமரத்தின் வேரிலுள்ள பழத்தைப் பிளந்து சுளைகளை எடுத்தெடுத்துச் சுவைக்கின்றது! இக்காட்சி உலோபிகள் புதைத்து வைத்துவிட்டுப்போன பொற்புதையலை, மற்றொருவர் மையிட்டறிந்து எடுப்பது போல் காண்கிறது!

ஃ

பூஞ்சோலை மன்மதனுடைய பாசறையல்லவா? அப் பாசறையில் விளக்கேற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. இயற்கை விளக்குகள், புகையுடன் ஒளிர்கின்றன! எப்படி?

செந்நிறத்துடன் நிமிர்ந்து நிற்கின்றன சண்பக மரத்தின் அரும்புகள்! அவற்றில் தேன் உண்ணும் வேட்கையுடன் மொய்த்திருக்கின்றன வண்டுகள்! ஆ! எவ்வளவு அழகிய விளக்குகள்!

* * *

இயற்கை தரும் இந்த இன்ப விருந்தில் ஈடுபட்டானா வீரன்? இல்லை. இதை விட இன்பந்தரும் காதலியினிட மல்லவா அவன் சிந்தை சென்று விட்டது! சரி, தேர்ப்பாக னிடம் அவன் என்ன பேசுகிறான்?

"பாகனே! தலைவி வசிக்கும் ஊர் எங்கு இருக்கிறது தெரியுமா? கூர்ந்து கேள்; வலிய தாம்புள்ள உறியையும்

பானையையும், தோல் படுக்கையையும் உடைய இடையன் கையில் கோல் ஊன்றியவண்ணம் வாயை மடித்து எழுப்பும் சீழ்க்கையொலி நெடுந்தொலை ஒலிக்க, துள்ளி விளையாடும் ஆட்டுக்குட்டியைக் கவர்வதற்குப் பார்த்துப் பதுங்கி யிருக்கும் குள்ள நரி அவ்வொலியைக் கேட்டு அஞ்சி, முட்களையுடைய புதரினுள் ஓடி ஒளிந்து கொள்ளும் காட்டின் அருகில் இருக்கிறது."

தலைவியின் இருப்பிடம் முல்லை நிலத்தைச் சார்ந்ததோர் ஊர் என்பதைத் தெரிவித்தவுடன் மேலும் அவன் பேசு கிறான் :

"பாக! தலைவியின் நிலையினைப் பாணன் வந்து தெரி வித்தான். என்ன தெரியுமா? பிரிவுத் துன்பத்தால் இடை யறுமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாளாம். உடல் மெலிந்து, மேனியெல்லாம் பசலை நிறம் பரவியிருக்கிறதாம். தனது ஊருக்கருகிலுள்ள முல்லை நிலத்தில் தளிர்த்துள்ள தழையினை மிகவும் தின்று துள்ளிச் செல்லும் நடையினை யுடைய இளைய பெண் மான் ஆண் மானுடன் கூடி மகிழ் வுடன் துள்ளித் திரிவதைக் காணும்பொழுதெல்லாம் பெருமூச்செறிகிருளாம். அவள் கண்கள் சிவக்கக் கூறிய மொழிகள் என்ன தெரியுமா? 'தோழீ! நம் தலைவர் சென்றுள்ள இடம் அவருக்கு மிகவும் இனிமையாய் இருக் கிறது போலும். போகட்டும். அவர் இங்கு வராமையால் நாம் துன்பமுற்றாலும் அவரேனும் அங்குத் துன்பமின்றி இன்பமாயிருக்கட்டும்' என்றுளாம். ஆகையால் தேரை விரைந்து ஓட்டுவாய்!"

'தேர்தான் விரைந்து ஓடுகிறதே, அதை ஓட்டும்படி தூண்டுவானேன்' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? நல்லது. இன்னும் அவன் பேசுவதைக் கேட்போம் :

"பாக! தேர் ஏன் மெதுவாய்ச் செல்கிறது? ஓட்டு, விரைவாக ஓட்டு! கடிவாள வாரினை நன்கு அசைத்துக் குதிரைகளைத் தூண்டி ஓட்டு! வண்டுகள் மொய்க்கும்படி முல்லைப் பூக்கள் மலரும் மாலைக் காலத்தில் பிரிவுத் துன்பத்தால் பெரிதும் வருந்தும் தலைவியின் உள்ளம் உவக்கும்படி விரைந்து ஓட்டு!"

"அஞ்சிறை வண்டின் அரியினம் மொய்ப்ப
மென்புலம் முல்லை மலரும் மாலைப்
பையுள் நெஞ்சில் தையல் உவப்ப
நுண்புரி வண்கயிறு இயக்கிநின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே"

[அம் சிறை வண்டின் அரி இனம் - அழகிய சிறகுகளையுடைய வண்டினது அழகிய கூட்டம்; மொய்ப்ப - மொய்க்கும்படி; மென்புலம் - முல்லை நிலம்; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும்; பையுள் - துன்பம்; தையல் - பெண்; இங்குத் தலைவியைக் குறிக்கிறது; உவப்ப - மகிழும்படி; நுண்புரி - நுண்ணிதான புரிகளையுடைய; வண்கயிறு - வளமான கயிறு; இயக்கி - அசைத்து; வண்பரி - வளப்பம் பொருந்திய குதிரைகளைப் பூட்டிய; நெடுந்தேர் - பெரிய தேரை; கடவுமதி - செலுத்துவாய்.]

உயர்சாதிக் குதிரைகள் தான். மிக விரைந்தே ஓடுகின்றன அவைகள். ஆனால், தேர் நகர்வதாகவே தெரிகிறது தலைவனுக்கு! ஏன்?

தலைவனது உயிர் முன்பே தலைவியிடம் போய்த் தங்கி விட்டது! வெறும் உடம்பு மட்டுமே அவளைக் காண வேண்டுமென்னும் துடிதுடிப்புடன் தேரிலிருக்கிறது! ஆகையால், காதலியைக் காண விழையும் பரபரப்புள்ள அவனது மனவேகத்தின் முன் தேர்வேகம் மெதுவாய்த் தோன்றுகிறது! இதில் வியப்பில்லையல்லவா?

சிறைத் தண்டனை !

✻

இன்ப வெள்ளத்தில் மிதக்கின்றனர் காதலர்கள். உணர்ச்சியூற்றுப் பெருக்கெடுத்து ஓடுகிறது உள்ளத்தில். குளிர்ந்த நிலவைப் பொழியும் முழு மதியைக் கண்டு பொங்கியெழும் கடலலைபோல், காதல் அலை வீசக் களி பொங்கியிருக்கின்றனர். நீண்ட நாள் பிரிந்திருந்து கூடிய காதலர்கள் அல்லவா ?

மேன்மாடத்தில் ஒரு தனியறை. பஞ்சணை விரித்த கட்டில், தந்தத்தாலாகியது. அதன் மீது காதலன் வீற்றிருக்கிறான். காதலி கட்டிலைப்பற்றிய வண்ணம் ஒதுங்கி நிற்கிறாள்.

அகத்தில் பொங்கிய காதலுணர்ச்சி முகத்தில் பொழிய மொழிகிறான் காதலன்:

" ஆருயிரே ! ஏன் எட்ட நிற்கிறாய் ? இப்படி அருகில் வா ! இன்னும் உன் சினம் தணியவில்லையா ? "

காதலி பேசவில்லை; வேறுபுறம் திரும்பிக்கொள்கிறாள்.

"நான் உன்னிடம் விடைபெற்றுச் செல்லும்பொழுதும் கோபங்கொண்டாய் ! இப்பொழுது நான் வந்த பிறகும் கோபங்கொண்டு நிற்கிறாயே ! ஏதாவது கோப நோன்பைக் கடைப்பிடித்திருக்கிறாயோ ? "

"........................."

" சரி ! சரி !! கோப நோன்புடன், மௌன நோன்பும் கூடியிருக்கிறது போலும் ! அப்படித்தானே !"

"........................."

"புரிந்தது! புரிந்தது!! நீ இப்படிப் பல நோன்புகளைக் கைக்கொண்டிருப்பாய் என்பதைத் தெரிந்துதான் நான் விரும்பிய மங்கை ஒருத்தியை மணந்து வந்திருக்கிறேன்! தெரிந்ததா?"

"என்ன சொன்னீர்கள்?"

"அடேயப்பா, எவ்வளவு கோபம்! கோபத்தில் மௌன நோன்பு கலைந்து விட்டதைக்கூடக் கவனிக்கவில்லை போலிருக்கிறதே!"

"மௌன நோன்பு!.........நான் போகிறேன்!"

"விருந்தினரை உபசரிக்காமல் ஓடப்பார்ப்பதா தமிழ்ப் பெண்ணின் அழகு?"

"என்னை விடுங்கள்! தொடாதீர்கள்! விரும்பி மணந்துள்ள மங்கையுடன் மகிழ்ந்திருங்கள்! நான் போகிறேன்!"

"நீயும் இருந்து அம்மகிழ்ச்சியில் பங்கு கொள்ள வேண்டாமா? வந்த மங்கையை வரவேற்று மரியாதை செய்ய வேண்டியது உன் கடமையல்லவா?"

"என் கடமை!..............என்னை விடுகிறீர்களா! இல்லையா? கூச்சல் போடுவேன்! எனக்கு விருந்தினர் ஒருவருமில்லை; உபசரிக்கவேண்டிய கட்டாயமுமில்லை. விடுங்கள் என்னை! நான் போகவேண்டும்!"

"வந்த மங்கையுடன் மகிழ்ந்து இருக்கச் சொல்லுகிறாயே, நீயும் இருந்தால்தானே மகிழ்ச்சி கொள்ளலாம்!"

"இல்லாவிட்டால்?"

"மகிழ்ச்சிகொள்வது எப்படி?"

"இகழ்ச்சி செய்கிறீர்கள்!"

"கோபம் கரைந்தால் உண்மை தெரியும்!"

"வீண்மொழி. விடுங்கள் என்னை !"

"உனக்கு அவள் மீது பொருமை ! இல்லையா ?"

"பொருமை !.........விடுங்கள், நான் போகிறேன்."

"ஏன், கோபங்கூட ஏற்படுகிறதல்லவா ?"

"விடமாட்டீர்கள் ?"

"அவளைப் பார்க்கவேண்டாமா நீ ?"

"வேண்டியதில்லை !"

"ஏன் ?"

"தெரியாது"

"எனக்குத்தெரியும்! பொருமை! கோபம் ! சரிதானே!"

"சரி, அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். நான் போகவேண்டும்."

"நீ கோபங்கொண்டாலும் அவள் உன்னைப் பார்க்க விரும்புகிருளே ! அவளை நீ பார்த்தால் உன் கோபமெல்லாம் பறந்துவிடும் ! அவளைத் தழுவிக்கொள்வாய் ! அவ்வளவு நல்லவள் அவள் !"

"அவள் !...........எவள்?

"வெற்றி மங்கை !"

காதலன் விழுந்து விழுந்து சிரிக்கிருன். காதலி முகத்தில் படர்ந்திருந்த கோபக்குறி, பெருங் காற்றினுல் அலைப்புண்ட மேகக்கூட்டம் கலைந்ததுபோல் மாறியது. மேகக்கூட்டம் கலைந்து சென்றதும் தலைகாட்டும் சந்திரனைப் போல் தோன்றியது புன்னகை. ஆயினும் சந்திரனிடத் துள்ள களங்கம்போல் ஊடற்குறிப்பு ஒளிர்கிறது. காதல னின் அன்புத் தழுவலில் புளகிதமுற்று அவனுடம்பில் சாய்ந்து நிற்கிருள் !

"போர்க்களத்தில் நான் மணந்து வந்த மங்கையின் மீது இப்பொழுது உனக்குக் கோபம் இருக்காதென்று நினைக்கிறேன்" !

காதலி நாணத்துடன் நகைக்கிறாள்.

"ஏமாறி விட்டாயல்லவா?"

"ஏமாற்றுவதுதான் தங்களுக்கு வழக்கமாயிற்றே!"

"ஏமாறுவது.........?"

"........எனது வழக்கந்தான்! கார்காலம் தொடங்கியதும் வருவீர்கள் என்று ஏமாறினேன் அல்லவா?"

"நான் ஏமாற்றவில்லையே! வரமுடியாமற் போய் விட்டது"

"எப்படியோ, நான் ஏமாறினேன்!"

"உண்மை: நான் குற்றவாளிதான்! என்ன தண்டனை விதிக்கிறாய்? ஏற்றுக்கொள்கிறேன்!"

"தண்டனை! நான் விதிக்கவேண்டும்! சரி! அதன்படி நடப்பீர்களா?"

"என் இதய அரசியின் கட்டளையை மீற எனக்கு வல்லமை ஏது?"

"உண்மைதானே! கேளுங்கள்: இனி இந்த மாளிகையிலேயே சிறையிருக்கும்படி தண்டனை விதிக்கிறேன்!"

"அரசி! கட்டளையைத் தலைமேல் தாங்கி ஏற்றுக் கொள்கிறேன்! ஆனால் ஒரு ஐயம்! நான் சிறையினின்றும் தப்பி ஓடிவிடாதபடி என்னைக் காவல் செய்பவர் யார்?"

"நான்தான்!"

"அடாடா! என்ன இன்பமான தண்டனை! இன்னொரு சந்தேகம்! என்னைக் காவல் செய்யும் காவலாளியும் சிறையிருக்கவேண்டும் போலிருக்கிறதே! அவர் என்ன குற்றம் செய்தார்?"

காதலி நாணமேலீட்டால் நகைக்கிறாள். காதலன் அவளைத்தழுவி மகிழ்கிறான்.

"நான் குற்றவாளியென்று எனக்குத் தண்டனை விதித்தாயே, நீ மட்டும் முகத்தைத் திருப்பிக்கொண்டு வேறுபக்கம் பார்த்துக்கொண்டிருந்தது சரியா?"

"குறித்த காலத்தில் நீங்கள் வராமலிருந்தது சரியா?

"சரியில்லை!"

"சரியில்லை!"

இருவரும் சிரிக்கிறார்கள்.

"நான் வராததால் மிகவும் வருந்தினையல்லவா?"

"என்னைப் பார்க்காமல் இருந்ததால் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தீர்களல்லவா?"

"உனது நுண்ணறிவை வியக்கிறேன்! உன்னைப் போலவே நானும் வருந்தினேன் என்பது உண்மைதான்! ஆனால், நான் உன்னைப் பார்க்காமல் இருக்கவில்லையே!"

"என்ன! என்னையா பார்த்தீர்கள்? எங்கே?"

"ஏன்? எல்லாவிடத்திலும்தான்!"

"என்ன சொல்கிறீர்கள்!"

"என் கண்ணிலேயே நீ அசைந்து கொண்டிருக்கிறாய்! அப்படியிருக்கும்பொழுது நான் எந்தவிடத்தில் எதைப் பார்த்தால் என்ன? எல்லாம் நீயாகவே காட்சியளிக்கின்றன!"

காதல் வெள்ளம் கரைபுரண்டோடும் கருவிழிகளால் காதலனைச் சாய்வாய் நோக்குகிறாள், காதலி. அவன் அன்புத் தேனைப் பொழிந்து பேசுகிறான்:

"அழகிய நெற்றியையுடைய காதலி! நான் வந்த வழியிலே தோகை விரித்தாடும் மயில்களைக் கண்டேன். உண்மையில் நான் கண்டது உன் மேனியின் சாயலையே! வழியெங்கும் முல்லை மலர்கள் பூத்து மணம் வீசுவதை

முகர்ந்தேன்: அது, உனது நெற்றியின் மணமென்றே நினைத்தேன்! அங்கங்கு மான்கள் மருண்டு மருண்டு நின்று பார்த்தன; உனது பார்வையே அது என்று மயங்கினேன்! ஆதலால் மேகத்தைக் காட்டிலும் விரைவாக உன்னைக்காண விரைந்து வந்தேன்! உன்னையே நினைந்து வந்தேன் என்பதை உரைக்கவேண்டுமா?"

"நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போல மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்;
நன்னுதல் அரிவை! காரினும் விரைந்தே!"

[நின்னே - உன்சாயலையே; மஞ்ஞை ஆல - மயில் ஆட: நின் நல் நுதல் நாறும் முல்லை - உனது நல்ல நெற்றியைப்போல் மணங் கமழ்கின்ற முல்லை மலர்; பெண்கள் நெற்றி மணங்கமழும் என்பதுகொண்டு இவ்வாறு சொல்லப்பட்டது: மலர - பூக்க: நின்னே போல மா மருண்டு நோக்க - உனது பார்வையையே போல மான்கள் மருட்சிகொண்டு பார்க்க; நின்னே உள்ளி வந்தனென் - உன்னையே நினைத்து வந்தேன்: நன்னுதல் அரிவை - நல்ல நெற்றியையுடைய பெண்ணே!: காரினும் விரைந்து - மேகத்தைக் காட்டிலும் விரைவாக.]

காதலி, தன் காதலனை மாளிகையிலேயே சிறையிருக்கத் தண்டனை விதித்தாள்! ஆனால், காதலன், அவளைத் தன் மனத்திலேயே சிறைவைத்திருக்கிறானே!

“தேன் கலந்த பாலினும்...?”

*

இலை படர்ந்து எழிலுடன் பூத்துள்ள செந்தாமரைக் குளம் போல் திகழ்கிறது, அக்கூடம்.

பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. நகைபூத்த முகத்துடன் நடுவில் வீற்றிருக்கிறாள் தலைவி. மகிழ்ச்சி பொங்கும் மனத்தினராய்ச் சுற்றிலும் மொய்த்திருக்கின்றனர் தோழியர்கள். ஆம், உயிர்த் தோழியும் அருகிலிருக்கிறாள். யாவர் முகமும் மலர்ந்து விளங்குகிறது.

தலைவியின் புதிய ஒளி வீசும் எழில் முகத்தைப் பார்த்துப் பார்த்துத் தெவிட்டா உவகையராய் உள்ளம் பூரித்து அவள் அழகைப் பருகுவார்போல் ஆர்வத்துடன் பார்க்கின்றனர். பலநாளாய் மனத்திலிருந்த அன்பு வெள்ளத்தைப் பொழிந்து ஒவ்வொருவரும் வாய் ஓயாமல் மாறி மாறி என்னென்னவோ கேள்விகளைக் கேட்கின்றனர். தலைவி எல்லோருக்கும் அன்பு கலந்த இன்ப மொழிகளில் சலிக்காமல் பதில் சொல்லுகிறாள். பேசிப் பேசிக் களிக்கின்றனர். மனங்கலந்த அன்பினர் பிரிந்திருந்து கூடினால் அப்பொழுது பேசுவதில் ஏற்படும் இனிப்புதான் என்ன!

* * *

தலைவி தலைவனுடன் கூடி அவனுடைய ஊருக்குப் போய்விட்டாள். தலைவியின் பெற்றோர் கண்கலங்கினர். பெண்களைப் பெற்றவர்களுக்கு இந்த அநுபவம் என்றேனும் ஒருநாள் ஏற்பட்டே தீரவேண்டியதன்றோ? கண்போல் வளர்த்த பெண்களைப் பிரிந்து வருந்தும் பெற்றோர் மனவுணர்ச்சியை மற்றோர் உணர்வது அரிது.

பெற்றோர் மட்டுமா? செவிலித்தாய் எவ்வளவு வருந்திவிட்டாள்! தோழியின் துயர்தான் சொல்லக்கூடியதா?

'அன்பிற்கு அடைத்துவைக்குந் தாழ் இல்லை; ஆர்வலருடைய கண்ணீரே அவர்கள் உள்ளத்திலுள்ள அன்பை வெளிப் படுத்தி விடும்' என்பது பொய்யாமொழியன்றோ?

இவர்கள் துயரமெல்லாம் ஒருவரைப் பிரிவதால் ஏற் படுவது. தலைவியின் நிலை என்ன? பெற்றோரின் பிரிவு, செவிலியின் பிரிவு, உயிர்த்தோழியின் பிரிவு, மற்றோரின் பிரிவு. அவள் மனத்துயரை எவ்வாறு அளவிட்டுரைப்பது? ஆயினும காதலனின் அன்பு வலிமையில் இந்தத் துயரச் சுமை அவளுக்குத் தோன்றாதிருக்கக்கூடுமல்லவா? அவ் வாறன்றே பெற்றோர் முதலியோரின் நிலை.

அருமை மகளைப் பிரிந்த பெற்றோர் பெரிதும் கலங்கித் துயரக்கடலில் ஆழ்ந்தனர். செவிலியோ வாய்விட்டுப் புலம்பினாள். தோழியரோ கண்கலங்கினர்.

நீண்டகால அனுபவங்கள் பதிந்த முகம்; அமைதி குடிகொண்ட உள்ளம்; ஆழ்ந்த அறிவை விளக்கும் கண்கள். இவற்றுடன் கூடிய வயது முதிர்ந்த ஒரு கிழவர் இவர்களைப் பார்த்தார்; நிலைமையைப் புரிந்துகொண்டார். அவர் முகத் தில் இரக்கந்தோன்றியது. ஆறுதல் சொல்லித் தேற்ற விரும்பினார். வேறென்ன செய்யக்கூடும்? தலைவியின் பெற் றோரைப் பார்த்துப் பேசலானார்:

"நீங்கள் மகளைப் பிரிந்து வருந்துகிறீர்கள். இது இயற்கைதான்; தடுக்க முடியாதது. ஆயினும் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்: சந்தன மரங்கள் மலையிலே முளைத்து வளர்கின்றன. ஆனால், அவைகளால் மலைக்கு என்ன பயன்? அதை அனுபவிக்கும் மக்களுக்கல்லவா அச் சந்தனக் கட்டைகள் தமது சிறந்த நறுமணத்தால் மகிழ்ச்சி யூட்டிப் பயன்படுகின்றன!"

முதியோர் மொழிகளைப் பெற்றோரேயன்றி யாவரும் உற்றுக் கேட்டார்கள். 'பெண்கள் பிறந்தவிடத்தன்றிப்

புகுந்தவிடத்திற்கே பயன்படவேண்டியவர்கள்’ என்னும் உண்மையை அழகிய உவமானத்தில் வைத்து அமைதியாய்ப் பேசியது எல்லோர் மனத்தையும் கவர்ந்துவிட்டது. இன்னும் அவர் சொல்லும் மொழிகளைக் கேட்கும் ஆவல் அவர்கள் முகத்தில் காணப்பட்டது. கிழவர் தொடர்ந்து பேசலானார்:

“மிக விலையேறப்பெற்ற முத்துக்கள் எங்கே கிடைக்கின்றன? கடலில்தான். ஆனால், கடலுக்கு அம் முத்துக்களால் பயனுண்டோ? அவற்றை அணிந்து மகிழும் மக்களுக்கன்றோ அவை பயன்படுகின்றன? மற்றும் யாழை மீட்டி இன்னோசை தோன்ற ஒருவர் வாசிக்கிறார். அந்த இனிய ஒலியால் யாழுக்கு என்ன பயன்? கேட்பவரல்லவா மயிர் சிலிர்க்க இன்பமடைகின்றனர்!”

பெரியோர் பேசிய மொழிகளைக் கேட்ட யாவரும் அம் மொழிகளில் உள்ளம் தோய்ந்துநிற்க வியப்பெய்தியிருந்தனர். குரு மொழிகளால் மெய்யறிவு கைவந்த சீடனைப் போல, ஏதோ ஒரு உண்மையை அவர் விண்டு காட்டியதாகப் புத்துணர்வு பெற்று ஒருவாறு மனந் தேறினர். அவர்கள் துயரமும் சிறிது விலகியது, சூரியன் மறைந்ததும் சூழ்ந்த இருள், சந்திரன் தோன்றியதும் சிறிது நீங்கியதைப்போல!

இது நடந்து ஓராண்டு ஆகிவிட்டது. இப்பொழுது தலைவி தன் அன்புக்குரிய காதலனுடன் தன்னூர்க்கு வந்திருக்கிறாள். பெற்றோரைக்கண்டு மகிழ்ச்சி பொங்கினாள். பழகின இடங்களையெல்லாம் பார்த்துப் பார்த்துக் களித்தாள். தலைவி வந்துள்ள செய்தி எட்டியதும் தோழியரெல்லாம் வந்து மொய்த்துக்கொண்டார்கள்.

* * *

“எங்களையெல்லாம் மறந்துவிட்டாயல்லவா?”

“இல்லையே! மறக்கவில்லையே! எப்படி மறப்பேன்!”

"உன் காதலருக்கு உன்மீதுதானே உயிர்!"

"போடீ! இன்னும் உன் குறும்புத்தனம் போக வில்லை பார்த்தாயா! உன் காதலர் வந்து உன்னை அழைத்துக்கொண்டு போனபிறகு பேசிக்கொள்ளுகிறேன்!"

"உன் காதலர் உன்னைவிட்டு எப்பொழுதும் பிரிய மாட்டாராமே! உண்மைதானே!

இவ்வாறு ஒரு தோழி சொல்லியதும் இன்னொரு தோழி, "ஆமாமடி, இவள் தன் முந்தானையில் தன் காதலரைக் கட்டிப்போட்டு வைத்திருந்தால் எப்படிப் பிரிவார்!" என்றாள். எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். தலைவியும் இச்சிரிப்பில் கலந்து கொண்டாள்.

"நமது ஊர் உனக்குப் பிடித்திருக்கிறதா, உன் காதலர் ஊர் பிடித்திருக்கிறதா?"

"அதென்னடி 'நமது ஊர்' என்று அவளையும் சேர்த்துக்கொண்டு கேட்கிறாய்!" என்று ஆழ்ந்த கருத்தோடு பேசினாள் மற்றொருத்தி.

"உண்மைதான். 'எங்கள் ஊர்' பிடித்திருக்கிறதா? உனது ஊர் பிடித்திருக்கிறதா?"

"இரண்டு ஊருந்தான் பிடித்திருக்கிறது!"

"இல்லையில்லை! பொய் சொல்லுகிறாய்! உன் காதலர் ஊரைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா? 'பிடிக்கவில்லை' என்று சொல்ல உனக்கு மனம் வரவில்லை! அப்படித் தானே!"

"அதெல்லாமில்லை. அந்த ஊரும் இந்த ஊரைப் போலத்தான் பிடித்தமாயிருக்கிறது!"

"பாருங்கள்! இவள் தன் காதலர் ஊரைக் குறை சொல்ல விரும்பவில்லை! காதலர் அருகில் இருக்கும்

பொழுது அவர் எப்படியிருந்தால் என்ன! இன்பமாய்த்தான் இருக்கும்! இல்லையா!"

எல்லோரும் நகைத்தார்கள். உயிர்த்தோழி புன் சிரிப்புடன் தலைவியை நோக்கி "உன் காதலர் நாட்டில் நல்ல தண்ணீர் இல்லையென்று கேள்விப்பட்டேனே! நீ அதனை எவ்வாறு பருகினாய்? உனக்கு அது பிடித்ததா?"

"தாய்போல் என்னிடம் அன்புடைய தோழி! நான் சொல்வதைக் கேள்! காதலருடைய நாட்டிலுள்ள நீர் மிகவும் இனிமையுடையது. அவர் நாட்டில் கிணறுகள் பல இருக்கின்றன. அவற்றில், வெயிலின் வெப்பத்தால் நீர் வற்றிப்போய்ச் சிறிதளவே இருக்கும். அந்நீரையும் அருகிலுள்ள மரங்களிலிருந்து காற்றினால் உதிர்ந்துவிழும் தழைகள் மூடியிருக்கும். கிணற்றிற்குப் படிகள் இருப்பதால் மான்கள் இறங்கிப்போய் அந்நீரைக்குடித்துத் தமது தாகத்தைத் தணித்துக்கொள்ளும். இவ்வாறு மான்கள் குடித்து மிஞ்சியிருக்கும் அக்கிணறுகளின் நீர்கள், நமது தோட்டத்திலுள்ள தேனோடு கலந்த பாலைக் காட்டிலும் அதிக இனிமையுடையன!"

"அன்னாய்! வாழிவேண் டன்னை! நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய: அவர்நாட்டு
உவலைக் கூவல் கீழ
மானுண்டு எஞ்சிய கலிழி நீரே!"

[அன்னாய் வாழி - தாயே வாழ்வாயாக: அன்னை வேண்டு - தாயே நான் சொல்லுகின்ற மொழிகளை விரும்பிக் கேள்: அவர் நாட்டு - காதலருடைய நாட்டின்கண் உள்ள: உவலை கூவல் கீழ - தழை மூடிய கிணறுகளின் கீழ் இருக்கிற: மான் உண்டு எஞ்சிய - மான்கள் குடித்து மிஞ்சிய: கலிழி நீர் - கலங்கள் நீர்கள்: நம் படப்பை - நமது தோட்டத்திலுள்ள: தேன் மயங்கு பாலினும் இனிய - தேன் கலந்த பாலைக் காட்டிலும் இனிமையுடையன.]

"கலங்கல் நீர், தேன் கலந்த பாலைக்காட்டினும் இனிமையுடையது" என்ற தலைவியின் மொழிகளைக் கேட்டு யாவரும் ஒரு நொடிப்பொழுது வியப்பில் மூழ்கினர். தலைவிக்குக் கலங்கல் நீர் தேன் கலந்த பாலினும் இனிமை யாயிருப்பதற்குக் காரணம் காதலன் அவளிடம் கொண் டுள்ள அன்பே என்பதை உணர்ந்து களித்தனர். 'தலைவிக் குத் தன் காதலனிடமுள்ள பேரன்புதான் என்ன! கலங்கல் நீர்கூடத் தேன் கலந்த பாலை வெற்றி கொள்ளச் செய்து விட்டதே!" என்று பூரித்தனர்.

" தாயினும் உரியவள் தலைவி!"

❋

தோழி ஒருபுறமாக நிற்கிறாள். தலைவன் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். இருவர் மனத்திலும் ஒவ்வொரு வகையான உணர்ச்சி ததும்பிக்கொண்டிருக்கிறது.

தலைவன் முகத்தில் களையில்லை; துயரம் படர்ந்திருக்கிறது. ஒளி மழுங்கியிருக்கிறான், மேகத்தால் மறைப்புண்ட சூரியனைப்போல.

ஏதோ குற்றம் செய்துவிட்டுத் தண்டனை பெற்ற கைதியைப்போல் காணப்படுகிறது அவன் நிலை. மன்னிப்புப் பெற யாசித்து நீதிபதியின் இரக்கத்தை எதிர்பார்க்கும் குற்றவாளியைப் போல் தோழியின் முகத்தை நோக்குகிறான். தோழி அவனைக் குற்றவாளியாகவே கொண்டு இரக்கங்காட்டாமல் பேசுகிறாள். இந்த நிலை தலைவனுக்கு ஏற்பட்டது ஏன்?

❋ ❋ ❋

அரசனது அலுவலாகத் தலைவன் வெளியூர் செல்ல நேர்ந்தது. பிரிவு சிலநாள்தான். ஆயினும் தலைவி வாடினாள். அலுவல் முடிந்தவுடனே வந்துவிடுவதாகத் தேற்றிச் சென்றான். பாணனும் உடன்சென்றான். இது தலைவிக்குப் பிடிக்கவில்லை. தலைவன் விரும்பி அழைத்துக்கொண்டு போகும்பொழுது தடுக்கலாமா? பேசாமலிருந்துவிட்டாள். முடிவு என்ன?

பாணன் கூட்டுறவைத் தலைவி எதன்பொருட்டு வெறுத்தாளோ, அது நடந்தேவிட்டது. காதுக்கெட்டிய செய்திகள் அவள் நெஞ்சைத் தொளைத்தன; ஊணின்றி உறக்கமின்றி வாடும்படி செய்தன. தோழியும் அறிந்து துடித்தாள்.

கண்ணுக்கினிய பொருள்களைக் கண்டால் வேட்கை கொள்வது மனத்தின் இயல்பு. வேட்கையை வெல்வது அறிவின் ஆற்றல். இந்த ஆற்றல் உடையவன்தான் தலைவன். ஆயினும் வேட்கை வழியில் அறிவைத் தளர்த்திவிட்டான். இது விதி என்றோ பேதமை என்றோ இங்கு விவாதிக்க முயல்வது வீண் வேலை. முனிவர்களே காமச்சேற்றில் கண்ணிழந்து இறங்கியிருக்கிறார்களே !

தேன் உண்ணும் வண்டு ஒரு மலரில் உட்காருகிறது; தேனைச் சுவைக்கிறது. அத்துடன் நின்றுவிடுகிறதா ? தேன் உண்ணும் வேட்கையில் புதுப்புது மலராய் நாடிச் செல்கிறதல்லவா ? தலைவன் நிலையும் இவ்வாறே ஆயிற்று ! பரத்தையர் மாய இன்பப் படுகுழியில் வீழ்ந்து அறிவைப் பறிகொடுத்தான்.

ஒவ்வொரு நாளும் தலைவனின் செய்திகள் அம்புபோல் வந்து தலைவியின் உள்ளத்தில் ஊடுருவித் தைத்தன. தலைவன் தன்னை வஞ்சிக்கிறான் என்பதைக்காட்டிலும் அவனது பெருமைக்கு இழுக்குத் தேடிக்கொள்ளுகிறான் என்பதை எண்ணியே மனம் புண்ணானாள். பெருங்குடியிற் பிறந்த பெண்ணல்லவா ?

மதுவுண்ட மயக்கில் நிலைகெட்டு நடந்தவன் மறுநாள் மதிபெற்று உணர்வடைவது போல, தலைவன் காம இருள் தெளிந்து கண்விழித்துப் பார்த்தான். மதுவுண்டவன் நேற்றைச் செயலை நினைந்து வெட்குவதுபோல, இவனும் தன் செயலைக் குறித்து நாணினான். தலைவிக்குத் தன்செயல் ஒன்றும் தெரியாது என்னும் கருத்துடன் அவளை நாடி வந்தான், வழியில் வேடிக்கை பார்த்துவிட்டு நேரங்கழித்துப் பள்ளிக்கூடம் வரும் பயந்த மாணாக்கனைப்போல !

பலநாள் கடந்து வந்ததற்காகத் தன்மீது கோபங் கொண்டு தன்னுடன் தலைவி பேசமாட்டாள் என்றுதான்

தலைவன் எதிர்பார்த்தான். ஆனால் தலைவியின் செயல் அவனைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது.

மிகவும் பொறுமையுடன் எதிரில் வந்து நின்று கொண்டு யாரோ ஒரு வழிப்போக்கனிடம் பேசும் வகையில் "எங்கு வந்தீர்கள்?" என்று கேட்டால், யாருக்குத் தான் அது வியப்பையளிக்காது? என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்து நின்றான் தலைவன். குற்றம் செய்துவிட்டுத் தாய் அடிப்பாளோ என்று அவள் முகத்தை ஏக்கத்துடன் நோக்கும் பிள்ளையைப் போன்றிருந்தது அவன் நிலை!

தலைவியின் கேள்வி இயல்பாகவே எழுந்தது. ஆயினும் அது நீதிபதி கேட்பதுபோல் இருந்தது தலைவனுக்கு! குற்றமுள்ள நெஞ்சல்லவா? குறுகுறுப்புடனேயே பேசுகிறான்:

"வீட்டுக்குத்தான் வந்தேன்!"

"வீட்டுக்கா? அப்படியானால் வீட்டிற்குள் போகாமல் என் அறைக்குள் வந்திருக்கிறீர்களே! வழி தவறிவிட்டீர்களோ!"

இப்பொழுதும் தலைவி இயல்பாகத்தான் கேட்டாள். ஆனால் இறுதி மொழிகள் அவன் நெஞ்சில் ஈட்டிபோல் குத்தின. வாழ்க்கை வழியில் தவறிவிட்டவனல்லவா? தலைவி மொழியால் சிறிது தயங்கினும் மறுநொடியே சமாளித்துக்கொண்டு மறுமொழி சொல்கிறான்:

"இல்லை; தெரிந்துதான் வந்திருக்கிறேன்!"

"எதற்காக?"

"இது என்ன கேள்வி? போன அலுவல் முடிந்து விட்டது. உன்னைக் காணவேண்டுமென்று ஆவலாய் வந்தேன்!"

"ஓ! அப்படியா! தங்கள் அன்புக்கு உரியவர்கள் தெரிந்துதான் வந்திருக்கிறீர்களா? அல்லது அவர்கள் வெறுத்து விட்டார்களா?"

"அன்புக்கு உரியவர்களா! யார் அவர்கள்? என்ன சொல்லுகிறாய் நீ?"

"எனக்கு மட்டும் தெரியுமென்று நினைக்க வேண்டாம்! ஊராரெல்லாம் நன்கறிவார்கள்!"

"என்ன அறிவார்கள்?"

"மறைப்பதில் பயனில்லை!"

"ஊரார் என்னென்னவோ உளறுவார்கள். அவற்றை யெல்லாம் மெய்யென்று நம்பி மனந் தடுமாறலாமா?"

"மனந் தடுமாறலாகாதுதான்! ஆனால் வேட்கை வயப் பட்ட மனிதர் பலவீனர்தானே! மனத்தடுமாற்றம் ஏற்பட்டு விடுகிறது! குற்றத்தை ஒளிக்கும்படி கூட இது செய்து விடுவது விந்தையல்லவா?"

"குற்றமிருந்தாலல்லவா ஒளிக்க வேண்டும்!"

"தாங்களும் தங்கள் ஆசைப் பெண்களும் நேற்று ஆற்றில் புது நீரில் விளையாடிக் களித்தீர்கள் என்பது கூடப் பொய்தானே!"

"தடையென்ன?"

"கண்கள் சிவந்திருப்பதற்குக் காரணமென்னவோ?"

"நீர் விளையாடினால்தான் கண்கள் சிவக்குமோ?"

"உண்மையை மறைக்கத் தாங்கள் என்னிடம் முயல லாம். ஊரார் பேசும் அலர்மொழியை மறைக்க முடியாது. சூரியன் ஒளியை மறைக்க முடியுமோ?"

"நான் ஏதோ குற்றம் செய்துவிட்டதாக யாரோ சொன்ன மொழிகளை நம்பி இவ்வாறு பேசுகிறாய். அரசனது

அலுவலாய் நான் சென்றிருந்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

"ஓரேயடியாய் மெய்யை மறைக்கிறீர்கள். தாங்கள் சிறுபிள்ளைகளைப்போல் ஆராய்ந்து பார்க்காமல் பிறர் பழிக்கும் செயல்களிலெல்லாம் மனத்தைச் செல்லவிடுவது நன்றன்று. அது தங்களுக்கு மட்டுமன்று; தங்கள் குடிக்கே இழுக்குத் தரும். தங்களுடைய வீரத்திலும் ஆண்மையிலும் பெருமை கொண்டிருப்போர் தங்கள் செயலைக் கேள்விப்பட்டால் இகழ்ந்து நகைக்கமாட்டார்களோ? தங்களுக்கே வெட்கத்தையுண்டாக்கவில்லையா? தங்கள் செயல் எனக்கு மானக்கேடாய் இருக்கிறது. தங்களைக் காணவும் அருவருப்பாய் இருக்கிறது!"

இவ்வாறு சொல்லிக்கொண்டே தலைவி விரைந்து வேறொரு அறையினுள் சென்று கதவை மூடித் தாழிட்டுக் கொண்டாள். நெடுநேரமாய்த் தேக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் அழுகையாய்ப் பொங்கி வழிந்தோட, மஞ்சத்தில் தொப்பென்று குப்புற விழுந்து செறுமலானாள்.

தலைவியின் பேச்சும் செயலும் சவுக்கடி போன்றிருந்தன தலைவனுக்கு. கோபத்தைக் கொட்டி மொழிந்திருந்தாலும் அவன் திடுக்கிட்டிருக்க மாட்டான். நியாயவாதி போல் தனது குற்றத்தைக் குறிப்பிட்டு அமைதியாய்க் கண்டித்து உரைத்ததுதான், சம்மட்டியால் நெஞ்சில் தாக்கியது போல் அவனைக் கலக்கிவிட்டது. பேசி முடிந்ததும் அவள் வெறுப்புடன் விரைவாய்ப் போய் அறையினுள் நுழைந்து படாரென்று கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொண்டதோ, அவனை அதிர்ச்சியடையச் செய்துவிட்டது.

வெயிலில் நடந்துவந்து வீட்டினுள் நுழைந்ததும் கண்கள் இருண்டுபோய் ஒன்றுந்தோன்றாததுபோல், சிறிது

நேரம் அறிவின் ஒளி மங்கி நிலை கலங்கி நின்றான் தலைவன். பின்னர் ஒருவாறு தெளிந்து என்ன செய்யலாமென்று எண்ணினான். ஒரு வழி தோன்றியது. தோழியிடம் சென்றான். சமய சஞ்சீவி அவள்தானே!

தலைவி தன்னைப் பொருட்படுத்தாமல் பேசியதையும், வெறுத்துப் போய்விட்டதையும் விவரமாகத் தோழியிடம் எடுத்துரைத்தான். "என்னைச் சிறிதுகூட மதிக்கவில்லையே!" என்று ஏக்கந்தேங்கிய குரலில் சொன்னான்! "இவ்வாறு என்னைக் கடிந்துபேசியது தகுமா?" என்று ஒரு கேள்வியைப் போட்டான், தலைவியிடம் குறைகாணும் முறையில். பாவம்! மிகவும் பரிதாபமாய் இருந்தது அவன் நிலை!

* * *

"தங்கள் நாட்டில் நீர் வளப்பம் மிகுதி!......"

தோழி சம்பந்தமில்லாமல் ஏதோ பேசுகிறாளே என்று நினைத்தான் தலைவன். கவலை படர்ந்த அவன் முகத்தில் வியப்பின் அறிகுறி மெல்லெலன அரும்பியது. தோழியின் முகத்தை உற்றுப் பார்த்தான். அறிவொளி வீசும் அவள் முகத்தில் ஆழ்ந்த கருத்துடன் எதையோ தெரிவிக்க விரும்புகிறாள் என்னும் குறிப்பு நிலவியது. கூர்ந்து அவள் மொழிகளைக் கேட்கலானான்.

"பல ஆறுகள் நீர் நிறைந்து ஓடுகின்றன! அல்லவா?...

"ஆமாம்!"

"...எருமைகள் தங்கள் ஊரில் ஏராளம்!"

".........!"

"அவை நீரில் நீந்தியோடிக் களிக்கும்! பார்த்திருப்பீர்களே!"

"உம்!"

"அவை நீரில் மிதந்து நீந்துவது எதுபோல் இருக்கிறது என்று சொல்லலாம்?"

"நீயே சொல்!"

"படகுகள் போல் காட்சி தருகிறதல்லவா?"

"எதற்காக இந்த வருணனை?"

"வருணனையன்று! உண்மையைச் சொன்னேன்!"

"எருமை நீந்துவது உண்மைதான்! 'படகுபோல் காட்சி தருகிறது' என்று சொல்வது வருணனையல்லவா?"

"இருக்கலாம்!"

"அது போகட்டும். நான் சொல்ல வந்தது என்ன! நீ பேசுவது என்ன! எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"தங்களைப் பார்க்கவும் தங்கள் ஊரிலுள்ள இக்காட்சி நினைவில் எழுந்தது! அவ்வளவுதான்!"

"என்னைப் பார்க்கவும் இது தோன்றுவானேன்!"

"ஒரு நாட்டின் இயல்புகள் அந்நாட்டில் வாழ்வோரிடம் படிந்து காணப்படுவது இயற்கையல்லவா?"

"உண்மைதான்! ஆகையால்......?"

"......தங்களைப் பார்க்கவும் இந்த எண்ணம் தோன்றியது!"

"எதையோ மறைத்துப் பேசுகிறாய்!"

"'நீராடும் எருமை பலரும் ஏறுதற்குரிய படகுபோலத் தோன்றும் நீர் வளப்பம் மிகுந்த நாடரே!' என்று அழைக்க விரும்பினேன்! வேறொன்றுமில்லை!"

இவ்வாறு சொல்லிவிட்டுத் தலைவன் முகத்தைக் குறும்புச் சிரிப்புடன் பார்த்தாள் தோழி. தலைவன் சிறிது சிந்தித்தான்.

"ஓ! அப்படியா! புரிந்தது உன் வருணனை! புதை பொருளாக வைத்து எதையேனும் பேசுவது உனக்கு

வழக்கந்தானே! இது புதிதா என்ன! உன் துணைவியைப் போல் வெளிப்படையாகப் பேசிவிடலாமே நீயும்! மூடிப் பேசுவானேன்? பரத்தையர் பலருக்கும் உரியவனாய் ஒழுகுகிறேன் நான்!' இதுதானே உன் வருணனையில் மறைந்துள்ள பொருள்!"

தன் மனக்கருத்தை விரைவில் உணர்ந்து கொண்ட தலைவனது நுண்ணறிவை மனத்துள் வியந்து, புன்சிரிப்புடன் அவனைப் பார்த்தாள் தோழி. தான் கூறியது சரிதானோ என்று கேட்பது போல் தலைவன் தோழியை நோக்கினான்.

"தாங்கள் படபடப்புடன் பேசுகிறீர்கள்!"

"நீயும் உன் துணைவியும் என்னைக் குற்றஞ்சாட்டிக் கண்டித்துப் பேசுவதென்று முடிவுகட்டியிருக்கிறீர்கள்!"

"தலைவி பேசியதில் தவறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே!"

"நீ பேசுவதிலும் தவறில்லை! நான் பேசுவதிலும் தவறில்லை!"

தலைவனின் இகழ்ச்சிமொழி தோழிக்குப் பிடிக்கவில்லை. உருக்கமாகப் பேசலானாள்:

"தலைவரே! தங்கள் செயலைத் தங்கள் மனம் அறியும். உண்மையை ஒளிப்பதில் பயனில்லை. தவறு கண்டதால் கடிந்து பேசினாள் தலைவி. இது சரியே; கடமையுங்கூட. தங்கள் நன்மையைக் கோருபவர்களில் தலைசிறந்தவர்கள் யார்? தங்கள் தந்தையும் தாயும்தான். ஆதலால் தாங்கள் நெறி தவறினால் கண்டித்துத் திருத்துவதற்கு உரிமையுடையவர்கள் அவர்களே! இவை தாங்கள் அறியாதன அல்ல! ஆனால் அவர்களைக் காட்டிலும் தங்களிடம் மிக உரிமையுடையவள் தங்கள் காதலியல்லவா?"

தோழி இவ்வாறு சொல்லிச் சிறிது நிறுத்தினாள். தன் மொழிகளை ஏற்றுக்கொள்ளும் குறிப்புடன் தலைவன் காணப் பட்டமையால் மேலும் பேசலானாள்:

"தலைவியின் வாழ்வு தங்களுடனல்லவா பிணைக்கப் பட்டிருக்கிறது! தங்களுக்கு ஏற்படும் இன்ப துன்பங் களும், புகழ்ச்சி இகழ்ச்சிகளும் அவளையும் சாருமல்லவா? புயற்காற்றில் மரம் அசைந்து அல்லற்படும் பொழுது, அதிற் படர்ந்துள்ள கொடியும் கூடவே துன்புறும் என் பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆகையால் வழிதவறிய தங்கள் செயலைக் கண்டித்துப் பேசுவதில் தங்கள் தாயினும் உரியவள் தலைவி என்பதில் தடையில்லை. அவள் மீது வருத்தப்படுவது சரியாகுமா?"

"தண்புனல் ஆடும் தடங்கோட்டு எருமை
திண்பிணி அம்பியில் தோன்றும் ஊர!
ஒண்டொடி மடமகள் இவளினும்
நுந்தையும் யாயும் கடியரோ நின்னே?"

[தண்புனல் - குளிர்ந்த நீரில்: ஆடும் - முழுகி விளையாடுகின்ற: தடங்கோடு எருமை - வளைந்த கொம்புகளையுடைய எருமை: திண்பிணி - இறுக்கிக் கட்டிய: அம்பியில் தோன்றும் - படகைப் போல் காணப்படுகின்ற: ஊர - மருத நிலத்தலைவனே!; வயலும் வயல் சேர்ந்த இடமும் மருதம் எனப்படும்: ஒள் தொடி மடமகள் - ஒளியுடைய வளையலையணிந்த அழகுடையவளாகிய; இவளினும் - இவளைக்காட்டிலும்; இங்கு, தலைவியைக் குறிக்கிறது: நுந்தையும் யாயும் - உனது தந்தையும் தாயும்; நின்னே - உன்னை: கடியரோ - உம்மிடத்துக் குற்றம் ஏற்பட்டபொழுது கண்டித்துக் கூறுங்கால் கடுமையாய்க் கூற உரியவரோ?; தாய் தந்தையரைக் காட்டிலும் தலைவியே உரியவள் என்பதாம்.]

தோழியின் நட்ப அறிவில் நெருகிடப்பட்டுத் திட்ப மாய் எழுந்த அரிய மொழிகள், தலைவனின் உள்ளத்தில் ஆழப்பதிந்து சிந்தனையைக் கிளறின:

“ஆ! என்ன அறிவுத் தெளிவுடன், எவ்வளவு உயர்ந்த கருத்தைக் காட்டிவிட்டாள்! நம்மை மகனைப் பெற்றவள் தாய்; கணவனாய் உற்றவள் காதலி: இருவரும் பெண்கள்! இவர்கள் நம்மிடம் நெருங்கிய தொடர்புடையவர்களே. ஆனால், யார் மிகத் தொடர்புடையவர்? தாயா? காதலியா?”

“நமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கி வைத்தவள் தாய்; கூடவேவந்து எல்லாவற்றிலும் பங்கு பெறுபவள் காதலி. ஆதலால் நம்மிடம் அதிக உரிமையுடையவள் காதலிதான். இது எவ்வளவு உண்மை! நமது நன்மை தீமைகளைத் தன்னுடையனவாகக் கொள்ளும் காதலி நமது செயலில் வெறுப்புக்கொண்டு கடிந்து பேசியதில் தவறில்லைதான்!”

உண்மையை ஒப்புக்கொள்பவன்போல் தலைகவிழ்ந்திருந்தான் தலைவன்.

"நெல் பொலிக! பொன் சிறக்க!"

❋

"நாம் செய்தது பெருந்தவறு; நம் காதலியின் மனத்தைப் புண் படுத்தக் கூடியது. அப்படியிருந்தும் அதை மறந்து நம்மிடம் அன்பு காட்டுகிறாளே! பழமை போல் - இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சியின் அறிகுறியே இல்லாமல் - சிரித்துப் பேசுகிறாளே! என்ன பெருந்தன்மை!" என்று வியந்து எண்ணுகிறான் தலைவன். தலைவியின் நறுங் குணம் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. மகிழ்ச்சி சுரக்கும் மனத்துடன் தலைவியை ஆர்வத்துடன் பார்க்கிறான்.

"தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து ஒப்புக் கொண்டு விட்டாரே! எவ்வளவு உயர்ந்தவர் இவர்! இதுவே போதும் எனக்கு!" என்று, தன்னைப் பார்க்கும் தலைவனைக் கடைக்கண்ணால் நோக்கிக் களிக்கிறாள் தலைவி.

"தலைவனிடம் தலைவிக்குள்ள காதல் தான் எவ்வளவு! தலைவன் தன் நிலையைப் புலப்படுத்தியதும் கோபமெல்லாம் எங்கேயோ பறந்து விட்டதே! எல்லாவற்றையும் மறந்து விட்டாளே!" என்று வியப்புடன் இருவரையும் மாறி மாறிப் பார்த்து மனம் பூரிக்கிறாள் தோழி.

கூடத்திலுள்ள ஓர் மஞ்சத்தில் அமர்ந்திருக்கிறான் தலைவன். காதல் பொங்கும் களி முகத்துடன் அருகில் இருக்கிறாள் தலைவி. புன்முறுவல் பூத்த முகத்துடன் சிறிது எட்டவிருக்கிறாள் தோழி. ஒருவரும் வாய் திறந்து பேசவில்லை; கண்களாலும் முகத்தினாலும் தங்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பவன் போல் தலைவன் பேசத் தொடங்கினான்:

தலைவன் :—என்னைப்பற்றி என்னனென்னவோ நினைத்திருப்பீர்கள் ! இல்லையா ?

இருவரையும் பொதுவாக நோக்கியே இக்கேள்வியைக் கேட்டான். ஆனால், தலைவியைக் குறிப்பாகப் பார்த்தான். அவள் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. மறு மொழி பேசவில்லை. தோழி குறும்புச் சிரிப்புடன் கூறுகிறாள்.

தோழி :—ஆமாம் ! எவ்வளவோ நினைத்தோம் !

தலைவன் :—என்னென்ன நினைத்தீர்கள் ?

தோழி :—'நம் தலைவர் வீரர் ! அரசருடைய அலுவலாக வெளியூர் சென்றிருக்கிறார் ! வேறு காரியம் அவருக்கில்லை ! பொய் புகல மாட்டார் !...' இப்படியெல்லாம் எண்ணினோம்.

தலைவன் :—(தலைவியைப் பார்த்து) பார்த்தாயா ! உன் தோழி என் செயலைக் குத்திக் காட்டுகிறாள் ! நான்தான் உண்மையை ஒப்புக்கொண்டு விட்டேனே !

தலைவி :—உண்மைதான் !

தோழி :—தங்கள் காதலி தங்களைத்தான் ஆதரிக்கிறாள் ! என்னவிருந்தாலும் நீங்கள் இருவரும் ஒன்றல்லவா ! (சிரிக்கிறாள்.)

தலைவன் :—ஒன்றுவதற்கு நீதானே காரணம் ! (தலைவியைப் பார்த்து) என்ன நான் சொல்வது !

தலைவி :—சந்தேகமென்ன !

தலைவன் :—உன்னை ஆதரிக்கிறாள் இவள் ! இப்பொழுது நீங்கள் இருவரும் ஒன்று !

தோழி :—அப்படியே இருக்கட்டும் ! அதனால் ?

தலைவன் :—எனக்கு ஒரு காரியம் எளிதாகி விட்டது !

தோழி :—என்ன ?

தலைவன் :—உங்களில் யாரைப் பாராட்டுவது என்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன் ! இப்பொழுது யாரைப் பாராட்டினால் என்ன !

தோழி :—பாராட்டுவதா ? எதற்கு ?

தலைவன் :—என்னைத் தூய்மைப் படுத்திவிட்டீர்களே, அதற்குத்தான் !

தோழி :—எம்பெருமான் ! தங்களைத்தான் நாங்கள் பாராட்ட வேண்டும் ; பாராட்டுகிறோம் !

தலைவன் :—என்ன !

தோழி :—மக்கள் அறியாது தவறு செய்யலாம் ; அது இயற்கை. 'யானைக்கும் அடி சறுக்கும்.' ஆனால், தவறு என்று கண்டதும் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். அது தான் பெருந்தன்மை. ஆண்மை என்று கூட அதைச் சொல்லலாம். ஆண்மையும், பெருந்தகைமையும் உடைய தங்களைப் பாராட்டுவதில் வியப்பில்லையல்லவா ?

தோழியின் மொழிகள் தலைவனுக்கு மிக்க இன்பத்தை யளித்தன. 'எவ்வளவு உயர்வாகப் பேசுகிறாள் இவள் !' என்று எண்ணினான். களிப்புடன் தலைவியைப் பார்த்தான். தோழியின் மொழிகளை ஆமோதிக்கும் பான்மையில் அவள் சிரித்த முகத்துடன் தலை நிமிர்ந்து தலைவனை நோக்கினாள்.

தலைவன் :—என்றுமில்லாத எக்களிப்பில் இறுமாந்து இருக்கிறது என் உள்ளம். இதே இன்பத்தில் என்றும் திளைத்திருப்பேன். தடையில்லை. தூய பாலின் சுவையை அறிந்த பின்பும் புளித்த கள்ளை நாடுவரோ ?

தோழி :—எம்பெருமானின் மொழிகள் மகிழ்ச்சியைத் தருகின்றன !

தலைவன் :—அஃதிருக்கட்டும். என் கேள்விக்கு விடை சொல்லவில்லையே ! (தலைவியைப் பார்த்து) நீயாவது சொல் !

தலைவி :—தோழியே தெரிவிப்பாள் !

தோழி :—நாங்கள் என்ன எண்ணிக் கொண்டிருந்தோம் என்பதுதானே தங்கள் கேள்வி ?

தலைவன் :—ஆமாம் !

தோழி :—தலைவியைப் பற்றித் தெரிவிக்கிறேன். அவள் அருங்குணம் தங்களுக்குத் தெரியும். தங்கள் செயலால் தங்கள் மீது வெறுப்புக் கொள்ளலாம். ஆனால், தனது இயற்கைப் பெருந்தன்மையால் அங்ஙனம் செய்யவில்லை. தாய் என்று சொல்லத்தகும் தன்மையில் உயர்ந்து விளங்கினாள். உள்ளத்தின் அடியில் தங்களைப் பற்றிய துயரம் உறுத்திக் கொண்டிருந்தாலும் அதைப் பாராட்டாமல் இல்லறத்திற்கு வேண்டியவற்றையே எண்ணி ஒழுகி வந்தாள் !

தலைவன் :—அப்படியென்றால் ?

தோழி :—'நாட்டைக் காக்கும் பொருட்டு அரசன் வாழ்க ! விருந்தினரை உபசரிக்கும் பொருட்டு நெல் மிகுதியாய் விளைக ! இரவலர்க்கு ஈதற் பொருட்டுச் செல்வம் செழிக்க !' என்று இவற்றையே விரும்பி ஒழுகினாள் ! வேறொன்றும் நினைக்கவில்லை.

தலைவன் பெருமையுணர்ச்சியுடன் தலைவி பக்கம் திரும்பினான். அவள் நகை முகத்துடன் கடைக்கண்ணால் பார்த்தாள்.

தலைவன் :—அப்படியா ! நீ ?

தோழி :—நானா ?... நான்...! (சிரித்துக்கொண்டு தலை கவிழ்ந்தாள்)

தலைவன் :—தயங்காமல் சொல் ! உன் மொழிகளைக் கேட்பதில் எனக்கு என்றும் விருப்பந்தான். ஆழமான கருத்தை வைத்துப் பேசும் உன் வல்லமை எனக்கு மிகவும்

பிடித்திருக்கிறது. இப்பொழுதும் அப்படித்தானே பேசப் போகிறாய்!

தோழி :—(தலைவியைப் பார்த்து) உன் காதலரின் திறமையைப் பார்த்தாயா! நான் சொல்லப் போவதை முன்னாலேயே அறிந்து சொல்லுகிறார்!

தலைவி :—(சிரித்துக்கொண்டு) இத்திறமையினால் உன் வேலை எளிதாக முடிந்திருக்கிறதல்லவா?

தோழி :—தடையென்ன!

தலைவன் :—என்னைப்புகழ்வதில் நீ சொல்லப்போவதை மறந்து விடாதே! சொல்!

தோழி :—'தலைவர் வாழ்க! பாணனும் வாழ்க!' என்று நானும் என்னைச் சேர்ந்தவர்களும் விரும்பினோம். அவ்வளவுதான்!

தலைவன் :—பாணனும்!... இவன் ஏன்? நீ முழுவதும் தெரிவிக்கவில்லை! மறைக்காமற் சொல்!

தோழி :—(தலைவியைப் பார்த்து) உன் காதலரிடம் ஒன்றையும் ஒளிக்க முடியாது! (தலைவனைப் பார்த்து) இதோ தெரிவித்து விடுகிறேன்! காஞ்சிப் பூக்களும் மீன்களும் மிகுதியாக உண்டாகும் ஊரராகிய தங்களுக்கும், தங்கள் ஒழுக்கத்திற்குத் துணையாயிருக்கும் பாணனுக்கும் தீங்கு வரும் என்று அஞ்சி இவ்வாறு விரும்பினோம்!

'வாழி ஆதன் வாழி அவினி!
நெற்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!'
எனவேட் டோளே யாயே; யாமே
'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க' எனவேட் டோமே.

[ஆதன் அவினி, புலவர்கள் புகழ்ந்து பாடிய பாடல்களை யுடைய சிறந்த சேர மன்னன்; பொலிக - விளங்குக: சிறக்க - மிகுதியாகுக: வேட்டோள் - விரும்பினுள்: யாய் - தாய்: இங்குத் தலைவியைக் குறிக்கிறது; தலைவனேடு பிணங்குவதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தும் அவற்றை மனங்கொள்ளாத சிறப்பினுல் இவ்வாறு சொல்லப்பட்டாள்: யாம் - நாங்கள்: தோழி, மற்றத் தோழியரையும் உள்படுத்தி இங்ஙனம் சொன்னுள்: நனை - அரும்பு: காஞ்சி - ஒருவகை மரம்: சினை - முட்டை: யாணர் ஊரன் - புது வருவாயுள்ள ஊரையுடையோன்; மருத நிலத்தலைவன்; வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனப்படும்: வேட்டோம் - விரும்பினேம்.]

தலைவன்:—(தலைவியைப் பார்த்து) நான் நினைத்தபடியே உன் தோழி பேசி விட்டாள் பார்! குல மகளிரைப் போல் பொது மகளிரையும் ஒரு தன்மையாகக் கொண்டு ஒழுகுபவன் நான் என்பதை, 'பூவும் மீனும் ஒக்க விளையும் ஊரன்' என்பதில் மறைத்து வைத்திருக்கிருள்!

தோழி:—என்னை மன்னிக்க வேண்டும். கேட்டதால் இதைச் சொன்னேன்! தாங்கள் இப்பொழுது அப்படியில்லை! தலைவியின் கற்புச் சுடரில் தங்கள் மனம் புடம் போடப்பட்டு மாசு நீங்கி ஒளிர்கிறது!

தலைவன் தோழியின் மொழிகளை முழு மனத்துடன் ஏற்றுக்கொண்டு காதல் ஒளி வீசும் கண்களால் தலைவியைப் பார்த்தான். பொங்கிய உவகை கண்களில் பொழிய முறுவல் பூத்த முகத்துடன் தலைவி தலைவனை நோக்கினுள். ஒரு நொடி இருவர் கண்களும் ஒன்றையொன்று விழுங்கி இன்ப வுலகக் காட்சியைக் கண்டன. மறு நொடி இருவரும் நன்றியுணர்ச்சியுடன் தோழியை நோக்கினர். அவள் முகம் மலர்ந்து விளங்கியது!

—(முற்றும்)—

சேர்க்கை

ஐங்குறுநூறு

❋

இலக்கிய வெள்ளம் பெருகுவதற்கு இனிய ஊற்று, காதலும் போரும் ஆகும். இவற்றை ஆணி வேராகக்கொண்டே பழைய தமிழ் இலக்கியங்களெல்லாம் தோன்றியுள்ளன. காதலை அகமென்றும், போரைப் புறமென்றும் தமிழ் நூல்கள் கூறும். காதல், உள்ளத்தில் நிகழ்வதால் அதனை அகமென்றும், போர் வெளியில் நிகழ்வதால் அதனைப் புறமென்றும் கூறியுள்ளது எவ்வளவு பொருத்தமும் கருத்தும் உடையதாயிருக்கிறது!

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பவை பழைய தமிழ் நூல்கள்; கடைச்சங்கப் புலவர்களால் தொகுக்கப் பெற்றவை. எட்டுத் தொகையினுள் அகப்பொருளைப் பற்றிக் கூறும் நூல்கள் ஐந்து. அவ்வைந்தனுள் ஒன்று ஐங்குறுநூறு.

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களை விளக்கும் குறைந்த அடிகளையுடைய நூறு நூறு பாக்களைக் கொண்டுள்ளதால், இந்நூல் ஐங்குறுநூறு என்னும் பெயர் பெற்றது. 'இது சொற்சுவை பொருட்சுவைகளில் சிறந்தது; பொருள்களின் இயற்கையழகையும், தமிழ் மொழியின் இனிமையையும் நன்கு தெரிவிப்பது' என்று இந்நூலைப் பதிப்பித்துள்ள **மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்** தமது முன்னுரையில் தெரிவித்துள்ளார்கள்.

மருதத்திணை **ஓரம்போகியாரா**லும், நெய்தல், திணை **அம்மூவனா**ராலும், குறிஞ்சித்திணை **கபிலரா**லும், பாலைத்திணை **ஓதலாந்தையாரா**லும், முல்லைத்திணை **பேயனா**ராலும் பாடப்பட்டுள்ளன. இந்நூலைத் தொகுத்த புலவர், **புலத்துறை முற்றிய கூடலூர்கிழார்**; தொகுப்பித்த மன்னர், **யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையார்.**

திணை என்பது ஒழுக்கம். அன்பால் ஒன்றுபட்ட தலைவன் தலைவியரது அகவொழுக்கமே அகத்திணை என்பது. தலைவன் தலைவியர், ஊழ்கூட்டி வைக்கக் கூடுதல் குறிஞ்சி; பிரிதல் பாலை; பிரிந்தவழி ஆற்றியிருத்தல் முல்லை; ஆற்றாமல் இரங்குதல் நெய்தல்; பிரிந்தது காரணமாக ஊடுதல் மருதம். இத்திணைகள் ஒவ்வொன்றும் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு, காதலரது அன்பின் மாட்சி தோன்ற, பற்பல செய்திகள் புலவர்களால் புனைந்துரைக்கப்படும். அவை ஆழமும் நுட்பமும் கொண்ட அரிய கருத்துக்களுடன் மிளிரும்; சொல்லோவியங்களாய்க் காட்சி தரும்.

இத்தகைய செய்யுட்களில் ௨௯௫, ௧௯௫, ௨௯௪, ௫௨௨, ௧௮௫, ௪௪௫, ௪௭௯, ௪௮௯, ௪௯௨, ௨௦௫, ௯௮, ௧. எண்ணுள்ளவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

Printed at the City Press, & Published by N. M. Mani at Mani Mandram, Madura Road, Trichinopoly.

பிரகாசத்திலும், உறுதியிலும், காந்தியிலும், மற்ற
வைரங்களுக்கு முன் நிற்கிறது.

செமந்தகா

வைரங்கள்

ரிஜிஸ்டர் பெயர் நெ. 11770 ரிஜிஸ்டர் குறி நெ. 11768



தந்தி விலாசம்: செமந்தகா, திருச்சி.

உற்பத்தியாளர்:

மோதி ரங்கய்ய செட்டியார் சன்

நகை வியாபாரம்

திருச்சிராப்பள்ளி.